1279

1259

NEW METHOD
TAMIL READER

BOOK V

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1939
MADRAS

BY

Vidwan A. M. KULANDAI

1269

PUBLISHERS

Sivalinga Vilas Book Depot

ERODE

1939

புது முறைத்

தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1939
MADRAS

வித்துவான்
A. M. குழந்தை
எழுதியது.

1249
1284
494 81486

A. வேலாயுதம்
சிவலிங்க விலாஸ் புத்தகசாலை
ஈரோடு
1939

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 6 அணா

FIRST EDITION 1939

PRINTED AT THE LIBERTY PRESS, MADRAS.

முகவுரை

'புது முறைத் தமிழ் வாசகம்' என்னும் பெயர் கொண்ட இந்நூல் வரிசை, அரசாங்கத்தார் சமீபத்தில் வெளியிட்ட பாடதிட்டத்தின்படி (Syllabus) எழுதப்பட்டது. காலத்திற்கு ஏற்ற பலவகைக் கைத்தொழில்கள் பற்றிய பாடங்களும், சுகாதார பாடங்களும், பிள்ளைகட்குரிய தோட்டவேலை முதலியனவும், பள்ளிக்கும் வீட்டுக்கும் உள்ள சம்பந்தம் உணர்த்தும் பாடங்களும், தேச பக்தி, ஊக்கம், உழைப்பு, தமிழ்ப் பற்று இவற்றை ஊட்டும் எளிய பாடங்களும், பிறவும் இந்நூல் வரிசையுள் எழுதப்பட்டுள்ளன.

பாரதியார் போன்ற சிறந்த புலவர்களுடைய, எளிய நடையில் அமைந்துள்ள பாடல்கள் இந்நூல்களில் தக்க இடங்களில் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. விஷயங்களை விளக்கும் படங்கள் போதுமான அளவு தரப்பட்டுள்ளன.

இந்நூல், மாணவ மாணவிகட்கு நல்ல தமிழ் அறிவையும், உலக ஞானத்தையும் ஊட்டி, அவர்களது எதிர்கால வாழ்க்கையைச் சிறப்பிக்கும் என்பது எனது நம்பிக்கை.

சித்தோடு }
5—11—39. }

A. M. குழந்தை

பொருள் அடக்கம்.

எண்	விஷயம்			பக்கம்
1.	நமது தாய் மொழி	....	....	1
2.	கதைப் பாடம்	....	....	6
3.	கடிதங்கள்—I	....	....	9
4.	ஓவியப் புலவர்—இரவிவர்மா	....	....	16
5.	செந்தமிழ் நாடு	....	....	21
6.	சுப்பிரமணிய பாரதியார்	....	....	24
7.	நவராத்திரி விழா	....	....	29
8.	மேட்டூர் அணைக்கட்டு	....	....	33
9.	சுவாமி விவேகானந்தர்	....	....	37
10.	எனது பயன்	....	....	43
11.	பத்திரிகைப் படிப்பு	....	....	45
12.	பத்திரிகைச் செய்திகள்	....	....	50
13.	திருவிதாங்கூர்ச் சமஸ்தானம்	....	....	54
14.	எழுதும் திறமை	....	....	60
15.	இராஜா இராம் மோஹனராய்—பாட்டு		...	68
16.	செய்யுளும் வசனமும்	...	....	71
17.	நீர்ப் பயணம்	....	....	74
18.	கடிதங்கள்—II	....	....	80
19.	தந்தை யுயிர் காத்த மைந்தன்—பாட்டு		....	85
20.	கட்டுரை எழுதுதல்	....	....	90
21.	பெரியோர் உரை நடை	....	....	93
22.	சாரணச் சிறுவர்	....	....	97
23.	அயல் நாட்டுத் தமிழ்ப் புலவர்	....	....	101
24.	குமண வள்ளல்	....	....	107
25.	செய்யுட் பாடம்	....	....	112

புது முறைத்

தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1. நமது தாய்மொழி

தாய்மொழி	புலவர்	ஐங்குறு நூறு
பாஷைகள்	இராமநாதபுரம்	புறநானூறு
விரிந்து	திருநெல்வேலி	அகநானூறு
பெரியபுராணம்	கம்பராமாயணம்	குறுந்தொகை
அருட்பாடல்	தமிழ்ச்சங்கம்	நற்றிணை
தேவாரம்	தொல்காப்பியம்	நன்னூல்
திருமுறைகள்	சிலப்பதிகாரம்	பவணந்திமுனிவர்
ஓதுவார்	பதிற்றுப்பத்து	பிழையற
ஆதரித்தனர்	நால்வடிவில்	ஊக்குவாளாக

1. தமிழ் நமது தாய் மொழி. நம் தாயார் நமக்குத் தமிழையே பேசக் கற்பித்தார். அவர் நம்மிடம் பேசுவதும் தமிழே. ஆதலால், தமிழ் நமது தாய்மொழி எனப்படும். நம் வீட்டில் உள்ளவர் எல்

லோரும் பேசுவதும் தமிழே. பிற பாஷைகளைப் பேசுவோர் தமிழ் கற்பதும் உண்டு. அவர்கட்குத் தமிழ் தாய்மொழி ஆகாது.

2. நமது மொழி தமிழ். தமிழ் மொழியைப் பேசுவோர் தமிழர் ஆவர். தமிழர் வாழும் இடம்-தமிழ் வழங்கும் இடம் தமிழ்நாடு எனப்படும். பண்டைக்காலத்தில் தமிழ்நாடு தெற்கே விரிந்து இருந்தது. அப்பாகம் கடலுள்மூழ்கிவிட்டது. இப்போது மேற்கே உள்ள மலேயாள நாடு ஒரு காலத்தில் தமிழ் ஆட்சி பெற்ற இடமாக இருந்தது. அங்குத்தான் பழைய சேர அரசர்கள் சேரநாட்டை ஆண்டு வந்தார்கள். பழைய சேரநாடு இப்போது மலேயாள நாடாக இருக்கிறது.

3. தமிழ் மொழி சேர, சோழ, பாண்டிய அரசர்களால் பாதுகாக்கப்பட்டது; வளர்க்கப்பட்டதும் ஆகும். சோழநாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் கொண்ட நிலப்பாகம். இதனை ஆண்டவர்கள் சோழ மன்னர்கள். சோழ அரசர் தமிழை வளர்த்தனர்; தேவாரத் திருமுறைகளை ஒழுங்குபடுத்தினர்; கோவில்களில் ஓதுவாரை வைத்து அருட் பாடல்களைப் பாடச் செய்தனர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். கம்பராமாயணம், பெரிய புராணம் முதலிய தமிழ் நூல்கள் சோழர் சமஸ்தானப் புலவர்கள் பாடியவையே.

4. பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் கொண்டது. பாண்டியரே தமிழ்ச் சங்கம் ஒன்றை மதுரையில் வைத்து நடத்திப் புகழ் பெற்றவர். பாண்டியர், தம் உயிரினும் பெரிதாகத் தமிழைப் போற்றிப் பாதுகாத்தனர். இன்றுள்ள பழைய தமிழ் நூல்கள் யாவும் 'சங்க நூல்கள்' என்றே சொல்லப்படும். சங்கம் நடத்திய பெருமை பாண்டியர்க்கே உரியது.

5. கோவலன்-கண்ணகி வரலாறு கூறும் சிலப்பதிகாரம், சேர அரசர்களின் புகழைப் பாராட்டும் 'பதிற்றுப்பத்து' முதலிய தமிழ் நூல்கள் சேரநாட்டில் தோன்றியவை. இவை அல்லாமல் நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்கள் பாடிய தனிப்பாடல்கள் மூன்று நாடுகளையும், மூவகை அரசர்களையும் பற்றியனவாக இருக்கின்றன. அவை ஒவ்வோர் இனப் பாடல்களாகத் திரட்டப்பட்டு நூல் வடிவில் இருக்கின்றன. அவை, புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு முதலியனவாம்.

6. இவை எல்லாம் செய்யுள் நூல்கள். இவற்றைப்போலவே தமிழ் இலக்கண நூல்களும் பல இருந்தன. அவற்றுள் அழிந்தன போக இன்று இருப்பவை சில. அவற்றுள் மிகச் சிறந்தவை தொல்காப்பியர் செய்த தொல்காப்பியம், பவணந்தி முனிவர் செய்த நன்னூல் என்பன.

7. பிள்ளைகளே, நமது தாய்மொழி தோன்றிப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் பழமையும், பெருமையும் சொல்லுந்தரமன்று. அது பெற்றுள்ள நூல்களோ பல. அவற்றைத் தமிழராகிய நீங்கள் படித்தல்வேண்டும்; நம் முன்னோர் வரலாறுகளை அவற்றின்மூலம் அறிதல் வேண்டும். நீங்கள் தமிழைப் பிழையறப் பேசவும், எழுதவும், படிக்கவும் நல்ல பயிற்சி பெறவேண்டும். தமிழ்த்தாய் உங்களை ஊக்குவாளாக!

கேள்விகள்

1. சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடுகள் எவை?
2. ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய தமிழ் நூல்கள் எவை?
3. தனிப்பாடல்களைக் கொண்ட நூல்கள் எவை?
4. 'சங்கம்'—யாது? சங்க நூல்கள் எவை?
5. தமிழ் இலக்கண நூல்கள் எவை?

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை:—
   (அ) தமிழ் ——— ப் பேசுவோர் ———.
   (ஆ) தமிழ் மொழி ——— ——— ——— அரசர்களால் ———.
   (இ) பாண்டியர், தம் ——— பெரிதாகத் ——— ——— ——— ப் பாதுகாத்தனர்.
2. சமஸ்தானம், ஓதுவார், அருட்பாடல், புலவர்—ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியத்துள் வைத்து எழுதுக.
3. இப்பாடத்தின் இரண்டாம் பாராவில் வந்துள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்து எழுதுக.
4. (அ) அப்பாராவில் உள்ள வாக்கியங்களைத் தனித்தனியாக எழுது.

(ஆ) ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறுக.

5. அவன் வந்தான
எவன் போனான்
இராமன் போனான்
கோபாலன் வந்தான்
} இவற்றின் கடைசியில் இடத் தக்க குறிகளை இடுக.

6. 2-ம் பாராவில் வரும் பெயர்ச்சொற்களில் ஒருமை, பன்மைகளை எழுது.

இலக்கணம்

1. திணை: பெயர்ச் சொற்களுள் இந்திரன், திருமால், சிவன், சரஸ்வதி முதலிய தேவர் பெயர்களும், இராமன், சம்பந்தன், பொன்னன், வள்ளி முதலிய மனிதர் பெயர்களும் **உயர் திணை** எனப்படும். (உயர் திணை உயர்வாகிய குலம்). மற்ற விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலிய உயிர் உள்ளவையும், உயிர் இல்லாத மலை, மண், ஆறு முதலியவையும் அஃறிணை (உயர்வு அல்லாத குலம். குலம் - கூட்டம்) எனப்படும். ஆகவே, பெயர்ச் சொல் உயர் திணை, அஃறிணை என இருவகைப்படும்.

2. பால்:

(அ) இந்திரன், சுந்தரன் — ஆண்பால்
இந்திராணி, சுந்தரி — பெண்பால்
அரசர், அவர்கள் — பலர்பால்
} உயர் திணை

(ஆ) எலி, கிளி, மலை — ஒன்றன்பால்
எலிகள், மலைகள் — பலவின்பால்
} அஃறிணை

பால்—பிரிவு. முதல் மூன்றும் உயர் திணையைச் சேர்ந்தவை. அடுத்த இரண்டும் அஃறிணையைச் சேர்ந்தவை.

3. எண்: இந்த 5 பால்களுள்,

(அ) ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்—ஒருமை எண். (ஒன்றைக் குறிப்பது)

(ஆ) பலர்பால், பலவின்பால்—பன்மை எண். (பலவற்றைக் குறிப்பது)

2. கதைப் பாடம்



எதிர்ப்பக்கத்தில் உள்ள படங்களைப் பார்த்துக், கீழ்க்கண்ட சொற்களின் உதவிகொண்டு கதை எழுதுக. அக் கதைக்கு உன் விருப்பம் போல் தலைப்புக் கொடு.

சிப்பாய்	களைப்பு	மூர்ச்சை
பிரயாணம்	தண்ணீர் கொடுத்தல்	இளநீர்
வனம்	தூக்கிச் செல்லல்	செய்நன்றி
குரங்கு	கடுவெயில்	வீண்போகாது

கேள்விகள்

1. சிப்பாய் எங்கே சென்றான்?
2. வழியில் எதைக் கண்டான்?
3. அவன் என்ன செய்தான்?
4. செல்லும்போது அவனுக்கு என்ன உண்டானது?
5. அவனுக்கு யார்? என்ன கொடுத்தார்?
6. இக் கதையால் நீ அறிந்துகொண்ட நீதி யாது?

குறிப்பு:—இங்ஙனமே படம் பார்த்துப் பல செய்திகளை அறியப் பழகு.

பயிற்சி

1. கண்ணன், வள்ளி, வரதன், வண்டி, மாடுகள், அரசர்கள் வீரர்கள், எலிகள், வீடு, தங்கை, அண்ணி—இவற்றுள் உயர்திணைச் சொற்கள் எவை? அஃறிணைச் சொற்கள் எவை? எழுது.
2. மேல்சொன்ன பெயர்களில் ஆண்பால் சொற்கள், பெண் பால் சொற்கள், பலர்பால் சொற்கள், ஒன்றன்பால் சொற்கள், பலவின்பால் சொற்கள்—இவற்றை எடுத்து எழுது.

3. மேல் சொன்னவற்றுள் ஒருமை எவை? பன்மை எவை?

4. வரதன் வண்டியை ஓட்டினான்—இதில் உள்ள எழுவாய்—பயனிலை—செயப்படு பொருளை எழுது.

5. இராமன் வந்தான், வள்ளி வருவாள், கண்ணன் படிக்கிறான், எலி ஓடுகிறது, பூனை பால் குடித்தது, கிளி பேசும்—இவற்றுள் வரும் வினை முற்றுகள் எவ்வெக்காலத்தன?

6. அவன் என்னைப்பார்த்து ஐயா நீங்கள் வந்தது சந்தோஷம் என்று சொன்னான்—இதில் தக்க இடங்களில் தக்க குறிகளை இடு.

இலக்கணம்

இடம்: நான் "இராமா, நீ முருகனைப் பார்த்தாயா?" என்றேன்.—

இவ்வாக்கியத்தில்,

நான் —பேசியவன்

நீ —முன்னிலையில் இருப்பவன் (கேட்பவன்)

முருகன்—பேசப்பட்டவன்.

பேசுவோன் இடம் —**தன்மை இடம்**
முன் நிற்பவன் இடம்—**முன்னிலை இடம்**
பேசப்படுபவன் இடம்—**படர்க்கை இடம்**
} எனப்படும்.

நான், யான், நாங்கள், யாங்கள், நாம்—தன்மைப் பெயர்கள்.

நீ, நீர், நீவிர், நீங்கள் —முன்னிலைப் பெயர்கள்.

இராமன், சீதை, எலி, எலிகள்
முதலிய எல்லாப் பெயர்களும் } —படர்க்கைப் பெயர்கள்.

3. கடிதங்கள்—I

நான்மணிக்கடிகை | சிரஞ்சீவி | வீண்பொழுது
இருந்திருந்தாற் போல் | ஆசீர்வாதம் | திரிகடுகம்
கொட்டு கொட் டென்று | சௌகரியம் | பவுண்டன்பேனா
உள்வாய்க்குட்டை | மார்க்கு | நமஸ்காரம்
நேற்று முன் தினம் | காற்றோட்டம் | புகையிலை
லிங்கிசெட்டி தெரு | வக்கீல் | ஏதாகிலும்
ஹைக்கோர்ட்டு | நாளைமறுநாள் |

1. தந்தை மகனுக்கு எழுதின கடிதம்

9. லிங்கி செட்டி தெரு,

நலம். சென்னை,

15—7—40.

செல்வச் சிரஞ்சீவி சுந்தரத்துக்கு, அநேக ஆசீர்வாதம். நான் நேற்று முன் தினம் காலையில் இங்கு சௌகரியமாக வந்து சேர்ந்தேன்; புகை வண்டியில் கூட்டம் அதிகமாக இருந்தது. ஆகையால், சரியாகத் தூங்க முடியவில்லை; நேற்று முழுவதும் ஓய்வெடுத்துக்கொண்டேன்; அதனாலேயே நேற்றுக் கடிதம் எழுத முடியவில்லை.

இங்கு உன் அண்ணன் சுகமாக இருக்கிறான்; கவனமாகப் படித்துவருகிறான்; சென்ற வாரம் நடந்த வகுப்புப் பரீக்ஷையில் நல்ல மார்க்கு வாங்கியிருக்கிறான்; உன்னை நன்றாகப் படிக்கும்படி

சொன்னான். அவன் இருக்கும் அறை காற்றோட்ட முள்ளவசதியான இடம்; ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் இருக்கிறது. அவனுடன் இருக்கும் மற்ற இருவரும் மிகவும் நல்ல பிள்ளைகள். மூவரும் உடன் பிறந்தார் போல் இருந்து வருகிறார்கள்.

வக்கீல் வேலூருக்குச் சென்று விட்டார் ; நாளை மறுநாள் தான் வருவாராம். நான் வர இன்னும் ஒரு வாரம் ஆகும். நீ வீண் பொழுது போக்காமல் நீதி நூல்களையும், பத்திரிகைகளையும் படித்துவா. உன் அண்ணனிடம் நான்மணிக்கடிகையும், திரிகடுகமும் இருக்கின்றன. நான் வரும்போது கொண்டு வருகிறேன்; நீ சொல்லியபடி உனக்குப் பவுண்டன்பேனாவும், குடையும் வாங்கி வருகிறேன்.

இவ்வூரில் இப்பொழுது மழை அதிகம். மழை இருந்திருந்தாற்போல் வந்து கொட்டுகொட்டென்று கொட்டுகிறது. வெளியில் போகவே முடியவில்லை. தாயாரை வீட்டைச் சாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளச் சொல். நீ தினமும் பள்ளியிலிருந்து வந்ததும் தோட்டத்துக்குப் போய்க் கவனித்துவா.

மகன் விலாசம் :—

அ. சுந்தரம்,
குளத்துப்பாளையம்,
ஊஞ்சலூர், (S. I. Ry)
(வயா) ஈரோடு.

இப்படிக்கு,
உன்னிடம்
அன்புள்ள தந்தை,
அருணாசலக் கவுண்டர்.

2. மகன் தந்தைக்கு எழுதின கடிதம்

நலம்.

குளத்துப்பாளையம்,
ஊஞ்சலூர்,
17—7—40.

அன்பார்ந்த தந்தை அவர்களுக்கு, நமஸ்காரம். 15-7-40-ல் தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. அண்ணன் அதிக மார்க்கு வாங்கினதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். என் வந்தனத்தை அண்ணனுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நான் வீண் பொழுது போக்காமல் ஓய்வு நேரங்களில் நீதி நூல்களையும், பத்திரிகைகளையும் படித்துக்கொண்டு தான் வருகிறேன்; 'இரண்டு மூன்று நாளாய்ச் சென்னையில் அதிக மழை' என்பதைப் பத்திரிகையில் பார்த்தறிந்தேன். நான் தினந்தோறும் பள்ளியிலிருந்து வந்ததும் தோட்டத்துக்குப் போய் வருகிறேன். நேற்று உள்வாய்க்குட்டையில் புகையிலை நாற்று நட்டுவிட்டார்கள். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.

தாங்கள் வரும்போது கட்டாயம் அவ்விரு நூல்களையும் எடுத்துவர வேண்டும்; இன்னும் வேறு ஏதாகிலும் கதை நூல்கள் இருந்தாலும் கொண்டு வாருங்கள்; பவுண்டன் பேனா வாங்கிவர மறந்து விடாதீர்கள்.

நீங்கள் புறப்படும் தேதியைக் குறித்துக் கடிதம் எழுதும்படி அம்மா விரும்புகிறுர். உடனே பதில் எழுதுவீர்கள் என்று நம்புகிறேன்.

தந்தை விலாசம்:—
திரு. அருணுசலக் கவுண்டர்.
c/o. அண்ணுமலை,
B. A. வகுப்பு மாணவன்,
9. லிங்கி செட்டி தெரு,
சென்னை.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள மகன்,
சுந்தரம்.

3. நண்பனை விருந்துக்கு அழைத்தல்

சுந்தரமூர்த்தி	நம்புகிறேன்
தமிழகம்	ஜெயில்ரோடு
தேவாரம்	அனுமதி

15. ஜெயில்ரோடு,
கோயமுத்தூர்,
15-8-40.

அன்புள்ள வடிவேல்,

நாங்கள் உப்பிலி பாளையத்தில், அழகான புதிய வீடு ஒன்று கட்டி முடித்துள்ளது உனக்குத் தெரியும் அல்லவா? நாளை இரவு அந்தப் புதிய வீட்டில் ஒரு விருந்து நடத்தப் போகிறோம். விருந்தின் நேரம் 8 மணி. விருந்துக்குப் பிறகு 'சுந்தரமூர்த்தி ஓதுவார்' தேவாரப் பாடல்கள் பாடுவார். அவரை நீ அறிந் திருப்பாய் என்று நம்புகிறேன். தேவாரப் பாடல்

களைப்பாடுவதில் அவருக்கு இணையானவர் தமிழகத்தில் இல்லையாம். நீ நாளை மாலையே அங்குவந்திருக்க வேண்டும்; உன் பெற்றோரிடம் இக்கடிதம் காட்டு; அவர்கள் அநுமதி பெற்று வா; வரத் தவருதே.

க. வடிவேல்,
5-ஆம் வகுப்பு மாணவன்,
ஆர். எஸ். பதிபுரம்,
கோவை.

இங்ஙனம்,
உன் அன்புள்ள நண்பன்,
இராசமாணிக்கம்.

4. வியாபாரக் கடிதம்

I

பெற்றுக்கொள்வேன்	பவுண்டு	டென்னிஸ்
மான்மார்க்கு	எடை	ஓவல்டைன்
யானைமார்க்கு	ரீம்	புட்டி
பெப்ரமெண்டு	ஹிமாலயா	ரசீது
பேட்மிண்டன்	குரோஸ்	
ஸ்வான் இங்கு	டஜன்	

20, அய்யங் கடை வீதி,
தஞ்சாவூர்,
19-8-40.

அன்புள்ள ஐயா,

தாங்கள் ஒரு மாதத்திற்கு முன் அனுப்பிய சாமான்கள் செலவாகி விட்டன. இக்கடிதம் கண்டவுடன் கீழ் வரும் சாமான்களை அனுப்பிவையுங்கள்.

1. 8 பவுண்டு எடையுள்ள யானைமார்க்குக் [காகிதம் 25 ரீம்.
2. ஹிமாலயா பென்சில் 20 குரோஸ்.
3. பேட்மிண்டன் பந்துகள் 3 டஜன்.
4. டென்னிஸ் பந்துகள் 4 டஜன்.
5. பெப்பரமெண்டு (பலவகைகளிலும் கலந்து) 10 பவுண்டு.
6. ஓவல்டைன் பெரிய டப்பாக்கள் 15.
7. ஸ்வான் இங்கு முழுப் புட்டிகள் $1\frac{1}{2}$ டஜன்
8. மான் மார்க்குக் குடை 3 டஜன்.

உங்கள் ரசீது வந்தவுடன் பணத்தைக் கட்டிச் சாமான்களைப் பெற்றுக்கொள்வேன்.

உங்கள் அன்புள்ள,

மாணிக்கவாசகன்.

(ஷாப் வியாபாரி)

திருவாளர், சோமு முதலியார் அவர்கள்,

ஷாப் வியாபாரி,

சைனாபஜார் ரோடு, சென்னை.

II

சைவசித்தாந்தம்	உண்மையுள்ள	தொகுதி
பவளக்காரத்தெரு	அனுப்பும்படி	வி. பி. தபால்
நூற்பதிப்புக் கழகம்	தேரடித்தெரு	மானேஜர்

20. தேரடித்தெரு, திருவாரூர்,
தஞ்சை ஜில்லா, 20-8-40.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மானேஜர்,
6. பவளக்காரத்தெரு,
சென்னை.

ஐயா, 'செந்தமிழ்ச் செல்வி,' சிலம்பு 8, 9 இரண்டையும், தயவு செய்து மேற்காணும் விலாஸத்திற்கு வி. பி. தபால் மூலம் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

உங்கள் உண்மையுள்ள,
அ. சாமிநாதன்.

பயிற்சி

1. வெளியூருக்குப் போயிருக்கும் உன் தந்தைக்கு, உன் வீட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக்குறித்து ஒரு கடிதம் எழுது.
2. சென்னையில் படிக்கும் உன் அண்ணனுக்கு, விடுமுறையில் வரும்போது உனக்கு வேண்டுவன வாங்கிவரும்படி ஒரு கடிதம் எழுது.
3. வெளியூரிலுள்ள உன் மாமனுக்கு, உன் ஊரில் நடைபெறவிருக்கும் பொங்கலுக்கு வரும்படி ஒரு கடிதம் எழுது.
4. வி. பி. தபால் மூலம் கைக்கடிகாரம் அனுப்பும்படி ஒரு கம்பனிக்கு ஒரு கடிதம் எழுது.

4. ஓவியப் புலவர் - இரவிவர்மா

பக்கிங்ஹாம் பிரபு	வல்லமை	சந்தர்ப்பம்
நற்சாட்சிப் பத்திரம்	கரித்துண்டு	வாய்த்தது
நடுத்தரமக்கள்	தலைசிறந்து	செவி
தங்கப்பதக்கம்	ஓவியத்திறன்	பரம்பரை
கவிப்புலவர்	அளித்தார்	வழிவழி
இசைப்புலவர்	கண்காட்சி	திறமை
இரவிவர்மா	தியொடோர்	காட்சிசாலை
இனிய	ஜென்ஸன்	கவர்னர்
தீட்டுபவர்	வியன்னா	சகுந்தலை
ஓவியப்புலவர்	எளியவர்	பரோடா
இனத்தவர்	கையாண்ட	இலண்டன்

1. பாக்களைச் செய்பவர் கவிப்புலவர் ; அப்பாக்களைச் செவிக்கு இனிய இசையில் அமைத்துப் பாடு

பவர் இசைப் புலவர் ; கண்ணுக்கு இனிய விருந்து அளிக்கும் சித்திரங்களைத் தீட்டுபவர் ஓவியப் புலவர். இந்த மூன்றும் இனத்தவரே இந்தியாவில் ஓவிய அரசராக இருந்த இரவிவர்மா என்பவர்.

2. இரவிவர்மா மலையாள நாட்டைச் சேர்ந்தவர் ; திருவிதாங்கூர் அரச பரம்பரையினர். இவருடைய முன்னோர் ஓவியம் தீட்டுவதில் புகழ் பெற்றவர்கள். அவர்கள் வழி வழி வந்த இரவிவர்மா இயற்கைப் பொருள்களைக் காண்பதில் ஆசை உடையவர் ; கண்டவற்றைச் சித்திரங்களாக அமைப்பதில் வல்லமை உடையவர் ; கையில் கிடைத்த கரித்துண்டைக் கொண்டும், சுண்ணும்புத் துண்டைக் கொண்டும் கண்ட கண்ட இடங்களில், மனத்துக்குத் தோன்றிய படங்களைத் தீட்டி வந்தார்.

3. சேர அரசரது ஓவியப்புலவர் இராஜராஜ வர்மா என்பவர். அவர் இரவிவர்மாவின் சித்திரத் திறமை கண்டு வியந்தார் ; அவரைத் தம் மாணவராகச் சேர்த்துக்கொண்டார் ; சிறந்த முறையில் பயிற்சி அளித்தார். இரவிவர்மா தம் ஆசிரியரிடம் கற்ற எல்லா மாணவரினும் தலைசிறந்து விளங்கினார். சேர நாடு முழுவதும் அவர் பெயர் பரவியது.

4. எண்ணெய் கலந்த வர்ணப் படங்கள் முதலில் இந்திய நாட்டில் எழுதியவர் இரவிவர்மாவே ஆவர். அவருக்கு இம்முறையைக் கற்பித்தவர் தியோடோர் எஜன்ஸன் என்னும் ஆங்கிலேயர் ஆவர்.

அவர் சிறந்த மேனுட்டு ஓவியப் புலவர். அவர் ஓவியக் கலையைக்கற்க இந்தியா முதலிய நாடுகட்கு வந்தார்; வந்தவர், இரவிவர்மாவின் ஓவியத்திறனைக் கண்டார்; அவர்மீது அளவற்ற அன்பு கொண்டார்; அவருக்கு எண்ணெய் கலந்து படம் எழுதும் முறையைக் கற்பித்தார். அம்முறையைக் கைபாண்ட நாள் முதலே இரவிவர்மாவின் பெயர் இந்தியா முழுவதும் பரவத்தொடங்கியது.

5. இரவிவர்மா, 1874 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த கண்காட்சி ஒன்றுக்குச் சித்திரப் படம் ஒன்றை அனுப்பி இருந்தார். அது மலையாளப் பெண் ஒருத்தியின் படம். அப்படம் இயற்கை அழகோடு இருந்ததைக் கண்ட அனைவரும் அதனைப் பாராட்டினர். கவர்னர் இரவிவர்மாவுக்குத் தங்கப் பதக்கம் ஒன்றைப் பரிசு அளித்தார். இரவிவர்மா 1878-ல் நடந்த மற்றொரு கண்காட்சிக்குச் சகுந்தலை படம் ஒன்றை அனுப்பி இருந்தார். இவர், அதற்கும் கவர்னரின் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்ருர். அப்போது சென்னை மாகாணக் கவர்னராக இருந்தவர் பக்கிங்ஹாம் பிரபு. அவருடைய படத்தைத் தீட்டித் தந்தவர் இரவிவர்மாவே ஆவர்.

6. இரவிவர்மாவின் பெயர் நாடெங்கும் பரவியது. பரோடா அரசரும், திருவிதாங்கூர் மன்னரும் இவரைத் தத்தம் அரண்மனைக்கு வரவேற்றனர்; அரச குடும்பத்தாரின் படங்களைத் தீட்டச் செய்தனர்; இரவி

வர்மாவின் மனம் குளிரப் பரிசுகள் அளித்துப் பெருமைப் படுத்தினர். இப்பெரிய புலவர் தீட்டிய படங்கள் இன்று இந்தியாவில் மட்டும் அல்ல; இலண்டன், வியன்ஞ, சிகாகோ முதலிய மேனுட்டு நகரங்களில் உள்ள காட்சிச் சாலேகளிலும் இருக்கின்றன. இதனுல் இவருக்கு அயல் நாட்டார் பரிசுகளும், நற்சாட்சிப் பத்திரங்களும் மிகுதியாகக் கிடைத்தன.

7. இவர் தீட்டியபடங்கள் ஏழைகட்குக்கிடைக்க வழி இல்லாமல் இருந்தது. அதனுல், சர். டி. மாதவராவ் என்னும் அறிஞர், இவர் தீட்டிய படங்களே அச்சிடுவித்தார்; குறைந்த விலேயில் நாடெங்கும் விற்க ஏற்பாடு செய்தார். அதன் பயனுல் இவரது ஓவியத் திறமையை எளியவரும், நடுத்தர மக்களும் கண்டு மகிழச் சந்தர்ப்பம் வாய்த்தது. இரவிவர்மாவின் படங்களேப் புகழாதார் உலகில் இல்லே. உங்களில் சிலர் இத்துறையில் பயிற்சி பெற்ருல், இரவிவர்மாவைப்போலப் பெரும்புகழைப் பெறலாம்.

கேள்விகள்

1. இரவிவர்மாவின் இளமைப்பருவம் எப்படி இருந்தது?
2. அவருடைய முதல் ஆசிரியர் யாவர்?
3. அவர் பெயர் நாடு முழுவதும் தெரியக் காரணம் யாது?
4. அவர் கவர்னரிடம் பெற்ற பரிசுகள் எவை? எப்போது பெற்ருர்?
5. அவர் படங்கள் எளியவரிடமும் இருக்கக் காரணம் என்ன?

பயிற்சி

1. சித்திரப் படங்களைப்பற்றி 10 வாக்கியங்கள் சொல்.
2. இரவிவர்மா படம் எழுதிப் பழகினதைப்பற்றி 8 வாக்கியங்கள் சொல்.
3. அவர் புகழ் உலகமுழுதும் பரவினதைப்பற்றி 7 வாக்கியங்கள் சொல்
4. கண்காட்சி, பரம்பரை, தலைசிறந்து, நற்சாட்சிப்பத்திரம்—தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.
5. தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம்—என்பவை யாவை? 'நான் முருகனோடு போனதை நீ பார்த்தாயா?' 'இந்தப் புத்தகம் அவன் கொடுத்தான்'—இவ்வாக்கியங்களுள் உள்ள மூவிடப் பெயர்களையும் எடுத்தெழுதுக. படர்க்கைப் பெயர்க்கு 5 உதாரணம் தருக.

இலக்கணம்

இடம்—ஒருமை, பன்மை :

நான்—தன்மைப் பெயர். நீ—முன்னிலைப் பெயர்.

அவன்—என்ன பெயர்? அவன் படர்க்கைப் பெயர்.

முருகன், பொன்னன்—என்னும் படர்க்கைப் பெயர்களுக்குப் பதிலாக 'அவன்' என்னும் பெயர் வழங்குகிறது.

உதாரணம்:—முருகன் நல்ல பையன். அவன் தினமும் பள்ளிக்குப் போவான். இங்கே முருகன் என்னும் சொல்லுக்குப் பதிலாக அவன் என்னும் சொல் வந்திருப்பதை அறிக.

இம்மூவிடப் பெயர்களும் ஒருமை, பன்மைகளில் வரும்.

நான், யான்—தன்மை ஒருமைப் பெயர்கள்.

நாங்கள், யாங்கள், நாம்—தன்மைப் பன்மைப் பெயர்கள்.

நீ—முன்னிலை ஒருமைப் பெயர்.

நீர், நீவிர், நீங்கள்—முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

அவன், அவள், அது—படர்க்கை ஒருமைப் பெயர்கள்.

அவர், அவை—படர்க்கைப் பன்மைப் பெயர்கள்.

5. செந்தமிழ் நாடு



சத்தி	மண்டி	குன்றம்
தென்பெண்ணை	சாத்திரம்	நித்தம்
பாலாறு	நதி	வான்புகழ்
வையை	வள்ளுவன்	அள்ளும்
பொருநை	மணியாரம்	மேனி
தவம்	படைத்த	மாலவன்

செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே;—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சத்தி பிறக்குது மூச்சினிலே. 1

காவிரி, தென்பெண்ணை, பாலாறு,—தமிழ்
கண்டதோர் வையை, பொருநைநதி—என
மேவிய ஆறு பலவோடத்,—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. 2

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை;—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு. 3

கல்வி சிறந்த தமிழ்நாடு,—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு,—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. 4

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு;—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்—றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு. 5

கேள்விகள்

1. காதில் பாய்வது எது? எப்பொழுது பாயும்?
2. மூச்சினில் பிறப்பது எது? எப்பொழுது பிறக்கும்?
3. தமிழ் நாட்டு ஆறுகள் எவை?
4. தமிழ் நாட்டு எல்லைகள் எவை?
5. கல்வியில் சிறந்தது தமிழ்நாடு—எப்படி?
6. கம்பன் வள்ளுவன்—யாவர்?
7. சிலப்பதிகாரம்—இதனைச் செய்தவர் யாவர்? இதன் சிறப்பு யாது?

பயிற்சி

1. தமிழ் நாட்டுப் படம் வரைந்து எல்லைகளையும், ஆறுகளையும் குறிப்பிடுக.
2. புகழ்பெற்ற தமிழ்ப் புலவர்கள் மூவர் பெயர்களும், அவர்கள் பாடிய நூல்கள் மூன்றும் சொல்.
3. தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் ஒவ்வொன்றும் எத்தனை வகைப்படும்? யாங்கள், அவர், நீவிர், அது, நாம், அவை- இவை என்னென்ன பெயர்கள்? அவன், அவள் முதலிய பெயர்கள் எப்பெயர்களுக்குப் பதிலாக வருகின்றன? ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு உதாரணம் தருக. நாய், மரங்கள்—இவற்றின் படர்க்கைப்

பெயர்கள் எவை? 'அவன் மூன்று ரூபாய் கொடுத்தான்' 'அவன்' என்னும் படர்க்கைப் பெயரைத் தன்மை முன்னிலையாக்கி இவ்வாக்கியத்தை முடி.

இலக்கணம்

வேற்றுமை:—முருகன் யானையைக் கண்டான். நான் முருகனைக் கண்டேன். இவ்விரு வாக்கியங்களிலுமுள்ள முருகன் என்னும் சொல்லைக் கவனி. முதல் வாக்கியத்தில் முருகன் ஒன்றைக் கண்டான்; இரண்டாம் வாக்கியத்தில் பிறரால் காணப்பட்டவன் ஆனான். இவ்வாறு வேறுபடுவதற்கு **வேற்றுமை** என்று பெயர். முருகனை—என்பதில் உள்ள 'ஐ' என்னும் எழுத்து அவ்வேறுபாட்டை அறிதற்கு அறிகுறியாக உள்ளது. அது வேற்றுமை உருபு எனப்படும். வேற்றுமை எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை, முருகன் பாடம் படித்தான் - என ஒரு வித மாறுதலும் இல்லாத பெயரே ஆகும். எட்டாம் வேற்றுமைக்கும் தனி உருபு இல்லை; பெயர்ச்சொல்லின் ஈற்றில் உள்ள எழுத்துக்கள் மாறிவரும்.

1. முருகன் வந்தான்—(உருபுகள்) முதல் வேற்றுமை
2. முருகனைக் கண்டேன்—(ஐ) இரண்டாம் வேற்றுமை
3. முருகனால் எழுதப்பட்டது—ஆல்)
முருகனோடு போனான்— (ஓடு)
முருகனொடு போனான்— (ஒடு)} மூன்றாம் வேற்றுமை
4. முருகனுக்குக் கொடு—(கு) நான்காம் வேற்றுமை
5. மிருகங்களில்பெரியது யானை—(இல்)
செல்வத்தின் மிக்கது கல்வி—(இன்)
வீட்டிலிருந்து வந்தான்—(இருந்து)} ஐந்தாம் வேற்றுமை
6. முருகனது புத்தகம்— (அது)
முருகனுடைய புத்தகம்— (உடைய)} ஆறாம் வேற்றுமை
7. முருகனிடம் இரு— (இடம்)
வீட்டில் இரு— (இல்)} ஏழாம் வேற்றுமை
8. முருகா, வா! — எட்டாம் வேற்றுமை

6. சுப்பிரமணிய பாரதியார்

இரார்	உற்சாகம்	உபதேசித்தார்
எட்டையாபுரம்	இயல்பு	குறுகிய
கவனம் செலுத்து	இன்றைய	பிராமணர்
உள்ளம்	இனிதாவது	மதித்தவர்
ஈடுபட்டது	ஜாதிபேதம்	பரிசுத்தம்
சமூகச் சீர்திருத்தம்	யாங்கணுமே	கொள்கை
அழியாப்புகழ்	புகழ்ச்சி	பொருள்நிலை
அமைந்தவை	உணர்ச்சி	மனமார
உள்ளவாறு	பற்று	சுறுசுறுப்பு
பயில	ஈன்ற	சாதாரணம்

1. பிள்ளைகளே, இவரை அறியாதவர் இன்றைய தமிழ்நாட்டில் இரார். இவரைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம்; இவர் வரலாற்றை அறியாவிடினும், இவருடைய பாடல்களையேனும் படித்திருப்பீர்கள். இவர் மறைந்து ஏறக்குறைய

பதினெட்டு ஆண்டுகளே ஆயின எனினும், இக்குறுகிய காலத்திற்குள் இவரைப் போலப் புகழ்பெற்ற புலவர், இவருக்குமுன் எவருமே இருந்திரார் என்று சொல்லலாம்.

2. இவர், திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த எட்டயாபுரத்தில் 1882-ஆம் ஆண்டில் எளிய பிராமண குடும்பத்தில் பிறந்தவர். இவர், பள்ளிக்கூடத்தில் ஆங்கிலக் கல்வியைவிடத் தமிழ்க் கல்வியையே பெரிதும் விரும்பினுர்; நம் தாய்மொழியாம் தமிழைக் கற்பதிலேயே மிகுந்த கவனம் செலுத்தினுர். தமிழ்ச் செய்யுட்களின் பொருளிலும் அழகிலும் இவர் உள்ளம் ஈடுபட்டது. இவர் தமிழ் என்னும் தேனில் விழுந்த ஈ ஆனுர்.

3. இவர் இளமையிலேயே தமிழ் நூல்களைப் பயிலத் தொடங்கினுர்; தமிழிற் சிறந்து விளங்கும் பெரிய நூல்கள் ஆகிய திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் என்னும் மூன்றிலும் நல்ல பயிற்சி பெற்ருர். இவ்வுண்மையை இவர் பாடியுள்ள,

“ யாமறிந்த புலவருளே கம்பரைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை ; உண்மை, வெறும்
புகழ்ச்சி இல்லை ”

என்னும் அடிகளே அறிவிக்கின்றன. இவர் தமிழினிடத்தில் எவ்வளவு பற்று உடையவராக இருந்தார் என்பதை,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ(து)
எங்கும் காணோம்"

என்று பாடியதிலிருந்து நன்கு அறியலாம்.

4. இவர் தமிழ் நாட்டின்மீது அளவற்ற பற்றுடையவர்; தமிழ்நாட்டைத் தம் உயிரினும் மேலாக மதித்தவர்; இதன் முன்னேற்றத்தைப் பெரிதும் விரும்பியவர்; தமிழ் மக்கள் ஜாதிமத பேதங்கள் இல்லாமல் ஒரு தாய் ஈன்ற மக்களைப்போல ஒன்றுபட்டு வாழ்வதை விரும்பினார்; "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பது இவரது கொள்கை.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொலல் பாவம்!"

என்பது இவரது பரிசுத்தமான கொள்கை.

5, இவர் தேசப்பற்று நிரம்பப் பெற்றவர்; இந்தியநாடு விரைவில் ஒற்றுமை அடைந்து, முன்னேற்ற வேலைகளைச் செய்யவேண்டும் என்பது இவரது விருப்பம். இந்தியக் கைத்தொழில்கள், இந்தியர் கல்வி, பொருள்நிலை, சமூகச் சீர்திருத்தங்கள் முதலியன விரைவில் ஏற்படவேண்டும் என்பதை மனமார விரும்பிய பெரியார் இவர். இவருடைய பாடல்களில் இவ்வுயர்ந்த கருத்துகளைக் காணலாம். இவர், ஒவ்வொருவரும் சுறுசுறுப்பு, ஊக்கம், உழைப்பு, ஆட்டம் முதலியவற்றைக் குழந்தைப் பருவத்திலிருந்தே பழக்கப்படுத்த வேண்டும் என்று உபதேசித்தார்.

6. இவர் பாடியுள்ள பாடல்கள் எளியதமிழில், சாதாரண நடையில் அமைந்தவை. அவற்றை எல்லோரும் படித்து எளிதில் உணரக்கூடும். இவர் பாடல்களில் வீரம், உணர்ச்சி, தேசபக்தி, மொழிப் பற்று, உற்சாகம், ஊக்கம் முதலிய நல்ல இயல்புகள் நிறைந்து இருக்கின்றன. அவற்றைப் படிப்பவர் எவராயினும் சரி; அவர் உள்ளம் உணர்ச்சி பெறும். அவருக்குத் தேசபக்தி உண்டாகும்; தமிழினிடத்தில் மிகுந்த பற்று ஏற்படும்; நமது உண்மை நிலைமை உள்ளவாறு விளங்கும்.

7. இவர் ஏழையாய்ப் பிறந்தார்; ஏழையாய் வாழ்ந்தார்; ஏழையாகவே இறந்தார். ஆனால், இவருடைய பாடல்கள் இவருக்கு அழியாப் புகழை இத் தமிழ் நாட்டில் உண்டாக்கி விட்டன. நீங்கள் இவருடைய உணர்ச்சி மிகுந்த பாடல்களைப் படித்து மனப்பாடம் செய்தல் நலம்; அவற்றை இசையோடு பாடுதல் மேலும் நலமாகும். நீங்களும் இவரைப் போல நமது நாட்டுக்கு உழைக்கும் நன்மக்களாக ஆதல் வேண்டும் அல்லவா?

கேள்விகள்

1. பாரதியார் தமிழ் மொழியிடத்து மிகுந்த பற்று உடையவர் என்பது எப்படித் தெரிகிறது?
2. பாரதியார் புகழும் தமிழ்ப் புலவர்கள் யாவர்? அவர்கள் பாடியுள்ள நூல்கள் எவை?
3. இவருடைய பாடல்கள் எவற்றை ஊட்டுகின்றன?
4. நமது முன்னேற்றம் பற்றி இவருடைய கருத்துகள் யாவை?
5. இவர் வரலாற்றால் நீ அறிவது யாது?

பயிற்சி

1. சுறுசுறுப்பு, மனமார, அழியாப்புகழ், யாங்கணும்—ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. சுறுசுறுப்பு—இது பிரிக்க முடியாத இரட்டைச்சொல். இதுபோன்றவையே 'கலகல, மளமள, துடிதுடித்தது, நொடிநொடித்தது' முதலியன. இவை இரட்டைச் சொற்கள் எனப்படும்.
3. எதிர்ச் சொற்கள் கூறுக:

    புகழ்ச்சி, தாழ்ச்சி, இளமை, ஏழை, குறுகிய.
4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை:

(அ) இவர் ——— தமிழ் ———ப் பயிலத் ———.

(ஆ) இவர் ——— தமிழ் ——— அளவற்ற ———.

(இ) குலத் ——— ——— சொலல் ———.

(ஈ) இவர் ———ப் பிறந்தார், ஏழையாய்———ஏழையாய்———.

5. வேற்றுமை என்பது என்ன? உருபில்லாத வேற்றுமைகள் எவை?

    ஆல், உடைய, இடம், கு-இவை எந்தெந்த வேற்றுமை உருபுகள்? ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் தருக.
6. ஒரே உருபுள்ள வேற்றுமைகள் எவை? பல உருபுள்ள வேற்றுமைகள் எவை?

இலக்கணம்

எட்டாம் வேற்றுமை: முருகா, வா!—இது என்ன வேற்றுமை? எட்டாம் வேற்றுமை. முருகன், என்னும் படர்க்கைச் சொல் கூப்பிடுகையில் முருகா என வேறுபட்டது. அதனால் இது, விளி வேற்றுமை எனப்படும். விளித்தல் - கூப்பிடுதல்.

கீழ் வரும் மாறுதல்களைக் கவனி:

தந்தை—தந்தாய்! அன்னை—அன்னாய்! மகன்—மகனே!
பெரியோர்—பெரியீர்! மக்கள்—மக்காள்!

இவ்வேற்றுமை, படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக்கும்.

7. நவராத்திரி விழா

அலங்கரிக்கப்பட்டு	மகிடாசுரன்	விஜயம்
இணங்கவில்லை	நாரதர்	கருவிகள்
புதுக்கோட்டை	தந்திரம்	நாமகள்
நவராத்திரி	பூசிக்கப்படும்	ஆயுதம்
தசராத்திரி	இரகசியம்	கடைசி
தசரா	விஜயதசமி	மங்கை
வட இந்தியர்	வரவு	சுவடி
விழா	உருவத்தில்	முதன்முதல்
இலக்குமி	அசுரன்	படை
கலைமகள்	மணக்க	

1. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் நவராத்திரி ஒன்று. இது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது. வட இந்தியர் இதனைப் பத்து நாட்கள் கொண்டாடுகின்றனர். அதனால், இது 'தசராத்திரி' என்றும் 'தசரா' என்றும் சொல்லப்படுகிறது.

2. இவ்விழா-புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் ஒன்பது நாட்கள் நடைபெறும். முதல் மூன்று நாள் இலக்குமி பூசையும், அடுத்த மூன்று நாள் கலைமகள் பூசையும், கடைசி மூன்று நாள் காளி பூசையும் நடைபெறும். இவற்றுள் முதல் இரண்டு பூசைகள் வீட்டில் செய்யப்படுவன. காளி பூசை கோவிலில் நடைபெறும்.

3. இவ்விழாவுக்கு ஒரு கதை உண்டு: 'மகிடாசுரன்' என்பவன் ஓர் அசுரன். அவன் மிக்க கொடியவன். அவனைக் கொல்ல நாரதர் ஒரு தந்திரம் செய்தார்; 'ஒரு மலையண்டை அழகிய மங்கை ஒருத்தி இருக்கிறாள். அவளை மணக்க நீயே தகுந்தவன்' என்று அசுரனிடம் சொன்னார்.

4. அவன் உடனே தன் படையுடன் அங்குச் சென்றான். அவன் வரவை நோக்கிக் காளிதேவியே பெண் உருவத்தில் இருந்தாள். இந்த இரகசியம் அறியாத அசுரன் அப்பெண்ணை மணக்க விரும்பினான். அவள் இணங்கவில்லை. உடனே இருவருக்கும் போர் நடந்தது. அப்போர் ஒன்பது நாட்கள் நடந்தன. பத்தாம் நாள் அசுரன் இறந்தான். பெண் விஜயம் (வெற்றி) அடைந்தாள். அதனால், பத்தாம் நாள் 'விஜயதசமி' எனப்பட்டது.

5. நவராத்திரி விழா, வீடுகளிலும் கோவில்களிலும் கொண்டாடப்படும். பொம்மைகள் வரிசை வரிசையாக வைத்து அலங்கரிக்கப்பட்டு இருக்கும். இக்காட்சியைக் காணப் பலர் வீடு வீடாகப் போவது உண்டு. ஒன்பதாம் நாள் நாமகள் பூசை நடைபெறும். அது தான் 'சரஸ்வதி பூஜை' என்பது. 'ஆயுத பூஜை' என்பதும் அதுவே.

6. ஆயுத பூசையன்று தொழிலாளர் தங்கள் தொழிலுக்குப் பயன்படும் கருவிகளைச் சுத்தப்படுத்திப் பூசை செய்வார்கள். பழைய காலத்தில் நம் முன்

ஞோர் நூல்களைப் பனை ஓலைகளில் எழுதிவைத்திருந் தார்கள். அந்தக்காலத்தில் காகிதம் இல்லை. அச்சுப் புத்தகம் இல்லை. பனை ஓலைச்சுவடிகள், இந்தச் சரஸ்வதி பூசையன்று சுத்தப்படுத்தப்பட்டுப் பூசிக்கப் படும்.

7. இந்த நவராத்திரி விழா, புதுக்கோட்டை, மைசூர், திருவாங்கூர் முதலிய சமஸ்தானங்களில் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும். இந்த விழா வின் கடைசி நாளில் சிறுவர்களை முதன் முதல் படிக்க விடுதல் நம்மவர் வழக்கம். பலர் விஜயதசமி யன்றே நல்ல காரியங்களைத் தொடங்குவர்.

கேள்விகள்

1. நவராத்திரி - இதன் வேறு பெயர் யாது? அது ஏன் உண்டாயிற்று?
2. இவ்விழா எப்பொழுது, எப்படி நடைபெறுவது?
3. இவ்விழாவைப் பற்றிய கதை யாது?
4. ஆயுதபூசை என்றால் என்ன?
5. இவ்விழா எங்கெங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது?

பயிற்சி

1. நீ அறிந்த வேறு விழாவைப்பற்றி 12 வாக்கியம் சொல்.
2. நீ கண்ட நவராத்தி விழாவைப்பற்றி 10 வாக்கியம் சொல்.
3. வரவு, கடைசி, வடஇந்தியர் - எதிர்ப்பதங்கள் எவை?
4. நாரதர், நவராத்திரி, விஜயம், சமஸ்தானம் — இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் வைத்து எழுதுக.

5. எட்டாம் வேற்றுமை என்பது என்ன? அஃது எவ்வாறு வேற்றுமைப்படும்? மகள், அன்னை, தாய், அப்பன், அண்ணன், தம்பி, மாமன், வேலன், வள்ளி — இச்சொற்கள் விளிக்கப்படும்போது எவ்வாறு மாறுபடும்?

6. முருகன் வேலனைத் தடியால் அடித்தான். நான் அதைப் பார்த்தேன். நீ அவனுக்கு உதவி செய்வாயா? இவ் வாக்கியங்களிலுள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களை எடுத்தெழுதுக; இவற்றிலுள்ள வேற்றுமைகளை இன்ன இன்ன என்று எடுத்து எழுதுக; எழுவாய், பயனிலையும் கூறுக.

இலக்கணம்

அவனைக்கொல்ல நாரதர் ஒரு தந்திரம் செய்தார்—அவன் என்னும் சொல் மகிடாசுரனுக்குப் பதிலாகவந்த பிரதிப்பெயர்ச் சொல். இது படர்க்கை இடப்பெயர். அவன் என்பது உயர் திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைப்பெயர் ஆகும். அவனை— என அது இரண்டாம் வேற்றுமை உருபேற்றது. எனவே, பெயர்ச்சொற்கள் திணை, பால், எண், இடங்களுக்கு இடமாய், வேற்றுமை யுருபேற்று வரும்.

தன்மை முன்னிலைப் பெயர்கள், திணை பால்களுக்கிடமாய் வரா.

நான் பள்ளிக்கூடம் போகும்போது, வழியில் முருகன் என்னைச் சந்தித்தான். நாம் இவ்வாறு சென்றால் யார் நம்மை மதிப்பார்கள்? நீ மோட்டாரில் போகும்போது நான் உன்னைப்பார்த்தேன். தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களைக்கவனி. நான் என்னும் தன்மை யொருமைப்பெயர் வேற்றுமை உருபேற்கும் போது என் என்று ஆகும். நாம் எவ்வாறு மாறுபட்டது? நீ நீங்கள்,—எவ்வாறு மாறுபடும்?

8. மேட்டூர் அணைக்கட்டு



மேட்டூர் அணைக்கட்டு

கையாள்கிறார்கள்	கரைபுரண்டு	மின்சாரம்
மேட்டுப்பாங்கான	அருகில்	செழிப்பு
வேளாண்மை	நோக்கத்தால்	செவ்வையாக
ஜீவ நதிகள்	இடையே	வசதி
வருஷகாலம்	சகஸ்ய	அத்தகைய
ஆறுகோடி	சாகுபடி	அதிகாரிகள்
மலைநாடு	மடங்கு	லக்ஷம்
சமவெளி	கடல்மட்டம்	மைல்

1. ஒரு நாட்டுச் செழிப்புக்கு முக்கியமானவை வேளாண்மையும், கைத் தொழிலுமே ஆகும். வேளாண்மை செவ்வையாக நடைபெற வேண்டுமானால், நாட்டில் பெரிய ஆறுகள் இருக்கவேண்டும். அந்த ஆறுகளின் நீரை வயல்களுக்குக்கொண்டு செல்லக் கால்வாய்கள் பல இருக்க வேண்டும். ஆறுகள் ஜீவ நதிகளாக இருந்தால் நலமே. சில ஆறுகள்

கோடையில் வற்றி விடும். அத்தகைய ஆறுகளில் நிரம்பத் தண்ணீர் வரும்பொழுதே அணை ஒன்றைக் கட்டித் தண்ணீரை ஓரிடத்தில் தேக்கி வைத்திருந்து, சிறிது சிறிதாகக் கால்வாய்களில் விட்டு வயல் களுக்குப் பாய்ச்சுதல் வேண்டும். இந்த முறையை எல்லா நாட்டவரும் கையாள்கிறார்கள். நமது தமிழ் நாட்டிலும் இத்தகைய அணைக்கட்டுகள் பல உண்டு.

2. சோழ மன்னர்கள் காவிரியில் கல் அணைக் கட்டு ஒன்றைக் கட்டி இருந்தார்கள். அது இன் னும் இருக்கிறது. தஞ்சாவூர், சேலம் முதலிய ஜில் லாக்களில் மேட்டுப்பாங்கான இடங்கட்குத் தண்ணீர் பாய நெடுங்காலம் வசதியே இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைச் சென்னை அரசாங்கத்தார் ; ஆறு கோடியே 80 லக்ஷம் ரூபாய் செலவு செய்து நீக்கி விட்டார்கள். அவர்கள் ஆறு வருஷ காலம் வேலை செய்து காவிரியாற்றில் மிகப் பெரிய அணைக்கட்டை 'மேட்டூர்' என்னும் இடத்தில் கட்டி இருக்கிறார்கள். அதற்கு 'மேட்டூர் அணைகட்டு' என்பதுபெயர். அது உலகில் உள்ள எல்லா அணைக் கட்டுகளிலும் பெரி யது என்று கூறப்படுகிறது.

3. காவிரியாற்றின் நீளம் சுமார் ஐந்நூறு மைல். இது குடகு நாட்டில் சகஸ்ய மலையில் உற் பத்தியாகிக் கிழக்கு நோக்கிப் பாய்கிறது; பாய்ந்து, வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. இது முதலில் மைசூர் நாட்டின் வழியாய் ஓடி, மலைநாட்டு வழியே

வந்து, மேட்டூருக்கு அருகில் சமவெளியில் பாய்கிறது. ஆவணி முதல் ஐப்பசி வரை மைசூரில் நல்ல மழைக் காலம்; ஐப்பசி முதல் மார்கழி வரை மலை நாட்டில் நல்ல மழை பெய்யும். எனவே, இந்த ஆறு மாதகாலம் காவிரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடும்.

4. இந்த நீர் வயல்களுக்குப் பாய்வதோடு, கடலில் வீணே சென்று கலத்தலும் உண்டல்லவா? நீர், கடலில் சென்று வீணாய்ப் போவதில் பயன் என்ன? ஆகவே, வீணாய்ப் போகும் நீரை அணைக் கட்டால் தேக்கி வைத்தால், வேண்டும்போது வயல்கட்குப் பாய்ச்சிக் கொள்ளலாம் அல்லவா? இந்த நோக்கத்தால் கட்டப்பட்டதே மேட்டூர் அணைக்கட்டு.

5. மேட்டூருக்கு அருகில் காவிரியாறு இரண்டு மலைகளுக்கு இடையே ஓடுகிறது. அங்கு அதன் அகலம் ஆயிரத்து நூறு அடி. அந்த இரண்டு மலைகளையும் எல்லைகளாக வைத்து நடுவில் அணை கட்டப்பட்டது. அதனால் நீர் நிறையத் தேக்கி வைக்க முடிந்தது. இங்ஙனம் தேக்கப்படுகின்ற நீர், முன் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களைவிட மூன்று மடங்கு அதிகமான நிலங்கட்குப் பயன்படும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்த அணைக்கட்டால் தேக்கப்பட்டு இருக்கும் நீர் காவிரியாற்றில் சுமார் 33 மைல் தூரம் பரவி இருக்கத்தக்க அளவுள்ளது. இந்த அணைக்கட்டின் உயரம் கடல் மட்டத்துக்கு மேல் எண்ணூற்று ஓர் அடியாகும். இதன் அகலம் இருப

தரை அடி. அணைக்கட்டின் நீளம் ஒரு மைல் இருபது அடி.

6. இந்த அணைக்கட்டு நீரிலிருந்து மின்சாரம் உண்டாக்கப்படுகிறது. அந்த மின்சாரம் மேட்டூருக்கும் சென்னைக்கும் இடையில் உள்ள நகரங்களில் விளக்கெரிக்கப் பயன் படுத்தப்படுகிறது. நீங்கள் வசதி ஏற்பட்டால், இந்தப் பெரிய அணைக்கட்டைப் பார்க்கத் தவறுதீர்கள்.

கேள்வி

1. காவிரி எங்குத் தோன்றி எங்கெங்கு பாய்கிறது?
2. மேட்டூரில் ஏன் அணை கட்டவேண்டும்? அணைக் கட்டின் செலவு என்ன? அணைக்கட்டால் என்ன நன்மை?

பயிற்சி

1. சாகுபடிக்கு ஆற்று நீரை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதை 10 வாக்கியங்களில் சொல்.
2. மேட்டூர் அணைக்கட்டைப்பற்றி 10 வாக்கியங்கள் சொல்.
3. நிரம்ப, மிகப் பெரிய, மார்கழி வரை, வீணுய்ப்போகும்—தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் கூறுக.
4. நீளம், அதிகமான—எதிர்ப்பதங்கள் எவை?
5. பெயர்ச் சொற்களால் எவ்வெவற்றை அறியலாம்? திணை பால் ஏற்காதவை எப் பெயர்கள்?

அவன், அவள், அவர், அது, அவை—திணை, பால், எண், இடம் கூறுக. இப் பெயர்களை இரண்டு, மூன்று, ஐந்து—வேற்றுமைகளாக்கி, ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

6. என்னை, நம்மை, உன்னை, நின்னை, உம்மை, நும்மை—இவை எச் சொற்களின் திரிபு? சரியான சொற்களை எழுதுக.

9. சுவாமி விவேகானந்தர்

கூட்டத்தினர்	ஜப்பான்	விளக்கமாக
சொற்பொழிவு	மாஹாநாடு	கருதுபவர்
உபந்யாசம்	நிபுணர்	சீடன்
பிரசங்கம்	ஓயாமல்	திரட்டினர்
சுகபோகம்	சீமான்	ஈடுபடாமல்
இலங்கை	சீமாட்டி	இரஷ்யா
விவேகானந்தர்	சிலம்பம்	மடம்
பொதுஜன உழைப்பு	மெய்ஞ்ஞானி	தூயமுறை
சுருங்கச்சொல்லின்	புகழாதார்	சார்பில்
ஆத்மவிசாரணை	தரிசித்தல்	காலமானர்
உள்ளன்போடு	மஹான்	வேதாந்தம்
பாராட்டாதார்	மரியாதை	அறிவிக்க
பரமஹம்சர்	அளவற்ற	உலகத்தார்
கல்கத்தா	ஞானகுரு	பேரவை
மற்போர்	அமெரிக்கா	ஐயம்
துறவு	சர்வமதம்	போதித்தார்
பூண்டார்	சந்நியாசி	பிரான்ஸ்
இளவயதில்	சிகாகோ	இட்டாலி

1. நமது நாட்டில் மதசம்பந்தமான பெரியோர் பலர் தோன்றி மறைந்தனர். அப்பெரியார்களுள் சுவாமி விவேகானந்தர் ஒருவர். அவர் கல்கத்தாவில் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். அவர் பி. ஏ. பட்டம் பெற்றவர். அவர் அப்பட்டம் பெறுவதற்கு முன்பே ஆத்ம விசாரணை, கடவுளைப்பற்றிய விசாரணை இவற்றைச் செய்யலானர். அவர் மற்போர், சிலம்பம், குத்துச்சண்டை முதலிய உடற்பயிற்சிகளிலும் தேர்ந்து விளங்கினர்.

2. அவர் ஒருநாள் மெய்ஞ்ஞானி ஒருவரை அடைந்தார். அவர்பெயர் இராம கிருஷ்ண பரமஹம்ஸர் என்பது. அவர் கல்கத்தாவில் ஒரு மடத்தில் இருந்தார்; கடவுள் விசாரணையிலும் ஆத்மவிசாரணையிலும் தேர்ந்தவர். அவரைக் கல்கத்தா வாசிகள்

விவேகானந்தர்

தினமும் சென்று தரிசித்தல் வழக்கம். அப்பெரியார் சாதிமத வேறுபாடுகள் இல்லாதவர்; எல்லோரையும் தம் உடன் பிறந்தவராகக் கருதுபவர்; எல்லாப் பெண்களையும் தாயைப்போல நினைப்பவர். அம்மஹானிடம் எல்லோருக்கும் மிகுந்த மரியாதை இருந்தது.

3. இராமகிருஷ்ணர், விவேகானந்தரது ஒளி வீசிய முகத்தைக் கண்டார்; இளைஞர் உலகம் புகழ் பெறத் தக்கவர் என்பதை உணர்ந்தார்; அவரிடம் அளவற்ற அன்பு கொண்டார். விவேகானந்தரும் அப்பெரியாரிடம் பக்தி கொண்டார்; அவரிடம் தமக்குத் தோன்றிய ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார்; அவரைத் தம் ஞான குருவாகக் கொண்டார். அவரை ஒருநாள் பாராவிடில் விவேகானந்தர்க்குத் தூக்கம் வாராது. அம்மாதிரியே விவேகானந்தரைக் காணுவிடில், இராமகிஷ்ணருக்குத் தூக்கம் வராது. சுருங்கச் சொல்லின் குருவும் சீடனும் ஒருவரை ஒருவர் உள்ளன்போடு தூய முறையில் நேசித்து வந்தனர் என்னலாம்.

4. பரமஹம்சர் காலமானதும், விவேகானந்தர் வேதாந்த நுட்பங்களை உலகத்தார்க்கு அறிவிக்கப் பெரிய மடம் ஒன்றைக் கல்கத்தாவில் ஏற்படுத்தினர். அவர் துறவு பூண்டார்; இந்தியா முழுவதும் சுற்றினர்; வேதாந்த விஷயங்களை மக்களுக்கு எடுத்துப் போதித்தார். அவர் பெயர் இந்தியா முழுவதும் பரவியது. இளவயதில் சுகபோகங்களில் ஈடுபடாமல் சந்நியாஸியாக மாறிய அவரைப் பாராட்டாதார் இல்லை; அவரது பொது ஜன உழைப்பைக் கண்டு புகழாதாரும் இல்லை.

5. இந்நிலையில் அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரத்தில் சர்வ மதப் பேரவை ஒன்று கூடியது. உலகில் உள்ள பலவகை மதத் தலைவர்களும்

அப்பேரவைக்குச் சென்றனர். இந்தியாவிலிருந்து இந்து மதச் சார்பில் அங்கு எவரும் செல்லவில்லை. அங்குச் செல்ல விவேகானந்தர் முயன்றார்; செலவுக்கு வேண்டிய பணம் திரட்டினார்; இலங்கை வழியாக ஜப்பான் சென்றார்; அங்கிருந்து அமெரிக்காவை அடைந்தார்.

6. வீரத் துறவியான விவேகானந்தர், அப்புதிய நாட்டில் பணத்துக்குக் கஷ்டப்பட்டார்; முடிவில் அமெரிக்க மாது ஒருத்தி அவரை ஆதரித்தாள். அவளது முயற்சியால் விவேகானந்தர்க்குச் சில பேரறிஞரது நட்பு உண்டானது. அவர்கள் முயற்சியால் விவேகானந்தர் சர்வமத மஹா நாட்டில் இந்து மதம்' என்பது பற்றிப் பேச இடம் பெற்றார்.

7. சர்வ மதப் பேரவையில் எல்லா நாட்டுப் பேரறிஞரும் இருந்தார்கள். எல்லா மத நிபுணர்களும் இருந்தனர். விவேகானந்தரும் அச்சபையில் இருந்தார். அவர் எளிய சந்நியாசி உடையில் இருந்தார். அவர் பேச எழுந்தார். அவர் அப்பொழுது மெய்யாகவே நடுங்கினார். அவருக்கு முன் பேசியவர்கள் முதலில் கூட்டத்தில் இருப்பவர்களை 'சீமான்களே, சீமாட்டிகளே' என்று அழைத்தபிறகு பேசலாயினர். ஆனால், நம் விவேகானந்தர் கூட்டத்தினரை 'சகோதரர்களே, சகோதரிகளே, என்று அழைத்தார். அவ்வளவே: உடனே அங்கு இருந்தோர் எல்லோரும் ஆரவாரம் செய்து ஓயாமல் கைதட்டினர்.

8. விவேகானந்தர்க்கு அப்பொழுதுதான் பயம் தெளிந்தது. 'நம்மைப் பாராட்டவும் இங்கு ஜனங்கள் இருக்கிறார்கள்; சரி, இனிப் பேசுவோம்' என்று அவர் எண்ணினர்; வேதாந்த நுட்பங்களை யும், இந்து மதத்தின் பெருமையையும் விளக்கமாக எடுத்துக் கூறித் தமது பிரசங்கத்தை முடித்தார். அவர் பேசி முடிப்பதற்குள் கூட்டத்தினர் பல முறை ஆரவாரம் செய்து கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர். அமெரிக்காவில் அன்று வெளியான எல்லாப் பத்திரிகைகளிலும் அவர் படத் தைப் போட்டுப் புகழ்ந்து எழுதப்பட்டு இருந்தது.

9. அமெரிக்கர் அவரைப் பெரிதும் பெரு மைப்படுத்தினர். அவர் அமெரிக்க நகரங்கள் பல வற்றிற்குச் சென்று, பல பெரிய கூட்டங்களில் அரிய பிரசங்கங்கள் செய்தார். அவரது பெருமை ஐரோப் பாவுக்கு எட்டியது. ஐரோப்பியர் அவரை வர வேற்று உபசரித்தனர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டாலி, இரஷ்யா முதலிய நாடுகளில் சுற்றி, அங்கங்கு அருமையான சொற்பொழிவுகள் செய்து, பெரும் புகழோடு தாய் நாடு மீண்டார். இத் தகைய மஹானைப்போல நீங்கள் உலகப் புகழ்பெற முயற்சி செய்தல் உங்கள் கடமை அல்லவா?

கேள்விகள்

1. விவேகானந்தர் பள்ளிப்பருவம் எப்படிப்பட்டது?
2. அவர் எவருடைய சீடர் ஆனார்? எப்படி?
3. ஞானகுருவின் பெருமை யாது?
4. விவேகானந்தர் அமெரிக்காவில் பெயர்பெற்றது எப்படி?

5. அவரடைந்த பெருமை யாது? அவரால் இந்தியாவுக்குப் பெருமையா? இழிவா?

6. நீ, அவர் வரலாற்றால் அறிவது யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை மௌனமாக வாசி; விஷயத்தை 20 வரிகளில் சுருக்கி எழுது.

2. இராமகிருஷ்ணரது பெருமையைப்பற்றி 10 வாக்கியங்களில் சொல்; பிறகு அவற்றை எழுது.

3. உயர்ந்த, ஆத்ம விசாரணை, தரிசித்தல், தோன்றிய—இவற்றை ஒவ்வொரு வாக்கியங்களில் வைத்துக் கூறுக.

4. சொற்பொழிவு—இதே பொருளுள்ள வேறு 2 சொல் கூறுக.

5. உலகிலுள்ள பலவகை மதத்தலைவர்களும் ———. செலவுக்கு வேண்டிய ———. முடிவில் அமெரிக்க மாது ஒருத்தி ———. வாக்கியங்களை முடி.

6. முற்று வினைக்கும், எச்சவினைக்கும் உள்ள வேற்றுமை என்ன? பெயரெச்சத்திற்கும், வினையெச்சத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன?
உண்டான், வந்தான், படித்தான், தின்றது, பறந்தது—இவற்றை இருவகை எச்சங்களாக்கி ஒவ்வொரு வாக்கியங்களில் வைத்துக் கூறுக.

இலக்கணம்

முருகன் வந்தான். வந்தான்—உயர்திணை, ஆண்பால், இறந்தகாலம், ஒருமை, படர்க்கை வினைமுற்று. வருகிறான், வருவான்—என்ன கால வினைமுற்றுக்கள்? மறைந்தனர், பிறந்தவர், இருக்கிறார், சொல்வார், படிக்கிறான்—இவற்றிற்குத் திணைபால் கூறுக.

வந்தேன்——இறந்த காலத்தன்மை ஒருமை வினைமுற்று.
வந்தேம்—இறந்த காலத்தன்மைப் பன்மை வினைமுற்று.
வந்தாய்—இறந்த கால முன்னிலை ஒருமை வினைமுற்று.
வந்தீர்—இறந்தகால முன்னிலைப் பன்மை வினைமுற்று.
மற்ற இரு காலங்களுடனும் சேர்த்துக் கூறுக.

10. எனது பயன்

(பனைமரம் பகர்தல்)

பகர்தல்	தும்பு	பதநீர்
செப்பிடுவேன்	துள்ளியாட	பாரதம்
வாரை	இறை கயிறு	பலசரக்கு மண்டி
பட்டுப்போகும்	எழுத்தாணி	வீட்டுக் கூரை
பலத்த	தடுக்கு	சலிப்பு

1. பனைமரமே, பனைமரமே, பகர்ந்திடுவாய் உன்பயனை.
சிறுவர்களே, சிறுமிகளே, செப்பிடுவேன் என்பயனை:

2. வெட்டநல்ல விறகாவேன்; வீடுகட்ட வாரையாவேன்;
பட்டுப்போகும் பயிர்களுக்குப் பலத்தநல்ல ஏற்றமாவேன்;

3. கட்டநல்ல கயிறுவேன்; கன்றுகட்டத் தும்பாவேன்;
மட்டமுள்ள உறியாவேன்; மாடுகட்டத் தும்பாவேன்;

4. தொட்டிலுக்குக் கயிறுவேன்; துள்ளியாட ஊஞ்சலாவேன்;
இட்டபயிர் நீரிறைக்க இறைகயிறு நானுவேன்;

5. வெயில்மறைக்கக் குடையாவேன்; வீட்டுக்கூரை நானுவேன்;
தயிர்கடையும் பட்டையாவேன்; சலிப்பாற்ற விசிறியாவேன்,

6. எழுதுகின்ற பிள்ளைகட்கு எழுத்தாணிக் கூடாவேன்;
வாசிக்கின்ற பிள்ளைகட்கு வண்ணத் தடுக்காவேன்;

7. பாலர் பெரியோர்க்குப் பனம்பதநீர் நானுவேன்;
சித்திரைக் கோடையிலே சிறந்தநல்ல நுங்காவேன்.

8. இலக்கியங்கள் என்னுலே; இலக்கணங்கள் என்னுலே;
இராமாயணம் என்னுலே பாரதமும் என்னுலே;

9. வர்த்தகரும் செட்டிகளும் வழியறிவ தென்னுலே;
பலசரக்கு மண்டிகளில் பத்திரமாய் நானிருப்பேன்.

10. என்னுலே ஆவனவோ இன்னுமுண்டு சிறுவர்களே,
எந்நாளும் உங்களுக்கு ஏற்றதுணை நானுவேன்.

கேள்விகள்

1. பனை ஓலையால் பயன் என்ன ?
2. பனம் பட்டையால் பயன் என்ன ?
3. அடி மரத்தால் பயன் என்ன ?
4. பனை மரம் நமக்கு என்ன தருகிறது ?
5. பனை மரம் போற் பயன்படும் வேறு மரங்கள் எவை ?

பயிற்சி

1. பனை மரத்தின் ஒவ்வோர் உறுப்புக்களும் பயன் படுவதைப் பற்றி இரண்டிரண்டு வாக்கியங்கள் சொல்.
2. கயிறு, வாரை, கூரை, எழுத்தாணி, பலசரக்கு—இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.
3. மட்டம், கோடை, பலசரக்கு—எதிர்ப்பதங்கள் கூறுக.
4. வினைமுற்று என்பது என்ன? வருகின்றனன்—என்ன வினைமுற்று ?
5. செல்வேன், போவான், சென்றான், போ, வா, வருகிறேன் —இவ் வினைமுற்றுக்களுக்கு இடம், காலம் கூறுக.

இலக்கணம்

ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒவ்வொரு கருத்து அடங்கியிருக்கிறது. நாம் பேசும்போது கருத்துக்களை அடுக்கிக் கொண்டே போகிறோம். ஒரு பாடம் அல்லது கதையை எழுதும்போதும் அவ்வாறே அடுக்கிக்கொண்டே போகிறோம். ஆனால், ஒரே அடியாய் அடுக்கிக்கொண்டே போவதில்லை. பகுதி பகுதியாகப் பிரித்து எழுதுகிறோம். ஏன் அவ்வாறு பிரித்தெழுதுகிறோம்? ஒரு பாடத்தின் கருத்துக்கள் ஒரே மாதிரியாக இல்லை. இனம் இனமாக இருக்கின்றன. ஓரினக் கருத்துக்களைத் தனித் தனியாக எழுதுவதே பாரா அல்லது பகுதி யாகும்.

உதாரணம்:—பசுவின் பாடம்: (1) இருப்பிடம், தன்மை முதலியன. (2) உறுப்புக்களின் அமைப்பு, பயன். (3) நமக்குப் பயன்படுதல்.

11. பத்திரிகைப் படிப்பு

பற்பல	விலைப்பட்டி	ஆனந்த விகடன்
மூலமாக	தொடர்பு	பிரசண்ட விகடன்
தீயவை	படிப்பகம்	லோகோபகாரி
நிரம்ப	அன்றாட	குமார விகடன்
தினசரி	செந்தமிழ்	குடி அரசு
விகடம்	செந்தமிழ்ச் செல்வி	தாருல் இஸ்லாம்
செய்தித் தாள்	கலைமகள்	சைபுல் இஸ்லாம்
பத்திரிகை	தமிழ்ப்பொழில்	திரு இருதய தூதன்
சமயம்	சித்தாந்தம்	தனவைசியன்
காணமுடியாத	வேதாந்தம்	நவசக்தி
அப்பால்	தர்மராஜா	செட்டி நாடு
புரிகின்றன	செங்குந்த மித்திரன்	சுதேசமித்திரன்
வெளியீடு	கருணீக மித்திரன்	தின மணி
தொகுத்து	யாதவ மித்திரன்	ஜெயபாரதி
நடவடிக்கை	தமிழரசு	விடுதலை
ஏற்றுமதி	ஆனந்தபோதினி	சினிமா உலகம்
இறக்குமதி	நகர தூதன்	படக்காட்சி

1. பத்திரிகை இல்லாத நாடு உலகிலேயே இல்லை. பத்திரிகைகளே இன்று உலகத்தை ஆள்கின்றன; பற்பல நாடுகளை ஒன்று சேர்க்கின்றன. நாம் காணமுடியாத ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள நாட்டுச் செய்திகளைப் பத்திரிகைகள் மூலமாகத் தினமும் அறிகிறோம். அந்தந்த நாட்டுச் செய்திகளை அறிய—வியாபார விஷயங்களை உணர—நல்லவை, தீயவை அறிய—ஏன்? எல்

லாம் தெரிந்துகொள்ளப் பத்திரிகைகளே பெருந் துணை புரிகின்றன.

2. நமது தமிழ் நாட்டில் தமிழ்ப்பத்திரிகைகள் நிரம்ப இருக்கின்றன. ஆங்கிலப் பத்திரிகைகளும் உண்டு. தினந்தோறும் வெளிவரும் பத்திரிகைகட்குத் 'தினசரி' என்பது பெயர். 'சுதேசமித்திரன், தினமணி, ஜெயபாரதி, விடுதலை' முதலியவை இப் பகுதியைச் சேர்ந்தவை. வாரம் இருமுறை, ஒரு முறை, மாதம் இரு முறை, ஒரு முறை வெளியாகும் பத்திரிகைகளும் உண்டு. செய்தித் தாள்களே அல்லாமல் விகடப் பத்திரிகைகளும் உண்டு. 'ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், குமாரவிகடன்' முதலியன இவ்வினத்தைச் சேரும். சினிமா உலகம்; ஆடல் பாடல்; முதலிய சினிமா (படக் காட்சி)ப்பத்திரிகைகளும் உண்டு.

3. 'நவசக்தி, லோகோபகாரி, நகரதூதன், தாருல்இஸ்லாம், ஷைபுல் இஸ்லாம், திருஇருதய தூதன், குடியரசு' முதலியன வார வெளியீடுகள். இவை அந்த அந்த வாரத்தில் உலகில் நடைபெற்ற செய்திகளைத் தொகுத்து வெளியிடும். இவற்றுள் இடையிடையே சில அழகான கட்டுரைகள் வெளிவருதலும் உண்டு.

4. மாதம் ஒரு முறை வெளியாகும் தாள்கள் பெரும்பாலும் இலக்கியப் பத்திரிகைகள், ஜாதிப் பத்திரிகைகள், சமயப் பத்திரிகைகளுமே ஆம். 'செந்

தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், கலை மகள்' முதலியவை இலக்கியப் பத்திரிகைகள். 'செங்குந்த மித்திரன், யாதவ மித்திரன், கருணீக மித்திரன்' முதலியவை ஜாதி பற்றிய தாள்கள். 'சித்தாந்தம், வேதாந்தம், தர்மராஜா, முதலியவை மத சம்பந்தமான பத்திரிகைகள். இவை அல்லாமல் 'ஆனந்த போதினி,' 'சிறுவர் அறிவுக்கதிர்' முதலிய பலசுவைப் பகுதிகள் கொண்ட மாத வெளியீடுகளும் உண்டு.

5. நமது நாட்டில் வியாபாரப் பத்திரிகைகளும் சில உண்டு. இவை 'தனவைசியன், செட்டி நாடு' போன்ற பத்திரிகைகள். இவற்றுள் வியாபாரத் தொடர்பான செய்திகளே மிகுந்து காணப்படும். ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களின் விலைப்பட்டி, பவுன், வெள்ளி முதலிய உலோகங்களின் விலைப் பட்டி, தானிய வகை விலைப்பட்டி முதலியவற்றை இப் பத்திரிகைகளில் காணலாம்.

6. இப்போது நமது தமிழ்நாட்டில் தமிழ் அறிவு பெருகி வருகிறது. அதனுல், பத்திரிகைகளும் பெருகி வருகின்றன. பள்ளிக்கூடப் பிள்ளைகளும் பத்திரிகைகளைப் படிக்கிருர்கள். நீங்கள் அவற்றைப் படிக்கிறீர்களா ? பத்திரிகைகள் படிக்கப் பல இடங்களும் நகராண்மைக் கழகங்களால் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. அவற்றைத் தனி முறையில் வைத்து நடத்துவோர்க்கு நகராண்மைக் கழகத்தார் பொருள் உதவியும் செய்கிருர்கள்.

7. பலர் சேர்ந்து செய்தித் தாள்களைப்படிக்கும் இடம் வாசிப்பு நிலையம் (படிப்பகம், ரீடிங்ரூம்) எனப்படும். சென்னை போன்ற பெரிய நகரங்களில் இவ்வாசிப்பு நிலையங்கள் பல இருக்கின்றன. கிராமங் களில் இவை இருத்தல் அருமை.

8. பத்திரிகைப் படிப்பு மிக்க அவசியமானது. நாம், அவற்றுள் வெளியாகும் அன்றாடச் செய்தி களைக் கொண்டு, உலகச் செய்திகளை அறியலாம்; வியாபாரச் செய்திகளை அறியலாம்; நாட்டு நடவடிக் கைகளை அறியலாம்; அரசியல் காரியங்களை அறிய லாம்; அறிவுசம்பந்தமான விஷயங்களை அறியலாம்; பலவகைக் கலைகள் சம்பந்தமான செய்திகளை அறிய லாம்; வெளியாகும் சம்பவங்களால் பல நீதிகளை அறியலாம். சுருங்கக் கூறின் பத்திரிகைப் படிப்பு உணவின் அவசியத்தை ஒத்தது. பத்திரிகை படி யாதவன் மனிதன் ஆகான்.

கேள்விகள்

1. தமிழில் உள்ள நாள் தாள்கள் எவை?
2. தமிழில் உள்ள வாரத் தாள்கள் எவை?
3. தமிழில் உள்ள மாதத் தாள்கள் எவை?
4. தமிழில் உள்ள வியாபார—விகடத்தாள்கள் எவை?
5. பத்திகைப் படிப்பு என் அவசியமானது?
6. உங்கள் ஊரில் வாசிப்பு நிலையம் உண்டா? அதைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

பயிற்சி

1. செய்தி, பெருந்துணை, வெளிவரும், வாசிப்பு நிலையம்—ஒவ்வொரு வாக்கியத்துள் வைத்துக் கூறுக.

2. இல்லாத, அப்பால், நீதி—எதிர்ச்சொற்கள் கூறுக.
3. தினசரிப் பத்திரிகை என்பதுபற்றி 5 வாக்கியங்கள் கூறுக.
4. வார மாதத்தாள்கள் என்பது பற்றி 6 வாக்கியங்கள் கூறுக.
5. பத்திரிகைப் படிப்பு மிக்க ———. அறிவு சம்பந்தமான ———. பத்திரிகைப் படிப்பு உணவின் ———. பத்திரிகை படியாதவன் ———. வாக்கியங்களை முடி.
6. முன்னிலை வினைமுற்று, தன்மை வினைமுற்று—இவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக. வினை முற்றுக்கள் எவ்வெவற்றை ஏற்றுவரும்? பெயர்ச்சொற்கள் எவ்வெவற்றை ஏற்றுவரும்?
7. பாராவென்பது யாது? அது எவ்வாறு அமையவேண்டும்? இப்பாடத்தின் பகுதிகளைக் கவனி.

இலக்கணம்

முருகன் வந்தாள். மாடு வந்தான்—என வருமா? வரா. ஏன்? முருகன் ஆண்பால் பெயர். வந்தாள் பெண்பால் வினை. மாடு அஃறிணை ஒன்றன்பால் பெயர். வந்தான்—உயர்திணை ஆண்பால் வினை. பெயர் அல்லது எழுவாய் எத்திணையில் எப்பாலோ, பயனிலையும் அத்திணையில் அப்பாலாகவேதான் வரும். அஃதாவது எழுவாய் உயர்திணை ஆண்பாலானால், பயனிலையும் உயர்திணை ஆண்பாலாகவேதான் வரவேண்டும்?

உதாரணம்:—முருகன் வந்தான், அவன் வந்தான்
வள்ளி வந்தாள், அவள் வந்தாள்
மக்கள் வந்தார், அவர் வந்தார்
மாடு வந்தது, அது வந்தது
மாடுகள் வந்தன, அவை வந்தன

இவ்வாறன்றி, உயர்திணைக்கு அஃறிணையும், ஆண்பாலுக்குப் பெண்பாலும், ஒருமைப்பாலுக்குப் பன்மைப்பாலும் மயங்கிவரா.

12. பத்திரிகைச் செய்திகள்

ஹரிஜன சேவா சங்கம்	தீர்த்தமலை	ரிகார்டு
தீண்டாமை ஒழிப்பு	தேவாலயம்	பிற்பகல்
தீண்டாமை விலக்கு	ஹரிஜனம்	ரேடியோ
ஜாதி இந்துக்கள்	மேற்படி	புல்லாங் குழல்
கோட்டு வாத்தியம்	தேவஸ்தானம்	கொய்யா
இதர அறிவிப்பு	டிரஸ்டிகள்	தயார்
நர்சரித் தோட்டம்	தர்மகர்த்தா	கேட்லர்க்கு
ஒட்டுமாங் கன்று		

தீண்டாமை ஒழிப்பு

அரூரில் பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

சேலம், ஆக 25—

அரூர் தாலூகா, தீர்த்தமலைத் தேவாலயத்தில் ஹரிஜனங்களை அநுமதிக்கும் விஷயமாகப் பொதுஜன அபிப்பிராயத்தை அறியும்பொருட்டு மேற்படி தேவஸ்தான டிரஸ்டிகளாகிய ஸ்ரீமான்கள் பி. ஸி. சாம்பசிவ ரெட்டியார், கே. அப்பாசாமிக் கவுண்டர், கே. வி. ராமசாமி நாயுடு ஆகிய மூவரும் கையொப்பமிட்டு வெளியிடப்பட்ட நோட்டீஸ் பிரகாரம், அரூரில் நேற்றுச் சாயந்திரம் ஸ்ரீமான் கே. அப்பாசாமிக் கவுண்டருடைய தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சேலம் ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் எஸ். பி. ஆதிகேசவலு செட்டியார் 'தீண்டாமை விலக்கு, ஹரிஜன ஆலயப் பிரவேசம்' ஆகியவற்றின் அவசியத்

தைப்பற்றிப் பேசினர். பிறகு அரூர் ஸ்ரீ வேலாயுதம் பிள்ளை, சேலம் ஸ்ரீமான் எம். வி. கோபால ரெட்டியார், ஸ்ரீமான்கள் வி. வாஞ்சிநாத அய்யர், பி. ஸி. சாம்பசிவ ரெட்டியார், துரைசாமி முதலியார், டி. வி. அங்கண்ண செட்டியார் ஆகியவர்களும் பேசினர்கள். இன்னும் ஒரு மாதத்துக்குள் அங்குள்ள ஜாதி ஹிந்துக்களுடைய அபிப்பிராயத்தை மேற்படி தர்மகர்த்தாக்கள் அறிந்துகொண்டு, மேற்கூறிய விஷயமாய் ஏற்பாடு செய்யலாமென்று முடிவு செய்யப்பட்டது.

—'சுதேசமித்திரன்'

தினசரிப் பத்திரிகை, சென்னை.

பயிற்சி

மேற்கண்ட செய்தியை மனத்திற்குள் படித்த பிறகு, கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

1. எந்தத் தேவாலயத்துள்? யாரை அநுமதிக்கும் விஷயமாய்ப் பொதுக்கூட்டம் கூட்டினர்கள்?
2. யார் யார் கையெழுத்திட்டு என்ன வெளியிட்டார்கள்?
3. எதன் அவசியத்தைப் பற்றி யார் யார் பேசினர்கள்?
4. யாரை? ஏன் தேவாலயத்திற்குள் விடவேண்டும்?
5. தேவாலயம், ஜாதி ஹிந்துக்கள், ஹரிஜனங்கள், டிரஸ்டிகள், அபிப்பிராயம், அநுமதித்தல்—பொருள் என்ன?
6. இதிலிருந்து நீங்கள் தெரிந்துகொண்ட முக்கியப் பொருள் என்ன?

ரேடியோ

சென்னை

5—11—39

காலை 7-30 மணிக்கு எஸ். ஜி. கிட்டப்பா பாட்டு ரிகார்டுகள். 8-தெலுங்கில் செய்திகள். 8-5 தமிழில் செய்தி

கள். 8-10 குழந்தைகளுக்குக் கல்வி சம்பந்தமான தமிழ் நிகழ்ச்சிகள். 8-40 வாத்தியம். 8-50 ஆங்கிலத்தில் செய்திகள். 9 முடிவு.

பிற்பகல்—1-35 அ. இ. ரே. வித்துவான் புல்லாங்குழல்—6-30 'பிரதிபந்தகம்' என்ற தெலுங்கு நாடகம்.

இரவு 7-15 மார்க்கட்டு நிலவரம்.......7-50 பாப்பா வெங்கட்டராமையர் கோட்டு வாத்தியம். 8-25 ஸ்ரீமதி எம். ஞானமோகினி பாட்டு. 9 புதிய சரிதை. 9-15 நகரச் செய்திகளும், இதர அறிவிப்புகளும்.

'சுதேசமித்திரன்'
3—11—39.

பயிற்சி

ரேடியோமூலம் நாம் அறிந்துகொள்ளும் செய்திகள் இவை என்பதை 10 வாக்கியங்களில் சொல்.

தென்னிந்தியாவில் 1885ஆ முதலில் ஸ்தாபித்த

சேலம் நர்சரித் தோட்டம்

நல்ல செடிகள் : புதிய விதைகள். சேலம் 3 ஆுத்திய ஒட்டு மாங்கன்றுகள், கொய்யா, மாதுளை, ஆரஞ்சு, எலுமிச்சை, ரோஸ், குரோட்டன் முதலிய பலவிதச் செடிகளும்; இங்கிலீஷ் காய்கறி, நாட்டுக் காய்கறி, புஷ்ப விதைகளும் விற்பனைக்குத் தயார். கேட்லாக்கு இனம்.

ச. கோ. இ. அப்துல் ரகிமான் சாயபு சன்; S. K. A. அப்துல் ரஜாக் சாயபு, புரோப்ரைட்டர், நர்சரி, சேலம்.

'சுதேசமித்திரன்'
3—11—39.

பயிற்சி

நர்சரித்தோட்டத்தில் என்னென்ன செடிவகைகள் கிடைக்கும்? அவற்றை நாம் எவ்வாறு உபயோகப்படுத்துகிறோம். என்பதை 15 வாக்கியங்களில் எழுதுக.

கேள்விகள்

1. பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் யாவை?
2. பத்திரிகை படிப்பதன் பயன் என்ன?

பயிற்சி

1. உன் ஊரில் நிகழ்ந்த ஏதாவது ஒரு சம்பவத்தை ஒரு பத்திரிகைக்கு எழுது.
2. உன் ஊரில் நடந்த ஒரு பொதுக்கூட்டம், மாணவர் சங்க ஆண்டுவிழா, சுகாதார வாரக்கொண்டாட்டம்—இவற்றைப் பத்திரிகைக்கு எழுது.
3. வாக்கியம் எவ்வாறு அமைந்திருக்கவேண்டும்? எழுவாய் பயனிலை எவ்வாறு அமையவேண்டும்? முருகன் வந்தது. என்பது எவ்வாறு பிழைபட்டது?
4. வந்தான், போனான், பறந்தது, சென்றனர், ஓடின—இவற்றிற்குச் சரியான எழுவாய்கள் எழுதுக. நாய், முருகன், மனிதர், மாடுகள், வள்ளி—இவற்றிற்குச் சரியான பயனிலைகள் எழுதுக.

இலக்கணம்

முருகன் நாளை பள்ளிக்கூடம் போனான். நாளை என்பது எதிர்காலச் சொல். போனான் என்பது இறந்த கால வினை.

குறிப்பு :—பத்திரிகைகளில் காணும் முக்கியச் செய்திகளைக் கத்தரித்து அதற்காக வைத்திருக்கும் குறிப்பு நோட்டுப்புத்தகத்தில் ஒட்டி வைத்துக் கொள்ளவேண்டும். அவற்றை அடிக்கடி திருப்பிப் பார்க்கவேண்டும். அவை வேண்டும்போது உதவும். சில குறிப்புகளை குறிப்புப்புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டால் போதும். இதுவே பத்திரிகை படிக்கும் சிறந்த முறையாகும்.

இவை ஒன்றையொன்று பொருந்தா. முருகன் நாளைப் பள்ளிக்கூடம் போவான், அல்லது முருகன் நேற்றுப் பள்ளிக்கூடம் போனான் என்று வரவேண்டும். அதாவது, ஒரு வாக்கியத்தில் ஒரே காலச் சொற்களே வரவேண்டும்.

கீழ்வருவனவற்றைத் திருத்துக :

வள்ளி நேற்றுப் பூந்தோட்டத்திற்குப் போகிறாள். நான் நாளை அங்கு வந்தான். நாய் நேற்று முயலைப் பிடிக்கிறது. மாடு நாளை புல் மேய்ந்தன.

---

13. திருவிதாங்கூர்ச் சமஸ்தானம்

கொச்சி	சமூக விடுதலை	வாயார
திருநாள்	தீயர்	மின்சார இயக்கம்
ஆற்றல்	இயற்கை வளம்	சர்வகலாசாலை
இயற்பெயர்	சேது	போக்கு வரவு
கல்வித் துறை	பார்வதிபாய்	அமைப்பு
தீவிரமாக	குடைந்த	திருவிதாங்கூர்
இயலாது	மஹாராஜா	திருவனந்தபுரம்
மலையாளிகள்	தாழ்ந்த	உயர் நீதிமன்றம்
சமர்த்தர்	உத்தியோக நிலையம்	பாக்கியம்
கவனிக்கப்பட்ட	திவான்	குலதெய்வம்
முன்னேற்றம்	அரசியல்	பத்மநாப சுவாமி
அறுபட்ட	முடிந்தன	சொத்து
வேறு வேறு	ஆர்வம்	தென்கோடி
காட்சி	விசேஷம்	

1. திருவிதாங்கூர் என்பது, கொச்சிச் சமஸ்தானத்திற்குத் தெற்கே, மேல் கடற்கரை ஓரமாக்

உள்ள சமஸ்தானம் ஆகும். இது பழைய சேர நாட்டின் ஒரு பகுதி ஆகும். இந்நாடு இயற்கை வளம் நிறைந்தது. காடுகள் பல இந்தச் சமஸ்தானத்தை அழகு செய்கின்றன. அக்காடுகளில் யானைகள் மிகுதியாக உள்ளன. காட்டுமரங்கள் அறுக்கப் படின், அறுபட்ட துண்டுகளைத் தூக்கி அடுக்கவும், அவற்றை வேறு வேறு இடங்கட்குக் கொண்டு செல்லவும் யானைகள் பயன் படுகின்றன.

2. திருவிதாங்கூரில் வீடுகள் மேடும் பள்ளமுமாகிய இடங்களிலேயே அமைந்திருக்கும். நிலம் ஓர் அளவு மேடாக இருக்கும்; அதனை அடுத்துப் பள்ளமாக இருக்கும். மோட்டார்ப் பிரயாணிகள் இந்த நாட்டு இயற்கை அழகைக் கண்டு களிக்கலாம். இரயிலில் செல்வோரும் குடைந்த மலைக்குள் இரயில் போவதையும், இருபுறங்களிலும் சோலைகள் இருந்து கண்களுக்கு விருந்து அளித்தலையும் மறத்தல் இயலாது! இயலாது!!

3. இச்சமஸ்தானத்தில் தென்னை மரங்கள், வாழை மரங்கள், பாக்கு மரங்கள், முதலியன விசேஷமானவை; முந்திரிச் செடிகளும் கணக்கற்றவை. இங்கு இருப்பவர் மலையாள பாஷையைப் பேசுபவர். அவர்கள் மலையாளிகள் எனப்படுவார்கள். அவர்கள் தேங்காய் எண்ணெயையே சமையலுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். அவர்கள் பார்க்கச் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறார்கள்.

4. அதனை இப்பொழுது ஆண்டு வருபவர் சித்திரைத் திருநாள் மஹாராஜா ஆவர். இவர் தாயார் சேது பார்வதி பாய் என்பவர். இவர் முயற்சி யால் அரசர் உயர்ந்த கல்வி முறையில் தேர்ச்சி பெற்ருர்; அரசாளும் ஆற்றல் பெற்ருர்.

திருவிதாங்கூர் மன்னர்

5. அரசரது இயற்பெயர் பலராம வர்மர். அவர் சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தவர். அதனுல், சித்திரைத் திருநாள் எனப்பெயர் பெற்ருர். அவர் சிறந்த தெய்வபக்தி உடையவர்; பந்தாட்டங்களில் விருப்பம் உடையவர்; கல்வித்துறையில் ஆர்வம்

கொண்டவர்; சமூகவிடுதலையில் ஊக்கம் கொண்டவர்; தீயர் முதலிய தாழ்ந்த வகுப்பாரும் கோவிலுக்குள் போகலாம் எனச் சட்டம் செய்த சமர்த்தர். இன்று அரசரை திருவிதாங்கூர் மக்கள் அனைவரும் வாயார வாழ்த்துகின்றனர்.

6. அரசர் பட்டம் பெற்று எட்டு ஆண்டுகள் முடிந்தன. இதற்குள் அவர் செய்துள்ள அரிய வேலைகள் பல் ஆகும். திருவிதாங்கூரில், கல்வி அதிகமாகப் பரவி இருக்கின்றது. பல புதிய உத்யோக நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன; தொழிற்சாலைகள் உண்டாக்கப்பட்டு உள்ளன. மின்சார இயக்கத்தால் பல வேலைகள் அங்கு நடைபெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. புதியசர்வகலாசாலை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. போக்கு வரவுக்குஉரிய சாலை அமைப்பு, பால அமைப்பு முதலிய வசதிகள் செவ்வையாகச் செய்யப்பட்டு உள்ளன. பெண்களுக்குக் கல்வி வசதி நிரம்ப அளிக்கப்பட்டு இருக்கிறது. இந்தியாவில் வேறு எந்தச் சமஸ்தானத்திலும் இவ்வளவு தீவிரமாகப் பெண்கள் முன்னேற்றம் கவனிக்கப்படவில்லை.

7. அரசருக்குப் பெருந்துணையாக இருந்து அரசியல் காரியங்களைக் கவனித்து நடத்தி வருபவர் 'திவான்' ஆவர். இப்போதைய திவான் சர். சி. பி. இராமசாமி ஐயர் என்பவர். இவர் சிறந்த கல்விமான்; அரசியல் அனுபவம் நிறைந்தவர்.

8. திருவிதாங்கூரின் தலைநகரம் 'திருவனந்த புரம்' என்பது. அதில் பல கல்லூரிகளும், உயர் நீதி மன்றமும், அரசர் அரண்மனையும், முக்கிய மான பெரிய உத்யோக நிலையங்களும் இருக்கின்றன. அங்கு, இவை யாவற்றுக்கும் மேலாக அரச பரம் பரையினரின் குலதெய்வமாகிய பத்மநாப சுவாமி கோவில் இருக்கின்றது. அக்கோயில் அரசர்க்கு உயிர்போன்றது. அதற்கு ஏராளமான சொத்து இருக்கிறது.

9. இச்சமஸ்தானத்தை அழகு செய்யும் மற்றோர் இடம் கன்னியாகுமரி முனை. இதுவே இந்தியாவின் தென் கோடி எல்லை. இந்த இடத்தில்தான் இந்து மஹா சமுத்திரம், வங்காளக் குடாக்கடல், அரபிக் கடல் ஆகிய மூன்றும் ஒன்று சேர்கின்றன. இந்த இடத்தில்தான் சூரியன் காலையில் கடலில் தோன்றலையும், மாலையில் கடலில் மறைதலையும் கண்டுகளிக்கலாம்.

கேள்விகள்

1. திருவிதாங்கூரின் இயற்கைச் சிறப்பு யாது?
2. அதன் முக்கிய விளைபொருள்கள் என்ன?
3. மலையாளிகள் எப்படிப்பட்டவர்கள்?
4. அரசருடைய இயற்பெயர் யாது? பிறந்த நாட்பெயர் யாது?
5. அரசருடைய குணாதிசயங்கள் எவை?
6. அவர் செய்துள்ள வேலைகள் எவை?

7. சமஸ்தான திவான் யார்? அவர் பெருமை யாது?
8. தலை நகரம் எது? அதன் சிறப்பு யாது?
9. கன்னியாகுமரி—இதன் சிறப்பு என்ன?

பயிற்சி

1. குமரிமுனைச் சிறப்பை 6 வாக்கியங்களில் சொல்.
2. திருவனந்தபுரச் சிறப்பை 6 வாக்கியங்களில் எழுது.
3. இச் சமஸ்தானத்தின் இயற்கை அமைப்பை 12 வரிகளில் எழுது.
4. அரசரது வேலையை 12 வரிகளில் எழுது.
5. பழைய, நிறைந்தது, மேடு—எதிர்ப்பதங்கள் கூறுக.
6. சமஸ்தானம், முயற்சியால், ஆர்வம், சட்டம்—இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
7. தாயார், மக்கள், யானைகள், சமுத்திரம், திவான், உலகம்—திணை, பால் எண் கூறுக. தாயார்—ஆண்பால் என்ன?
8. எழுவாய் பயனிலைகள் எவ்வாறு அமையவேண்டும்? ஒரு வாக்கியத்தில் திணை, பால், எண், இடம், காலம்—இவை எப்படி அமைந்து இருக்கவேண்டும்? 'நான் வந்தான்' என்பது எவ்வாறு பிழைபட்ட வாக்கியமாகும்?

இலக்கணம்

நிறுத்துக் குறிகள்: காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வியப்புக் குறி, வினுக்குறி, மேற்கோட் குறி—இவ்வைந்து நிறுத்துக் குறிகளும் உங்கட்குத் தெரியும். நிறுத்துக் குறிகள் இடாவிட்டாலும், நிறுத்துக் குறிகள் உள்ள இடங்களில் அவ்வக்குறிகளுக் கேற்றவாறு நிறுத்தியும், வியந்தும், வினவியும் படிக்காவிட்டாலும் பாடத்தின் கருத்து விளங்காது. காற்புள்ளி உள்ள இடத்தில் ஒரு மாத்திரை நிறுத்தவேண்டும். முற்றுப் புள்ளிக்கு நான்கு மாத்திரை நிறுத்தவேண்டும்.

மாத்திரையாவது—கை நொடிப்பொழுதும், கண்ணிமைப் பொழுதும் ஆகும். ஒவ்வொரு வாக்கிய முடிவிலும் முற்றுப் புள்ளி இடவேண்டும். ஒரே எழுவாய் இரண்டு அல்லது பல வாக்கியங்களுக்கு வந்தால் முதலிலுள்ள ஒவ்வொரு வாக்கிய முடிவிலும் அரைப்புள்ளி இடவேண்டும். ; இதுதான் அரைப்புள்ளி.

உதாரணம் :—'அவர் சிறந்த தெய்வபக்தி உடையவர் ; பந்தாட்டங்களில் விருப்பம் உடையவர் ; கல்வித் துறையில் ஆர்வம் கொண்டவர் ; தீயர் முதலிய தாழ்ந்த வகுப்பாரும் கோயிலுக்குள் போகலாம் எனச் சட்டம் செய்த சமர்த்தர்.—இந் நான்கு வாக்கியங்கட்கும் 'அவர்' என்னும் ஒரே எழுவாய் வந்தமை காண்க.

---

14. எழுதும் திறமை

சிவஞான சுவாமிகள்	கைலாயக் காட்சி	ஐயன்மீர்
பச்சையப்பன் கல்லூரி	சிற்றிலக்கியம்	நிகழும்
சிறுகதைப் போட்டி	நிகழ்ச்சி முறை	அதுபோது
கட்டுரைப் போட்டி	பேராசிரியர்	கரந்தை
வெள்ளிப் பதக்கம்	குமர குருபரர்	திருவாளர்
தமிழ்ப்பெருந்தேவி	பண்டித மணி	காரியதரிசி
திருப்பள்ளி எழுச்சி	கலித்தொகை	
செய்யுளிசைப் போட்டி	யாழ்ப்பாணம்	

1. கரந்தைத் தமிழ்ச்சங்கம்

28-வது ஆண்டுவிழா

ஐயன்மீர் !

நிகழும் பிரமாதி ஆண்டு, ஆவணித்திங்கள் நாள் 3, 4 (19, 20-8-1939) சனி, ஞாயிறுகளில் ஷ விழாக்கொண்டாடப் பெறும். அதுபோது,

தலைவர் :

யாழ்ப்பாணத்துப் பரமேசுரக் கல்லூரித் தலைவர்

பெருமைமிக்க திரு. அ. நடேசபிள்ளை, B.A., B.L., M.L.C., அவர்கள்

முதல் நாள்

சொற்பொழிவாளர்கள் : பொருள் :

1. திருவாளர், வித்துவான்,
மர். இராசமாணிக்கம், B.O.L. அவர்கள்,
—"சங்கநூல்களும் தொல்காப்பியமும்"

2. கரந்தைக் கவியரசு, R. வெங்கடாசலம்
பிள்ளை அவர்கள், —"கலித்தொகை"

3. பண்டித மணி,
மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள்,
—"சிவஞான சுவாமிகள்"

இரண்டாம் நாள் :

சொற்பொழிவாளர்கள் : பொருள் :

1. ச. க. கோவிந்தசாமி பிள்ளை
அவர்கள், M.A. —"பண்டைத்தமிழர் நாகரிகம்"

2. வித்துவான், ஔவை,
சு. துரைசாமிபிள்ளை அவர்கள், —தேவாரமாண்பு'

3. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்
அவர்கள், —"குமரகுருபரர்"

4. சுவாமி விபுலானந்தா, B. Sc.
(லண்டன்) அவர்கள், —"கைலாயக் காட்சி"

இவ்விழாவிற்குத் தாங்கள் தங்கள் உற்ருர், உற வினருடன் வந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டு கிருேம்.

அன்புள்ள,

ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை, B.A., B.L., சங்க அமைச்சர்.

த. வே. உமாமகேசுரம்பிள்ளை, B.A. B.L., சங்கத்தலைவர்.

கருந்திட்டைக்குடி,
தஞ்சை
9—8—39.

2. தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கம், சென்னை.

சங்கத் தலைவர் :

பேராசிரியர் ச. த. சற்குணர், B. A. அவர்கள்

பெரியீர்,

நிகழும் 1939-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ம் நாளும், 29-ம் நாளும் தென்னிந்தியத் தமிழ்க்கல்விச் சங்க ஆண்டுவிழா, சென்னைப் பச்சையப்பன் கல்லூரிக்கு அடுத்த நான்காவது தெருவாகிய ஸ்டிரிங்கர் வீதியில் (Stringer's Street) உள்ள கோவிந்தப்ப நாயகர் பள்ளிக்கூடத்தில், கீழ்க்கண்ட நிகழ்ச்சி முறைப்படி சொற்பொழிவுகள் நடைபெறும்.

இரண்டாம் நாள் ஞாயிறன்று திரு. சற்குணர் சிறுகதைப் போட்டியில் முதலாக வந்தவருக்குத் தங்கப் பதக்கமும், இரண்டாவது வந்தவருக்குவெள்ளிப்

பதக்கமும், கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும்.

தமிழ்ப்பெருந்தேவி திருப்பள்ளி யெழுச்சியின் செய்யுளிசைப் போட்டியும் ஞாயிறன்று நடைபெறும். மாணவர்கள் இதில் கலந்துகொள்ளலாம். இந்நூல் 18, முத்து முதலி தெருவில் கிடைக்கும்.

28-1-39 சனிக்கிழமை மாலை 4 மணியிலிருந்து,

அவைத்தலைவர்

திருவாளர் திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள்,

நவசக்தி ஆசிரியர்.

சொற்பொழிவாளர் : பொருள் :

1. திரு. வித்வான் ம. இராசமாணிக்கம் பிள்ளை,
   B.O.L. தலைமை ஆசிரியர்,
   சென்னைக் கல்லூரி,
   முத்தியாலுபேட்டை. —"தமிழ்நாட்டு வரலாறு"

2. திரு. வித்வான் T. P. மீனாட்சிசுந்தரம்
   பிள்ளை அவர்கள் M.A., B.L., M.O.L.
   —"நம்வாய்ப் பங்காளிகள்"

29-1-39 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணியிலிருந்து

அவைத்தலைவர் :

திருவாளர் T. S. நடராஜம் பிள்ளை அவர்கள் B.A., B.L.

சொற்பொழிவாளர் : பொருள் :

1. திரு. வித்வான் V. வேங்கடராஜுலு
   ரெட்டியார் அவர்கள், துணை விரிவுரையாளர்,
   சென்னைப்பல்கலைக்கழகம்.—"பிற்காலச் சிற்றிலக்கியம்"

2. திவான்பகதூர் **Dr. S.** கிருஷ்ணசாமி
அய்யங்கார் அவர்கள் **M.A.** மாஜி சரித்திரப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்.
—"இந்திய நாகரிகத்தில் தமிழின் நிலைமை"

3. திரு. **T. S.** நடராஜம் பிள்ளை
அவர்கள் **B.A.B.L.** —"தமிழும் கற்பனையும்"

தாங்கள் வந்து இவ்விழாவைச் சிறப்பிக்கும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
அ. கி. ப்ரந்தாமன்,
காரியதரிசி.

3. திருமண அழைப்பிதழ்

திருவருள்	சுபதினம்	மணவினை
இறைவன்	கன்னி	இல்லம்
முன்னிட்டு	லக்கினம்	அழைப்பிதழ்
நக்ஷத்திரம்	திருநிறை செல்வன்	
சுபயோகம்	திருநிறை செல்வி	

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு, நிகழும் பிரமாதி ஆண்டு ஆனித்திங்கள் 17-ம் தேதி (1-6-39) வெள்ளிக்கிழமை கார்த்திகை நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 5 மணிக்குமேல் 6 மணிக்குள்ளாக, கன்னி லக்கினத்தில்,

எனது மூத்த மகன் திருநிறை செல்வன் பொன்னம்பலத்துக்கும்	திருவாரூர், நல்லமுத்து பிள்ளை அவர்கள் இளையமகள் திருநிறை செல்வி பவழக்கொடிக்கும்

திருமணம் நடத்தப் பெரியோர்களால் உறுதி செய்யப்பட்டிருப்பதால், ஷை திருமணம் சிதம்பரம் வண்ணாரப்பேட்டை 17-ம் எண்ணுள்ள எனது இல்லத்தில் நடைபெறும். அதுபோது தாங்கள் தங்கள் உற்றார் உறவினருடன் வந்திருந்து மணவினையைச் சிறப்பித்து, மணமக்களை வாழ்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம்.
25-5-39 } இப்படிக்கு,
ம. கந்தசாமி பிள்ளை

குறிப்பு: சுபயோக சுபதினம் - நன்னாள். லக்கினம்-ஓரை. நக்ஷத்திரம் - நாள். எண் - நெம்பர். இல்லம் - வீடு. தேதி - நாள்.

பயிற்சி

1. ஊர் பெயர்களை மாற்றி வேறு ஒரு திருமண அழைப்புத் தாள் எழுதுக.
2. நன்னாள், ஓரை, நாள்—இவற்றை உபயோகித்து ஓர் அழைப்பிதழ் எழுதுக.

4. பாண்டு (பத்திரம்)

கஸ்பா	குடும்பச் செலவு	வட்டி
பிராமிசரி நோட்டு	ரொக்கம்	முதல்
பாண்டு	மூவலகு	சம்மதி
பத்திரம்		

17—9—1940 கோயமுத்தூர் ஜில்லா கோபிசெட்டிபாளையம் தாலுகா, சிறுவலூர்க் கிராமம், அங்கம்பாளையத்தில் இருக்கும் வெ. முருகஞ் செட்டி

யார் மகன், பழனியப்பசெட்டியாருக்கு, ஷை ஜில்லா, ஈரோடு தாலூகா, பெருந்துறைக் கிராமம் கஸ்பாவி லிருக்கும் அருணாசல முதலியார் மகன், பெரியண்ண முதலியார் எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டுப் பாண்டு, யாதெனில்,

நான் எனது குடும்பச் செலவுக்காகத் தங்களிடம் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டது ரூ. 200—0—0. மூவலகு ரூபாய் இரு நூற்றுக்கும், மாதமொன்றுக்கு நூற்றுக்கு 6 அணா வீதம் வட்டி சேர்த்து, கூடிய வட்டியும், முதலும் தங்களுக்காவது, தங்கள் உத்திரவு பெற்றவர்களுக்காவது வேண்டும்போது கொடுக்க உடையவன், என் மனச் சம்மதியால் எழுதிக்கொடுக் கப்பட்டது.

பெரியண்ண முதலியார்.

சாக்ஷிகள் :

அங்கமுத்து பிள்ளை, பெருந்துறை,

அண்ணாசாமி நாயுடு, பெருந்துறை.

எழுதியது, M. வடிவேல் பிள்ளை பெருந்துறை.

குறிப்பு:—பிராமிசரி நோட்டுப் பாண்டு-கைக்கடன் பத்திரம். ரொக்கம் - கைக்கடன். உத்திரவு - கட்டளை. சம்மதியால் - ஒப்புமையால். சாக்ஷி - சான்று. கஸ்பா - கிராமத்தின் தலை நகர். மூவலகு - முன் குறித்த தொகை.

பயிற்சி

1. உனக்கு இஷ்டமான ஊர், பெயர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு பத்திரம் எழுது.
2. கைக்கடன் பத்திரம் முதலிய சொற்களை உபயோகித்து ஒரு பத்திரம் எழுது.
3. இதை மனத்திற்குள் ஊன்றிப் படித்து, எழுது முன்சொல்.

பயிற்சி

1. காலை $6\frac{1}{2}$ மணி, புதன்கிழமை, முகூர்த்தம்—ஒரு திருமண இதழ் எழுதுக.
2. நாளை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு ஊர்ச்சாவடியில் ஒரு பொதுக் கூட்டம்—ஒரு விளம்பரத்தாள் எழுதுக.
3. சனி, ஞாயிறு இருநாளும் கல்வி மகாநாடு நடைபெறும்—இடம், தலைவர், மற்ற உறுப்பினர்கள் பெயரெல்லாம் நீயே ஏற்படுத்திக்கொண்டு மகாநாட்டு வெளியீடு ஒன்று எழுதுக.
4. 6-7-37-ல் எழுதிய பத்திரம். இன்று வருஷ மாதம் தேதி என்ன? 500 ரூபாய். வட்டி நூற்றுக்கு 5 ரூபாய். ஒரு பத்திரம் எழுதுக.
5. நிறுத்துக் குறிகள் எவை? அவை எங்கெங்கே இடவேண்டும்? அரைப்புள்ளி இடும் இடம் எது? ஏன் அங்கு அரைப்புள்ளி இடவேண்டும்? முற்றுப்புள்ளி இட்டால் என்ன? 'முருகன் பாடம்படித்தான் சோறு சாப்பிட்டான் பள்ளிக்குப் போனான் விளையாடினான் பழயபடி திரும்பி வீட்டுக்கு வந்தான்'—வேண்டிய இடத்தில் அரைப்புள்ளி இடுக.

இலக்கணம்

வினையாலணையும் பெயர்:

அவர் ஐயம் அறக்கற்றார். கற்றவர் நல்லவர். கற்றவரைக் கண்டால் வணங்கு. கற்றார் என்பது வினைமுற்றுச் சொல். கற்றவர் என்பது பெயர்ச்சொல். இது கற்றார் என்னும் வினை அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். அதனால் இது, வினையாலணையும் பெயர் எனப்படும்.

வினைமுற்றுச் சொல் வேற்றுமை யுருபேற்காது. வினையாலணையும் பெயர் கற்றவரை, கற்றவரால், கற்றவர்க்கு, கற்றவரோடு, என வேற்றுமை யுருபுகளை ஏற்கும்.

உதாரணம்—நின்றவனை, வந்தவனுக்குக் கொடு, இறந்தவருடைய பொருள். வந்தான், போனான், தூங்கினான், படித்தான், பறித்தாள், சூடினாள்-வினையாலணையும் பெயர்களாக்குக.

15. இராஜா இராம்மோஹனராய்—பாட்டு

மோஹனராய்	பேணினவர்	கொழுநன்
கொளுத்தி	சாக்கடை	நிலவுக
பிரமசமாஜம்	உபநிடதம்	நாமம்
		இலங்குவை

1. இப்படத்தில் இருப்பவர் ராம் மோஹனராய் தம்பீ!
இவர் பெரிய அறிஞரே; நம் இந்தியர்தாம் தம்பீ!

2. பெண்களுக்கே பலநலங்கள் பேணினவர் தம்பீ!
பெண்களெலாம் படித்துயரப் பெரிதுழைத்தார் தம்பீ!

3. கொழுநனுடன் மனைவியையுயி ரோடுவைத்தே தம்பீ!
கொளுத்திவந்த கொடுமைதனைக் கொன்றுவிட்டார் தம்பீ!

4. சாதிபேதச் சாக்கடைகூ டாதிங்கென்றார் தம்பீ!
நீதிஒன்றே என்றுமிங்கே நிலவுகென்றார் தம்பீ!

5. பலமதங்கள் ஆராய்ந்தே பயனடைந்தார் தம்பீ!
பிரம்மசமா ஜத்தினையே பிறப்பித்தார் தம்பீ!

6. பள்ளிகளை வைப்பதற்கே பாடுபட்டார் தம்பீ!
பலமதத்தார் உயர்வடையப் பாடுபட்டார் தம்பீ

7. உபநிடத உண்மைகளை உரைத்திட்டார் தம்பீ!
உள்ஒன்றும் புறமொன்றும் உரையாதார் தம்பீ!

8. 'இவர் நாமம் வாழ்க'என்றே இனிதுரைப்போம் தம்பீ!
இப்பெரியார் போலநீயும் இலங்குவையோ? தம்பீ!

குறிப்பு:

3. உடன்கட்டை ஏறல்

7. உபநிடதம்—உபநிஷத்துகள்; 'கடவுள் ஒருவரே' என்பது உபநிடதக் கொள்கை.

உள் - மனம். புறம் - வாய்ப் பேச்சு.

8. இலங்குவையோ ?—விளங்குவாயோ ?

கேள்விகள்

1. இராஜாராம் மோஹனராய் என்பவர் யார்?
2. அவர் பெண்களுக்குச் செய்த நன்மை என்ன ?
3. அவர் நமக்குச் செய்த நன்மை என்ன ?
4. அவருடைய கொள்கை யாது ?

பயிற்சி

1. மோஹனராய் நமக்குச் செய்த நன்மைகளை 10 வாக்கியங்களில் சொல்.
2. அவருடைய கொள்கையை 5 வாக்கியங்களில் சொல்.
3. அவர் பெண்களுக்குச் செய்த நன்மையை 8 வாக்கியங்களில் சொல்.
4. வினையாலணையும் பெயர் என்பது என்ன? வினைமுற்றுக்கும் அதற்குமுள்ள வேற்றுமை என்ன? இப்பாடத்திலிருந்து வினையாலணையும் பெயருக்கு 5 உதாரணங்கள் எடுத்து எழுதுக.

இலக்கணம்

முருகன் ஓடினான். நாய் ஓடிற்று. முருகன் என்ன திணை? நாய் என்ன திணை? முருகனும் நாயும் ஓடினார்கள். என்ன திணை? என்ன பால்? உயர்திணைச் சொல்லையும், அஃறிணைச் சொல்லையும் எண்ணி ஒரு வினை கொண்டு முடிக்கும்போது, அவை உயர்திணைப் பலர் பால் வினைமுற்றைக் கொண்டுதான் முடியும்.

வள்ளி போனாள் பூனை போனது	இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒன்று சேர்.
நான் வந்தேன் நாய் வந்தது	,, ,,
நீ ஓடினாய் குதிரை ஓடிற்று	,, ,,

16. செய்யுளும் வசனமும்

செய்யுள்

கோடு	பாங்கன்	ஈர்ந்தனர்
பேடு	சம்புகன்	ஏகி
கரும் பாம்பு	மஞ்சனச் சாலை	நறுக்கினர்
நலிந்து	பொந்தில்	உபாயம்
மெலிந்து	பொன்னணி	தங்கிற்று

கோடுறு கிளையில் காகங் கூடுவைத் தனேக காலம்
பேடோடு கூடிவாழும் பெருமரப் பொந்தில் வந்தே,
ஆடிய கரும்பாம் பொன்றங் கதுபெறு முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட ; நலிந்துளம் மெலிந்து வாடி. 1

தன்னுயிர்ப் பாங்க னான சம்புகன் அருகு போயிங்
கென்னசெய் குவனா னென்ன ; இதைக்கொல அரிதோ ? [நீ போய்
மன்னவன் தேவி யாடும் மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக, பொந்தில் என்ன. 2

காகமப் படியே செய்யக் ; காவலன் ஏவலாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை ஈர்ந்தனர் ; ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற நறுக்கினர் இருதுண் டாக.
ஆகையால், 'உபாயத் தாகா திலை'என அறையும் பின்னும்.3

—பஞ்ச தந்திரம்

வசனம்

ஒரு மரக் கிளையில், இரண்டு காகங்கள் கூடு வைத்து நெடுங்காலம் வாழ்ந்து வந்தன. அம்மரப் பொந்தில் ஒரு கரும்பாம்பு வந்து தங்கிற்று. அது, காக்கை இடும் முட்டைகளை யெல்லாம் உடைத்துக் குடித்துக்கொண்டே வந்தது.

அது கண்ட காக்கை மனம் நொந்து, தன் சிநேகனான சம்புகன் என்னும் நரியிடம் சென்று, 'இதற்கு என்ன செய்வேன்' என்று கேட்டது. நரி, 'அப்பாம்பைக் கொல்லவா வந்தது? நீ போய், இவ்வூர் அரசி நகைகளைக் கழற்றி வைத்துவிட்டுக் குளிக்கும்போது, ஒரு பொன் சங்கிலியை எடுத்து வந்து மரப் பொந்தில் போடு' என்றது. காகம் அப்படியே செய்தது.

காகம் பொன்சங்கிலியை எடுத்துப்போவதைக் கண்ட அரசி சத்தமிட்டாள். காவலாளிகள் காகத்தைத் துரத்தினர். காகம் பொன் சங்கிலியை மரப் பொந்தில் போட்டது. காவலாளிகள் பொந்தை வெட்டினர். பொந்துக்குள் இருந்த பாம்பு சீறிற்று. காவலர் கோடரியால் அதை இரு துண்டாக நறுக்கிக் கொன்றுவிட்டு, சங்கிலியை எடுத்துச் சென்றனர். 'உபாயத்தாலாகாதது ஒன்றுமில்லை' என்பது இக்கதையின் நீதி.

செய்யுள்

பரிதிதரன்	புலம்	புகல்வேன்
சுமதி	விலாப்புடை	பயிர் காத்திடுவோர்
புன்கழுதை	தேக்கெறிந்து	இராகம்
இடர்	தாவில்	நுறுங்க
நெடுஞ் செவியன்	தண்ணூர்	புடைத்திட்டார்
பொருவில்	எறிக்கும்	அகந்தை

கீழ்வரும் பாடல்களை மனத்திற்குள் படி; படித்தபின் கதையை எழுது; கதைக்குத் தலைப்பும் கொடு.

பரிதி தரனிவ் வாறுரைக்கப், பைம்போன் பேற்றேன், இசைபாடி
ஒருபுன் கழுதைக் குற்றதுபோல் உனக்கிவ் விடர்தான் உற்றதெனத்
தெரிய வதுகூ றென்ன, நெடுஞ் சேவிய னென்னும் ஒரு கழுதை,
போருவில் சுமதி நரியினேடு புலத்தில் பயிர் மேய்ந் துறுநாளில்; 1

மேவு மோருநாள் விலாப்புடைகள் வீங்க மேய்ந்து தேக்கேறிந்து
தாவில் கழுதை நிலவேறிக்கும் தண்ணர் இரவி னிற்போழுது
போவதற்குச் 'சங்கீதம் புகல்வேன் நீ கேள்;' என, நரியும்
'ஏவு முனது குரல்கேட்டால் கோல்வார் பயிர்காத் திடுவோரே.' 2

என்று சோல்லக் கேளாமல் இராகம் பாடக், குரல் கேட்டே
ஒன்று கழுதை எனஉழவர் உடம்பு நறுங்கப் புடைத்திட்டார்.
அன்று நரிதான் 'மாமா, வேன் பேச்சைக் கேளா வகந்தையினல்
இன்று பட்டாய்.' எனவேசிற் றேன்றுன் போன்பேற் றுன்றுனே. 3

—பஞ்சதந்திரம்

குறிப்பு:—பரிதிதரன், பைம்பொன் பெற்றேன் - நண்பர்கள்.

பயிற்சி

1. இவ்வாறே பல கதைப் பாடல்களைப்பாடி, அதில் கூறும் கதையை உரைநடையில் எழுதிப் பழகு.
2. பாடல்களில் வரும் சொற்களின் பொருள்களையும் தெரிந்து கொள்.
3. அச்சொற்களை உபயோகித்தும், அச்சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்களை உபயோகித்தும் கதை எழுதிப் பழகு; உன் சொந்தச் சொற்களை உபயோகித்தும் எழுதிப் பழகு.
4. உயர்திணைச் சொல்லையும், அஃறிணைச் சொல்லையும் எவ்வினை கொண்டு முடிக்க வேண்டும்? நான்கு உதாரணம் கொடு.

17. நீர்ப்பயணம்

பக்கிங்ஹாம் கால்வாய்	படகு	குட்டை
பிரயாணக்கப்பல்	கட்டுமரம்	எதிர்க்கரை
வியாபாரக்கப்பல்	மிதவை	கம்பம்
நீர்நிலைகள்	கோடீஸ்வரர்	முரட்டுத்துணி
இலேசாகி	அடுக்குகள்	எகிப்தியர்
நாகரிகம்	பயங்கரமான	தத்தம்
ஆஸ்ட்ரேலியா	மிதக்கும் நகரம்	நாகரிகம்
நீராவிக்கப்பல்	சுலபமாக்கிய	டன்
பாய்மரக்கப்பல்	நன்றி செலுத்த	எஞ்சின்
தோணி	கடமைப்பட்டு	பயணம்

1. பிள்ளைகளே, நீங்கள் நமது நாட்டில் உள்ள குளம், குட்டை, ஆறு முதலிய நீர் நிலைகளில் பிள்ளைகள் நீந்துதலைப் பார்த்து இருப்பீர்கள் அல்லவா ? அவர்கள் மூச்சை அடக்கி, அதனால், இலேசாகித் தண்ணீரில் மிதக்கவும் நீந்தவும் பழகி இருக்கிறார்கள். சிலர் வாழை மரத்தை மிதவையாகப் போட்டு அதன் மீது சென்று ஆற்றின் எதிர்க்கரையை அடைவதும் உண்டு. சிலர் இலேசான மரங்கள் இரண்டைக் கட்டி ஆற்றில் விட்டு அவற்றின் மீது உட்கார்ந்து அக்கரை சேர்தலும் உண்டு.



கட்டு மரம்

2. இங்ஙனம் மரக்கட்டைகளைச் சேர்த்துக்கட்டிக்கடலில் சென்று மீன் பிடித்துவந்தார்கள். அவர்களுடைய மிதவைக்கு

'கட்டுமரம்' என்பது பெயர். இதற்குப் பிறகு சிலர் ஆராய்ச்சி செய்து சிறிய தோணி, படகு இவற்றைக் கட்டி மிதக்க விட்டார்கள்; அவற்ருல் ஆற்றைத் தாண்டினுர்கள்; கடலில் சென்று மீன் பிடித்தார்கள்.



தோணி

3. இவற்றிற்குப் பிறகு சிலர் ஆராய்ந்து, காற்றின் வேகத்தால் படகுகள் அதிக தூரம் கடலிற் போகலாம் என்பதைக் கண்டனர்; சிறிய கப்பல்களைக் கட்டினுர்கள்; அவற்றில் உயரமான கம்பத்தை நட்டு முரட்டுத் துணியைக் கட்டினுர்கள். காற்று அந்தத் துணியில் அடிக்கும்; அடிக்கும் திசை நோக்கிச் சிறு கப்பல் போகும். இது 'பாய் மரக் கப்பல்' எனப்படும்.



பாய்மரக் கப்பல்

4. படத்தைப் பாருங்கள். இது ஒரு வகைப் படகு. இப்படகுகள் பல நெல்லூர் முதலிய இடங்களிலிருந்து அரிசி மூட்டைகளைப் பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகச் சென்னை முதலிய இடங்கட்குக் கொண்டு வருகின்றன. இவை, பலர் ஏறிச் செல்லவும், பண்டங்களைத் தாங்கிச் செல்லவும் பெரிதும் பயன்படுகின்றன.



படகு

5. வெளி நாடுகட்குச் சென்றுவரப் பயன்பட்டவை பாய் மரக் கப்பல்கள். சீனர், எகிப்தியர், நம் முன்னோரான தமிழர் முதலியோர் இப்பாய் மரக் கப்பல்களையே பழைய காலத்தில் உபயோகித்தனர்; தங்கள் நாட்டுச் சாமான்களை வெளி நாடுகட்கு இவற்றின் மூலம் கொண்டு சென்றனர்; அந்நாடுகளில் உள்ள பொருள்களைத் தத்தம் நாட்டுக்குக் கொண்டு மீண்டனர். இப்பாய் மரக் கப்பல்கள் உலக மக்களைப் பழைய காலத்தில் ஒன்று படுத்தின; பலவகை நாகரிகங்களை ஒன்று படுத்தின; பலவகைப் பாஷைகளை உலகத்தார் அறிய வசதி அளித்தன. ஐரோப்பியர் இக்கப்பல்களைக் கொண்டே அமெரிக்கா, இந்தியா, ஆஸ்ட்ரேலியா முதலிய நாடுகளை முதன் முதல் கண்டு பிடித்தார்கள்.

6. இவற்றிற்குப் பிறகு தோன்றியவை நீராவிக் கப்பல்கள். இவை நீராவியின் சக்தியால் கடல் பயணம் செய்கின்றன. இவை சுமார் நூறு ஆண்டுகளாக இருந்துவருகின்றன. இவை உண்டான பிறகு கப்பல் பயணம் எளிதாகி விட்டது. காற்றின் 'தயவு இவற்றிற்கு வேண்டுவதில்லை. இக்கப்பல்களில் பெரியவை உண்டு; சிறியவையும் உண்டு. இவை ஆயிரக்கணக்கான 'டன்' நிறை உள்ளவை. இவற்றில் பிரயாணக் கப்பல்கள், வியாபாரக் கப்பல்கள் என இருவகை உண்டு.

7. வியாபாரக் கப்பல்களில் இரும்புஎஞ்சின்கள், மோட்டார் வண்டிகள் முதலிய பாரமான

பொருள்களும், மூட்டை மூட்டைகளாகத் தானியங் களும், பெட்டி பெட்டிகளாகக் காகிதம், இரப்பர்ச் சாமான்கள், மருந்து வகைகள் முதலிய பலப்பல பொருள்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட் டிற்கு இறக்குமதி ஆகின்றன. இக்கப்பல்கள், தம் நாடுகளில் இல்லாதவற்றைப் பிறநாடுகளிடம் பெற்



சென்னைத் துறைமுகம்

றுத் தம் நாடுகட்கு மீள்கின்றன. நமது நாட்டி லிருந்து உலகத்தின் எந்தப் பாகத்திற்குப் போக வேண்டும் என்று விரும்பினாலும் பிரயாணக் கப்பல் களில் போகலாம். அவற்றில் இரண்டு முதல் பல அடுக்குகள் இருக்கும். அவற்றில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு அறைகள்

உண்டு. முதல் வகுப்பில் பெரிய கோடீஸ்வரர்களே பிரயாணம் செய்வார்கள். இரண்டாம் வகுப்பில் உத்யோகஸ்தர்கள் செல்வார்கள். எளிய மக்கள் மூன்ரும் வகுப்பில் பயணம் ஆவார்கள்.

8. ஆழமான - பார்க்கப் பயங்கரமான பெரிய சமுத்திரங்களில் எல்லா வசதிகளேயும் கொண்டுள்ள இப்பெரிய கப்பல்கள் போவது, நகரங்களே மிதந்து செல்லுதல் போலக் காணப்படும். இங்ஙனம் நீர்ப்பயணத்தைச் சுலபமாக்கிய பேரறிஞர்க்கு உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறது அன்ரே?

கேள்விகள்

1. மிதவை—என்பது யாது?
2. மனிதர் நீரில் செல்ல முதலில் கைக்கொண்டவை எவை?
3. பெரிய ஆறுகளிலும் கால்வாய்களிலும் பிரயாணம் செய்பவை எவை? அவற்ருல் நமக்கு என்ன நன்மை?
4. பாய்மரக்கப்பல் ஏன் உண்டானது? அதன் சேவையாது?
5. இப்போதைய கப்பல்கள் எவை? அவற்றின் தொண்டு யாது?

பயிற்சி

1. கடல் பயணம் பற்றி 12 வாக்கியங்கள் சொல்.
2. கட்டு மரத்திலிருந்து மனிதன் நீராவிக் கப்பலேக் கண்டு பிடிக்கும் அளவும் செய்த முயற்சிகள் எவை என்பதை 12 வாக்கியங்களில் சொல்.
3. பலவகை, மிதக்கவும், வெளிநாடு, பலப்பல அக்கரை—எதிர்ச்சொற்கள் எவை?
4. கட்டுமரம், முரட்டுத்துணி, திசைநோக்கி, சுமார், வசதிகளேயும்—தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
5. மூட்டை மூட்டைகளாக, பெட்டி பெட்டிகளாக—என்ன சொற்கள்?

6. நாட்டில் உள்ள, பார்த்து இருப்பீர்கள், காற்று அந்தத் துணியில், பெரியவை உண்டு—இச்சொற்களைச் சேர்த்தெழுதுக.

நீராவிக்கப்பல், நாட்டுச்சாமான், வேண்டுவதில்லை, பலப் பல, எந்தப்பாகத்திற்கும்-இச்சொற்களைப் பிரித்தெழுது.

7. தன்மைப் பன்மைப் பெயர், இறந்தகாலத் தன்மை ஒருமை வினைமுற்று, உயர்திணைப் பலர்பால் படர்க்கை எதிர் கால வினைமுற்று, அஃறிணை ஒன்றன்பால் நிகழ்கால வினைமுற்று—நீ படித்த பாடங்களிலிருந்து இவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

8. வினையாலணையும் பெயரென்பது யாது? அதற்கும் முற்று வினைக்கும் உள்ள வேற்றுமை என்ன?

கீழ் வருவனவற்றை இன்னின்ன கால வினையாலணையும் பெயர் என எடுத்தெழுதுக.

ஓடுகிறவனைத் தடுக்காதே. செய்பவரைப் பார்ப்போம். இறந்தவரைப் பழிக்காதே. தூங்குகிறவனை எழுப்பாதே.

இலக்கணம்

செய்வினை—செயப்பாட்டு வினை

முருகன் படம் எழுதினான், முருகன் எழுதினபடம். முருகனால் எழுதப்பட்ட படம். முருகன் படம் எழுதினான்—என்னும் வாக்கியத்தில் எழுவாய், செயப்படு பொருள், பயனிலை மூன்றும் ஒழுங்காக இருக்கின்றன. முருகன் எழுதின படம்—என்னும் வாக்கியத்தில் செயப்படுபொருள் (படம்) ஈற்றில் இருக்கிறது. இங்கே 'எழுதின' என்பது செய்வினை எனப்படும். 'எழுதப் பட்ட' என்பது செயப்பாட்டுவினை எனப்படும். 'படு' என்னும் சொல் செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்.

	செய்வினை.	செயப்பாட்டுவினை.
உதாரணம்:—	தச்சன் கட்டின வீடு.	தச்சனால் கட்டப்பட்டவீடு.
	வள்ளி கட்டிய மாலை.	வள்ளியால் ——— மாலை.
	குயவன் செய்த குடம்.	குயவனால் ——— குடம்.
	தாயார் ——— சோறு.	தாயாரால் சமைக்கப்பட்ட சோறு.
	அணில் தின்ற பழம்.	அணிலால் ——— பழம்.

18. கடிதங்கள்—II

I

அழியாச் செல்வம்	சேஷ்டை	ஏழைமக்கள்
மாண்புடையவள்	தையல்வேலை	இசைமயம்
அவாவுகிறோம்	மேற்பார்வை	நடுக்காவேரி
கொலு	கையாள்கிறேன்	அன்புக்குரிய
தாமதம்	வாய்ந்தது	கருந்தனம்
ஓ வென்று	மீண்டவர்	உள்ளவரை
குறுக்கிட்டு	திறம்பட	நாட்டுப்பற்று
தண்டனை	கதர்க்குல்லாய்	

2, வள்ளுவன் தெரு,
தஞ்சாவூர்
15—10—1940.

அன்புள்ள மாமா,

வணக்கம். நான் உங்களை விட்டு வந்து ஒரு மாதம் ஆகியும், உங்கள் கடிதம் ஒன்றுகூட வராத காரணம் என்ன? இங்கு நானும் என் தாயார், தந்தையார், தங்கை மணிமேகலை இவர்களும் சுகமே. அங்கு மாமி முதலியவர் நலம் அறிய அவாவுகிறோம்.

தசரா விடுமுறையில் இங்கு ஒரு வேடிக்கை நடந்தது. நமது வீட்டில் 'கொலு' வைப்பது வழக்கம் அல்லவா? இந்தமுறை வைத்த கொலுவைக்காணப் பலர் வந்தனர். அவர்களுள் 12 வயதுடைய சிறுமி ஒருத்தி. நமது நாய் அவளைக் கண்டது தான் தாமதம்

தம்; உடனே அவள் மேல் விழுந்து அவள் துணி களைக் கிழித்து அவளையும் கடித்துவிட்டது. அவள் 'ஓ'வென்று அலறினாள். நான் குறுக்கிட்டு நாயை அடக்கினேன். அவள் அழுதுகொண்டே, "நான் நேற்று இந்த நாயைக் கல்லால் அடித்தேன்; இன்று ஒன்றும் செய்யவில்லை" என்றாள். "நாயை அடித் தல் தவறுதானே ? நீ செய்த தவறுக்குத் தண்டனை அடைந்தாய். இனி எந்த விலங்கிடமும் சேஷ்டை செய்யாதே" என்று நான் புத்திகூறி அவளை அனுப் பினேன். மாமா! நமது நாயின் ஞாபக சக்தியைப் பார்த்தீர்களா ? இந்தச் சம்பவம் எனக்கும் ஒரு 'பாடம்' ஆயிற்று. நான் ஒழுங்காகப் பாடசாலைக் குச் சென்று பாடங்களைப் படித்துக் கொண்டு வருகிறேன்.

மணிமேகலை தையல் வேலையைத் திறம்படச் செய்கிறாள். கதர்க் குல்லாய், கதர்ச்சட்டை, கதர்ப் பை, கதர்க் கைத்துண்டு இவற்றைத் தைப்பதில் அவ ளுக்குப் பிரியம் அதிகம். 'இவை நம் நாட்டில் செய் யப்படும் பொருள்கள். இவற்றால் ஏழை மக்கள் பலர் பிழைக்கின்றனர்.' என்று அவள் சொல்வது வழக் கம். அவள் எப்பொழுதும் பாரதியாருடைய 'செந் தமிழ் நாடென்னும் போதினிலே' என்று தொடங் கும் தமிழ் நாட்டுப் பாடலையே பாடுவது வழக்கம். அவள் நன்றாகப்பாடுகிறாள். அவள் நமது வீட்டை

இசை மயம் ஆக்குகிருள். மாமா! அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டு இருங்கள்.

தங்கள் அன்புள்ள
க. வேலன்.

திருவாளர், ம. முருகவேல் முதலியார் அவர்கள்
5. பெரிய தெரு,
நடுக்காவேரி, (தபால்)
தஞ்சாவூர் தாலூக்கா.

II

5. பெரிய தெரு,
நடுக்காவேரி (தபால்),
தஞ்சாவூர் தாலூக்கா,
20—8—1940.

என் அன்புக்கு உரிய வேல,

உனது அழகான கடிதம் கண்டேன்; அதில் அடங்கி இருந்த செய்தியை அறிந்து மகிழ்ந்தேன்; உன் கையெழுத்து மிகவும் நன்ருய் இருக்கிறது. 'நல்ல கையெழுத்து உடையவன் நல்ல பழக்க வழக்கங்களை உடையவனுக இருப்பான்' என்று பெரியோர் சொல்வது வழக்கம். நீ நன்ருய்ப் படிப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். அறிவுள்ள உனக்கு நான் அதிகம் கூற வேண்டுவது இல்லை. கல்வியே கருந்தனம். பணம் இன்று இருக்கும், நாளை மறைந்து விடும். கல்வி நாம் உள்ளவரை அழியாதது. அந்த அழியாச் செல்வம் பெறுவதே மனிதராய்ப்

பிறந்தவர் கடமையாகும். உன் தந்தையாரைப் பார் : அவர் எத்தனை பாஷைகளைப் படித்தவர்! பெரும் பணக்காரர்; அப்படி இருந்தும், தினமும் வயல்களையும் தோட்டங்களையும் போய்ப் பார்த்து வருகிறார்; தாம் கற்றவற்றைப் பயிர்த் தொழிலில் பயன்படுத்துகிறார் ; தோட்ட வேலைகளில் உபயோகப்படுத்துகிறார். அவர் முயற்சியால் அல்லவா உங்கள் வயல்களில் அதிகமாக அறுவடை ஆகிறது? உங்கள் விளைச்சல் வேறு எவருக்கும் இல்லையே. காரணம் என்ன? நல்ல எரு, நல்ல மேற்பார்வை, குறித்த காலங்களில் செய்ய வேண்டுவனவற்றைச் செய்தல்—இவை அல்லவா அதிக விளைச்சலை உண்டாக்குகின்றன? அவரது கல்வி எவ்வளவு பயன்படுகிறது, பார். நான் இப்பொழுது அவர் முறைகளையே கையாள்கிறேன். எனக்கு இவ் ஆண்டில் நல்ல விளைச்சல் இருக்கலாம்.

நீ கைத்தொழிலையும் கற்றுக்கொள்வது நல்லது. மணிமேகலை மாண்புடையவள். அவளது நாட்டுப் பற்றைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறேன். நமது செந்தமிழ் நாடு மிக்க பெருமையும் பழமையும் வாய்ந்தது. நம் முன்னோர் கடல் கடந்து வியாபாரம் செய்தவர் ; இமயம் வரை வென்று மீண்டவர் ; தமிழைத் தம் உயிராகக் கருதிப் பாதுகாத்தவர். அவர்கள் வழி வழி வந்த நாமும் அந்த உணர்ச்சி உடையவராக இருப்பதே முறை. நாம் தமிழைப் பிழையறப் பேசவும், எழுதவும், படிக்கவும் பழக வேண்டும். எப்பொழு

தும் தமிழிலேயே பேச வேண்டும். இந்த விஷயங்களில் உன் தாயாரும் தந்தையாரும் ஊக்கம் உடையவர்கள்.

வீட்டில் உள்ள அனைவருக்கும் எனது கடிதத்தைப் படித்துக் காட்டு. உனக்கும் மணிமேகலைக்கும் எனது வாழ்த்து உரியதாகுக.

உன் அன்புள்ள மாமன்,
ம. முருகவேலன்.

கேள்விகள்

1. வேலன் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவம் யாது?
2. மணிமேகலையைப்பற்றி வேலன் குறிப்பிட்டது யாது?
3. வேலனது மாமன் கல்வியைப்பற்றி என்ன குறிப்பிடுகிறார்?
4. இந்த இரு கடிதங்களால் நீ உணர்வது என்ன?

பயிற்சி

1. நீ அறிந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு வேலன் எழுதியது போன்ற கடிதம் ஒன்று எழுதுக.
2. நீ முன்னர்ப் படித்த இளங்கோ அடிகளின் குணாதிசயத்தைக் குறித்து உன் தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுது.
3. பத்திரிகைப் படிப்பு, மேட்டூர் அணைக்கட்டு—ஒன்றைப்பற்றி உன் சிநேகிதனுக்கு ஒரு கடிதம் எழுது. (அணைக்கட்டை நேரில் கண்டமாதிரி)

19. தந்தையுயிர் காத்த மைந்தன்—பாட்டு

பல் கலைவாணர்கள்	ஈங்கவனை	உறந்தை
காப்புடையான்	இறையில்	முடிசூட்டி
வாகை புனைந்தான்	சேய்	நேரிலன்
சந்திர சேகரன்	நாற்படை	நிறுத்துக
நெஞ்சுடைந்து	முற்றுகை	ஆங்கிருந்த
அச்சுதராயன்	திருமுன்	சின்னவன்
கொடுவருவேன்	எந்தை	வெகுண்டு
நடுவிருந்தோர்	எளியேன்	உழக்கினர்
பாட்டிசைப்ப	மகப் பேறு	கலி
விஜய நகர்	தீயொக்க திறல்	கள்வன்
நாகமன்	விடை தந்தான்	சிறை
மூவரசர்	முழக்கினர்	எய்ப்ப
முறைகாத்த	உற்ற துணை	கடப்பாடு
குன்றிய	பெருமை நிலை	வாயுய்த்த
துங்கபத்திரை	விண்	வழிவந்தோர்
நல்கும்	அணிகொள	ஆடுங்கொடி
விளித்து	வீரசோழன்	அன்னவன்
நெறிதவறி	வாட்டினன்	படைத் தலைவன்
நீள் மதுரை	ஓட்டினன்	வியப்புக் கடல்
சினமூள	படையாளி	நச்சும்

நாகமன் தவறு

1. செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களே,—ஒரு
   செல்வச் சிறுவன் செயல்கேளும் :

2. முத்தமிழ் நாட்டை முறைகாத்த—தமிழ்
   மூவர சர்வலி குன்றியபின் ;

3. இத்தரை யோர்வலி கொள்ளதுவாம்—துங்க
பத்திரை யின்கரை யுள்ளதுவாம் ;

4. பல்கலை வாணர்கள் பாட்டிசைப்பப்—பொருள்
நல்கும் விஜய நகரரசர் ;

5. ஆடுங் கொடிவிண் ணணிகொளவே—தென்
நாடு முழுவதும் ஆண்டனரே.

6. செந்தமிழ்ப் பாண்டிநா டாண்டனனே—திருச்
சந்திர சேகரப் பாண்டியனே.

7. வீரசோ ழன் வந்து வாட்டினனே—பெரும்
வெற்றிகொண் டவனை யோட்டினனே.

8. தோற்றவப் பாண்டியன் நெஞ்சுடைந்து—நிலம்
போற்றும் விசய நகரடைந்து,

9. அச்சுத ராயனி டமுரைக்கப்—படை
யாளியாம் நாகம னைவிளித்து,

10. சோழனை யோட்டியே பாண்டியனை—நா
டாளவே வைத்துவா வென்றனனே.

11. கேட்டதும் நாகம நாயக்கனும்—தமிழ்
நாட்டை யடைந்து படைகளுடன்,

12. ஓட்டி யுறந்தைக்குச் சோழனையே—முடி
சூட்டி மதுரையை யாண்டனனே.

விசுவநாதன் செயல்—வேறு

13. நெறிதவறி நாகமனும் நீள்மதுரை யாள ;
அறிதலுமே அச்சுதனும் அதிகசின மூள ;

14. நேரிலனை வாட்டியென்முன் நிறுத்துக வென் றுரைக்க,
பேரவையி லிருந்தோர்கள் பேசாமலிருக்க ;

15. ஆங்கிருந்த ஒரு சிறுவன் ஆண்மையுட னெழுந்தான் ;
ஈங்கவனைக் கொடுவருவேன் இறையிலென
மொழிந்தான்.

16. அன்னவன்யா ரென்றுமேயவ் வச்சுதனும் கேட்க,
மன்னவனே படைத்தலைவன்
மகனிவனென் றுரைக்க ;

17. தீயொக்க திறலுடைய சேய்விசுவ நாத
நாயக்க னிவனெனவே நடுவிருந்தோ ரோத ;

18. மன்னவனும் அதுகேட்டு மனம்பெரிதும் மகிழ்ந்தான் ;
சின்னவனைப் படைசூழச் செல்லவிடை தந்தான்.

விசுவநாதன் திறல்—வேறு

19. நாற்படை சூழ மதுரையை விசுவ
நாதன டைந்தனனே ;
காப்புடை யரணை முற்றுகை யிட்டுக்
கடும்போர் புரிந்தனனே.

20. தந்தையு மகனும் எதிரெதிர் நின்று
சங்கு முழக்கினரே.
மைந்தன் வெகுண்டு முன்செல வீரர்
மண்டி யு ழக்கினரே.

21. வலிமிகும் விசுவ நாதனும் முடிவில்
வாகை புனைந்தானே ;
கலிமிகு தந்தையைக் கள்வனைப் போலக்
கட்டிச் சென்றானே ;

22. சென்றுமே விஜய நகரத்தரசன்
திருமுன் விட்டனனே.
கண்டுமே அச்சுத ராயனும் வியப்புக்
கடலிடைப் பட்டனனே ;

உயிர்க்கோடை—வேறு

23. உன்போ லினியெனக்கோ ருற்றுதுணை யாருமிலை
அன்பாவென் ஞலுனக்கிங் காவனகேளென்றலுமே;

24. மூந்தை யவர் புகழை முழுதடைந்த மன்னவனே,
எந்தை தனைச்சிறைவிட் டெளியேனைக் காருமென்றான்.

25. அப்படியே யாகுகவென் றச்சுதனும் நாகமனை
எய்ப்ப விடுதலைசெய் திட்டான் மகன்மகிழ.

26. தந்தை மகன்திறலைத் தான்புகழ்ந்து மெய்யுறவே
மைந்தன் றனைத்தழூவி வாய்முத்தம் தந்தனனே.

27. வீரன் கடப்பாட்டை மெச்சினர் ஆங்கிருந்தார்.
பேரரசன் வீரற்குப் பெருமை நிலையளித்தான்.

28. ஆண்டு பலகழிய, அணிமதுரைப் பாண்டியனுக்
கீண்டு மகப்பேற தில்லா தொழிந்திடவே.

29. அச்சுதனும் பாண்டிநா டாள முடிபுனைந்தான்,
நச்சுந் திறல் விசுவ நாதநா யக்கனையே

30. வாயுய்த்த வீரன் வழிவந்தோ ரேமதுரை
நாயக்க ரென்பதனை கன்கறிவீர் மாணவரே.

கேள்விகள்

1. அச்சுதராயன் என்பவன் யார்? அவன் காலத்தில் தமிழ் நாட்டை யாண்டவர் யாவர்?

2. நாகமன் ஏன் மதுரையிலேயே தங்கினுன்? விசுவநாத நாயக்கன் என்பவன் யார்? அவன் எப்படிப்பட்டவன்?
3. விசுவநாதன் எதற்காகத் தந்தையுடன் சண்டையிட்டான்?
4. இக்கதையிலிருந்து நீ அறிந்து கொண்ட நீதி யாது?

பயிற்சி

1. நாகமன் செயலைப்பற்றி 5 வாக்கியங்கள் சொல்.
2. நாகமனுக்கும் விசுவநாதனுக்கும் உள்ள குண வேற்றுமையை 10 வாக்கியங்களில் விளக்குக.
3. சிறுவர், தந்தை, மாணவர் - இவற்றின் பெண் பால்கள் எவை?
4. இப்பாடல்களை 20 வாக்கியங்களில் கதை வடிவமாகச் சுருக்கி எழுதுக.
5. செயப்பாட்டு வினை என்பது என்ன?

ஆண்டனர், வாட்டினன், முற்றுகையிட்டு, முழக்கினர், புனைந்தான், பெருமை நிலை அளித்தான் - இவற்றைச் செயப்பாட்டு வினைகள் ஆக்குக.

இலக்கணம்

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த வெழுத்து என்பனவாம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - என்பன உயிர் எழுத்துக்கள். இவைகளை உச்சரித்துப்பார்: குறுகிய ஓசையுள்ளவை எவை? நீண்ட ஓசையுள்ளவை எவை? குறுகிய ஓசையுள்ள அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்கள் ஆகும். மற்ற ஏழும் நெட்டெழுத்துக்கள். குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று. நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு. உச்சரித்துப்பார்:

20. கட்டுரை எழுதுதல்

கட்டுரை	நிலைமை	அறிவுடைமை
கோவை	பெருக்கம்	தொடக்கம்
கால் நடை	கலங்கல்	முடிவு
வியாசம்	குளிப்பாட்டு	வந்திருத்தல்
முறைப்படி	பாழ்	காண்க

'கட்டுரை' என்பதற்கு விஷயங்களைக் கோவையாகத் தொகுத்து எழுதும் செய்தி' என்பது பொருள். இது 'வியாசம்' என்றும் சொல்லப்படும். ஏதேனும் ஒன்றைப்பற்றி இத்தனை வரிகளில் அல்லது பக்கங்களில் எழுதவேண்டும் என்று வைத்துக்கொள். அப்போது என்ன செய்வது? அந்த விஷயத்தை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம், ஒவ்வொரு பிரிவிலும் என்ன செய்தியைச் சொல்லலாம், முடிவு யாது— என்பவற்றை யோசிக்கவேண்டும். யோசித்து முடிவு செய்த பிறகு, அம்முறைப்படி எழுதவேண்டும். உதாரணமாக இங்கு ஒரு கட்டுரை எழுதிக்காட்டுவோம்.

ஆறும் அதன்பயனும்

குறிப்புகள்: (1) ஆறு என்பது யாது?
(2) அதன் நிலைமை என்ன?
(3) அதன் பயன் என்ன?
(4) முடிவு.

[ஒவ்வொரு குறிப்பைப் பற்றியும் ஒரு பகுதி (பாரா) எழுதவேண்டும். இங்கு நான்கு பகுதிகளை எழுதி முடித்தால் இக்கட்டுரை முடிகிறது. குறிப்புகட்குக் கீழே 'கட்டுரை' என்று எழுதி, அதன் கீழ்வரியிலிருந்தே எழுதத் தொடங்கவேண்டும்.]

கட்டுரை

1. ஆறு என்பது மலையிலிருந்து உற்பத்தி ஆவது. மலைமீது விழும் மழைநீர் ஒன்றுகூடித் தரையில் இறங்கி ஓடி வருதல் ஆறு எனப்படும். அது தரையை அறுத்துக்கொண்டு வருதலால் 'ஆறு' எனப் பெயர்பெற்றது. காவிரி, கொள்ளிடம், வையை முதலியவை ஆறுகளே ஆம்.

2. ஆறுகளில் இரண்டு வகை உண்டு. ஒரு வகை ஆறுகளில் எப்பொழுதும் தண்ணீர் ஓடிக் கொண்டு இருக்கும். அவை 'ஜீவநதிகள்' எனப் படும். பல ஆறுகளில் சில மாதங்களே தண்ணீர் ஓடும். மழைக் காலத்தில் ஆற்றில் வெள்ளப்பெருக் கம் உண்டாகும். அப்போது தண்ணீர் கலங்கலாகச் சிவந்து இருக்கும். ஆடி மாதத்தில் ஆற்றில் அதிக மாகத் தண்ணீர் வரும்.

3. ஆற்றங் கரைகளில் உள்ள மக்கள் ஆற்றை நன்றாய்ப் பயன்படுத்துவார்கள்; ஆற்று நீரில் குளிப் பார்கள்; ஆடைகளைத் தோய்ப்பார்கள்; வீட்டிற்கு வேண்டும் நீரைக்கொண்டு செல்வார்கள்; கால்நடை களை ஆற்றில் குளிப்பாட்டுவார்கள்; கால்வாய்கள் மூலம் ஆற்று நீரை வயல்களுக்குப் பாய்ச்சுவார்கள்; ஆற்று நீரைக் குளம் குட்டைகளில் தேக்குவார்கள்; பெரிய ஆழமான ஆறுகளாயின், தோணி, படகு முதலியவைகள் மூலமாகப் பொருள்களை வேறு ஊர் கட்குக் கொண்டு செல்வார்கள்; காட்டில் அறுத்த

மரங்களை ஆற்றில் போட்டுக் குறித்த இடங்களில் உள்ளவரை எடுத்துக்கொள்ளச் செய்வார்கள். இன்னும் பல நன்மைகள் ஆற்று நீரால் உண்டு.

4. ஆகவே, இதன் பயனை உணர்ந்தே நம்முன்னோர், "ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்" என்று கூறிவிட்டனர். ஆறு கடவுளால் நமக்குத் தரப்பட்ட இயற்கை வசதிகளுள் ஒன்று. ஆதலால், அதனை மேலும் பலவகைகளில் பயன்படுத்தி நன்மை அடைய முயல்வதே அறிவுடைமை ஆகும்.

இதனில், எடுத்துக் கொண்ட விஷயத்தின் 'தொடக்கம், அதன் விளக்கம், அதன் பயன், முடிவு' என்று ஒன்றன்பின் ஒன்றாக விஷயங்கள் கோவைப்பட வந்திருத்தல் காண்க. இந்த முறைப்படியே கட்டுரை எழுதப் பழகுதல் வேண்டும்.

பயிற்சி

1. நாயைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. கோழியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
3. வாழை மரத்தைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.
4. ஏதேனும் பண்டிகை ஒன்றைப்பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.
5. நிலவைப்பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுக.
6. புகை வண்டித் தொடரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
7. தமிழெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? உயிரெழுத்தெத்தனை? குற்றெழுத்துக்கள் எவை? ஏன் அப்பெயர் பெற்றன? நெட்டெழுத்துக்கள் எவை? ஏன் அப்பெயர் பெற்றன?

இலக்கணம்

மெய்யெழுத்துக்கள் :

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—என்ற 18-ம் மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

க், ச், ட், த், ப், ற்—இவ்வாறும் வலிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவன. இவை **வல்லின** எழுத்துக்கள் எனப்படும்.

ங், ஞ், ண், ந், ம், ன்—இவ்வாறும் மெல்லிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவன. இவை **மேல்லின** எழுத்துக்கள் எனப்படும்.

ய், ர், ல், வ், ழ், ள்—இவ்வாறும் வல்லிய ஓசையுமல்லாமல், மெல்லிய ஓசையுமல்லாமல் நடுத்தரமாக—இடை நிகரனவாக உச்சரிக்கப்படுவன. இவை **இடையின்** எழுத்துக்கள் எனப்படும்.

---

21. பெரியோர் உரை நடை

நடுநாயகம்	வயப்படுகின்றன	அருள்
கல்லார்	கண்ணபிரான்	இறைவன்
உதயணன்	ஆயர்பாடி	சீவகாருண்யம்
நளகிரி	குழல்	திகைக்கின்ற
மதம் பிடித்த	தாலாட்டு	சீவர்
வீணே	அழுகை	விசாரம்
ஏவி	இத்துணே	ஊர்ந்தான்
சிஷ்யன்	அறியாமை	திருவருட்பா

1. இசை இன்பம்

தமிழர் இசையின் பெருமையை உணர்ந்தவர்கள். அவர்கள் இதனே முத்தமிழுள் நடுநாயகமாக வைத்திருக்கிருர்கள். இசை கற்ருர், கல்லார், விலங்கு இனங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும்

இன்பம் தரும். உதயணன் 'நளகிரி' என்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி, அதன் மீது ஏறினான்; ஆயுதங்களை அதனையே எடுத்துத் தர ஏவி ஊர்ந்தான். இசையினால் அடக்கப்பட்ட அந்த யானை 'குருவினிடத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யனைப்போல' உதயணனிடம் அடங்கி நின்றது.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். பசுக்கள் பல இடங்களி லும் மேய்ந்து கொண்டிருக்கும். கண்ணபிரான் மாலைக் காலத்தில் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிச் செல்ல வேறு எதும் செய்வதில்லை; குழலை எடுத்து ஊதுவார். உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்கள் எல்லாம் ஒருங்கே திரண்டு கண்ண னிடம் வந்து சேரும். குழந்தைகள் அன்னையின் இனிய தாலாட்டு இசையைக்கேட்டு அழுகை ஓய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்!

—மஹா மஹோபாத்யாய, டாக்டர், உ. வே. சாமிநாதையர்
(செந்தமிழ், தொகுதி—27)

2. கல்வி

எத்தொழிலைச் செய்வதாய் இருந்தாலும், அதற்கு அறிவு வேண்டி இருக்கிறது. அறிவில்லா மல் எவரும் எதனையும் செய்தல் இயலாது. அறி வுடையவன் தான் எடுத்த ஒரு தொழிலைச் செவ்வை யாய்ச் செய்து முடித்தலும், அறிவில்லாதவன் தான் தொடங்கிய ஒன்றை ஒழுங்காகச் செய்யமாட்டாமல்

பிழைபட்டு வருந்துதலும், நாம் நாள்தோறும் காண்கின்றோம் அல்லவா?

இத்துணைச் சிறந்த அறிவை எவரும் இயற்கையாகவே பெற்றுக்கொள்ள இயலாது. ஏனென்றால் அஃது அறியாமையால் இயல்பாகவே மறைக்கப் பட்டுள்ளது. அதனைப் போக்கக் கல்வி ஆகிய விளக்கம் வேண்டப்படுகின்றது. இரக்கமும், அருளும் உடைய இறைவன் நமக்கு இந்தப் பிறவியைக் கொடுத்தது வெறுஞ்சோறு தின்பதற்கும், பொருள் சேர்ப்பதற்கும் மட்டுமே அன்று; இந்த உடம்பைப் பாது காக்கும் வழியில் அறிவை வளர்த்து, அறியாமையைத் தொலைத்து, அவனது பேரின்பத்தைப் பெறுதற்கே ஆம்.

—சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகள்)
(செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு—1)

3. சீவகாருண்யம்

'வெயில் ஏறப் போகின்றதே! இனிப் பசிக்கு என்ன செய்வோம்!' என்று தேனில் விழுந்தஈயைப் போலத் திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சீவகாருண்யம். 'இருட்டிப் போகின்றதே! இனி ஆகாரம் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்!' என்று விசாரத்தில் அழுந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருண்யம். 'நடந்து நடந்து காலும் சோர்ந்தது; கேட்டுக் கேட்டு வாயும்

நொந்தது; நினைந்து நினைந்து மனமும் சலித்தது; இனி இப்பாழ் வயிற்றுக்கு என்ன செய்வோம்!' என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரம் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருண்யம்.

—சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்
(திரு அருட்பா)

பயிற்சி

1. இம்மூன்று பெரியோர்களின் உரை நடையைப்போல நீயும் உரை நடை எழுதிப்பழகு.
2. வேறு பல பெரியோர்கள் எழுதியுள்ள உரைநடை நூல்களை, உன் பள்ளிக்கூட நூல் நிலயத்திலிருந்து வாங்கிப் படித்துப் பழகு.
3. 'நட்பு' என்பதைப்பற்றி 15 வாக்கியங்களில் பெரியோர்கள் உரை நடைபோன்ற நடையில் ஒருகட்டுரை எழுதுக.
4. வல்லெழுத்துக்கள் எவை? மெல்லெழுத்துக்கள் எவை? இடையெழுத்துக்கள் என்பதன் பொருள் என்ன? நீ படித்த பாடங்களிலிருந்து அம்மூவகை எழுத்துக்களால் ஆகிய மும்மூன்று சொற்கள் எடுத்தெழுதுக.

இலக்கணம்

உயிர் மெய்யெழுத்துக்கள் :

க = க் + அ. 'க்' என்பது என்ன எழுத்து? 'அ' என்பது என்ன எழுத்து? 'க' என்பது உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் கூடி உண்டானதாகையால் உயிர்மெய்யெழுத்து எனப்படும். உயிர் மெய்யெழுத்துக்கள் எத்தனை?

ஃ— இது ஆய்த எழுத்து.

உதாரணம் :— அஃது, இஃது, அஃறிணை.

இசையினால்' இந்தச் சொல்லில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன? ஒவ்வொன்றும் எவ்வகையான எழுத்து?

22. சாரணச் சிறுவர்

சாரணச் சிறுவர்

சாரணர்	சிறு பருவம்	சத்தியம்
முன்னேற்றம்	தோற்றுவிக்கப்பட்டு	இயக்கம்
பொதுத் தொழில்	விதி	கீழ்ப்படிந்து
பேதங்கள்	முதலுதவி	முகமலர்ச்சி
ராஜபக்தி	பின்பற்றுவார்கள்	சிக்கனம்
கூட்டு உழைப்பு	மேலான நிலை	உரிய

நாட்டு முன்னேற்றத்திற்கு அந்நாட்டு மக்களது ஒற்றுமை அவசியம். மக்கள் ஒன்றுபடப் பொதுத் தொழில் அவசியம் ஆகும். பொதுத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர் சாதி, மத பேதங்களைக் கவனி யார். இங்ஙனம் மக்கள் வேறுபாடு இல்லாமல் வாழ்ந்தால், அவர்களிடம் இராஜபக்தி, தேசப்பற்று,

கூட்டு உழைப்பு முதலிய சிறந்த குணங்கள் உண்டாகும். இத்தகைய இயல்புகள் மக்களின் சிறு பருவத்தில்தான் இயல்பாக வளர முடியும். ஆதலால், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ‘சாரணர் இயக்கம்’ என்பது தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் பல வகுப்புப் பிள்ளைகளும் படிக்கிறார்கள் அல்லவா? அந்தப் பிள்ளைகள் இந்த இயக்கத்தில் சேருகிறார்கள். இதில் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் சாதி, மத வேறுபாடுகள் கவனிக்கக் கூடாது என்பது ஒரு விதி. எனவே, அவர்கள் வேறுபாடு இல்லாமல் ஒன்றாக உண்பார்கள்; ஒன்றாகப் பழகுவார்கள்; ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்து கொள்வார்கள்.

சாரணச் சிறுவர், எல்லோரையும் வேறுபாடு இல்லாமல் நடத்துவார்கள்; ஆபத்துக் காலத்தில் எல்லோருக்கும் உதவி செய்வார்கள்; பலவகை விளையாட்டுகளில் தேர்ச்சி பெறுவார்கள்; ஆபத்தில் முதல் உதவி செய்ய அறிந்திருப்பார்கள்; சுகாதார விதிகளை ஒழுங்காகப் பின்பற்றுவார்கள்; உடல் பயிற்சி செய்து, உடலை நன்றாக வைத்திருப்பார்கள்; நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள்; பிறர்க்கு அதனைப் போதிப்பார்கள். நீங்கள் இந்த மேலான நிலைமையை அடைய முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் இந்த இயக்கத்தில் சேரும்பொழுது, “(1) நான் என்னால் இயன்ற அளவு கடவுளுக்கும்,

அரசருக்கும், பெரியோருக்கும், தாய்நாட்டிற்கும் என் கடமையைச் செய்வேன்; (2) எல்லா உயிர்கட்கும் ஆபத்தில் உதவி செய்வேன்; (3) இந்த இயக்கத்தின் விதிகளை மதித்து நடப்பேன்" என்று கூறிச் சத்தியம் செய்யவேண்டும்.

சாரணச் சிறுவர்க்கு உரிய விதிகள்:—

(1) சாரணச் சிறுவர், பிறர் நம்பத்தக்கவராக இருக்கவேண்டும்.

(2) அரசர், உத்யோகஸ்தர், பெரியோர், பிறர் இவர்களிடம் நல்லவராய் நடந்துகொள்ளவேண்டும்.

(3) பிறர்க்குப் பயன்படுபவராக இருக்க வேண்டும்.

(4) எல்லோரிடமும் சகோதர அன்புடன் இருக்கவேண்டும்.

(5) எல்லோரிடமும் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும்.

(6) எல்லா உயிர்களிடமும் அன்புடையவராய் இருத்தல் வேண்டும்.

(7) பெற்றோர்க்கும், ஆசிரியர்க்கும் (எதிர்த்துப் பேசாமல்) கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

(8) துன்ப காலங்களில் முகமலர்ச்சியோடும், பொறுமையோடும் இருக்க வேண்டும்.

(9) மிகுந்த சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும்.

(10) மனம், மொழி, மெய்களால் தூயவராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் இப்பத்து விதிகளையும் பின்பற்றி நடந்தால், உங்களைவிடப் பாக்கியசாலிகள் யார் இருப்பார்கள் ?

கேள்விகள்

1. சாரணர் இயக்கம்—யாது ?
2. சாரணர் விதிகள் எவை ?
3. சாரணரால் சமூகத்துக்கு என்ன நன்மை உண்டாகும் ?
4. நீ சாரணனாக இருக்க விரும்புகிறாயா ? ஏன் ?

பயிற்சி

1. சாரணர் இயக்கம் என்பதுபற்றி 10 வாக்கியங்கள் சொல்.
2. சாரணரால் சமூகத்துக்கு உண்டாகும் நன்மை —என்பது பற்றி 10 வாக்கியங்கள் சொல்; அவற்றை எழுது.
3. இப்பாடத்தில் இருந்து பெயர், வினை, ஒருமை, பன்மை, இடம், வேற்றுமை, வினையாலணையும் பெயர், புள்ளிகள், செயப்பாட்டுவினை, நால்வகை எழுத்துக்கள்—இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

இலக்கணம்

அரம், அறம்
மரம், மறம்
கரை, கறை
ஒலி, ஒளி, ஒழி
தலை, தளை, தழை
ஆனி, ஆணி
பனி, பணி

} இவற்றின் பொருள் வேற்றுமையைக் கவனி.

ர, ற; ல, ள, ழ; ன, ண — இவ்வெழுத்துக்கள் ஒன்றுக்கொன்று ஓசை வேற்றுமை யுடையவை. அவற்றாலாகிய சொற்களும் பொருள் வேற்றுமைப்படும். ஆகவே, இவ்வெழுத்துக்களின் ஒலி, பொருள் வேற்றுமைகளைக் கவனித்துப் பிழையில்லாமல் பேசவும், எழுதவும் வேண்டும்.

23. அயல் நாட்டுத் தமிழ்ப் புலவர்

ஒழுங்கான முறையில்	பிழையின்றி	தெலுங்கு
திராவிட மொழிகள்	மதபோதனை	செதுக்கப்பட்டு
மொழி பெயர்த்தல்	ஏசுநாதர்	கல்லறை
சதுர அகராதி	நாலடியார்	தாழ்மையுள்ள
மாணிக்கவாசகர்	தேம்பாவணி	திருவாசகம்
ஒப்பிலக்கணம்	செய்யுள் நூல்	இட்டாலி
கோடைக்கர்னல்	வசன நூல்	பாதிரியார்
பாண்டித்தியம்	அகராதி	தொன்னூல்
அயல் நாடு	சேவை	வீரமா முனிவர்
தமிழ்ப் புலவர்	இடைவிடாமல்	அயர்லாந்து
பெஸ்கி	பிரசாரம்	இடையன் குடி
கால்டுவெல்	சுலபமாக	நெருக்கம்
போப் ஐயர்	பயின்றூர்	கன்னடம்

1. தமிழ் நாட்டில் தமிழ்ப் புலவர்கள் இருத்தல் இயல்பு. ஆனால், அயல் நாடுகளிலிருந்து தமிழ் நாட்டில் வந்து வாழ்ந்து, தமிழில் பாண்டித்தியம் பெற்றவர் சிலர். அவர்களே 'அயல்நாட்டுத் தமிழ்ப் புலவர்' எனப்படுபவர். அவர்களில் மிகச் சிறந்தவர்கள் பெஸ்கி, கால்டுவெல், போப் என்பவர்கள்.

1. பெஸ்கி (வீரமாமுனிவர்)

1680—1742

2. இவர் 1700-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு வந்தவர். இவர் இட்டாலி நாட்டுக் கிறிஸ்தவப் பாதிரியார். இவர், தம் மத போதனையைத் தமிழ்

நாட்டில் பரப்பத் தமிழ் படித்தார்; தமிழின் இனிமையையும், பெருமையையும் அறிந்தார்; ஒழுங்கான முறையில் சிறந்த தமிழ்ப் புலவரிடம் பாடம் கேட்டார்; பல ஆண்டுகள் தமிழைக் கற்ருர்; தமிழில் பிழையின்றி எழுதவும், பேசவும், பாட்டுப் பாடவும் பழகினுர்.

பெஸ்கி

3. இவர் ஏசுநாதர் வரலாற்றைத் 'தேம்பாவணி' என்னும் தமிழ் நூலாகப் பாடினுர்; வேறு சில செய்யுள் நூல்களும், வசன நூல்களும் செய்தார். இவர், இவற்றுடன் நில்லாமல், சதுர அகராதி என்னும் தமிழ் அகராதி ஒன்றையும் செய்தார். அதுவே தமிழ் மொழிக்கு ஆங்கில முறையிலமைந்த சிறப்பான அகராதி ஆகும். இவர் 'தொன்னூல்' என்னும் பெயரோடு தமிழ் இலக்கண நூல் ஒன்றையும் செய்தார். இட்டாலியிற் பிறந்த இப்பெரியார், தமிழ் மொழிக்குச் சேவை செய்து தமிழ் நாட்டிலேயே காலமானுர். இவரது பெருமை மறக்கத்தக்கது அன்று.

2. கால்டுவேல்

1814—1891

இவர் அயர்லாந்தில் பிறந்தவர். இவரும் கிறிஸ்தவ மத போதனைக்காகத் தமிழ் நாட்டுக்கு

வந்தவர். இவர் திருநெல்வேலி ஜில்லாவில் 'இடையன்குடி' என்னும் கிராமத்தில் தங்கினர். இவ்வறிஞர் சிறந்த தமிழ்ப் புலவர்களிடம் தமிழைப் பிழையறப் பயின்றார்; தமிழில் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்தார்; தமிழ் நூல்களைச் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் இடைவிடாமல் ஆராய்ச்சி செய்தார்.



கால்டுவெல்

இவர் தமிழோடு நின்றுவிடவில்லை; தமிழோடு ஒன்றுபட்டவை ஆகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளையும் படித்து அறிந்தார்; இந்தப் பாஷைகள் ஒன்றுக்கொன்று நெருக்கம் உடையவை என்பதை அறிந்தார். தாம் அறிந்த உண்மைகளைச் சுமார் 600-க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட விரிவான நூலாக எழுதினர். அப்பெரிய நூலின் பெயர் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்பது. அந்த நூல் வெளி வந்தபிறகே தமிழின் அருமை, பெருமை, பழமை முதலியவை வெளி நாட்டாருக்கும், இந்தியர்க்கும், சிறப்பாகத் தமிழருக்கும் நன்ருய்த் தெரியலாயின. இவ்வாறு நமது மொழிக்குப் பெருமை

தேடித் தந்த அப்பெரியாரைத் தமிழராய நாம் வாயார வாழ்த்துவோமாக!

இப்பெரியார் சில சிறு நூல்களும் செய்துள்ளார். அவற்றுள் சிறந்தது 'திருநெல்வேலி வரலாறு' என்பது. இவர் சென்னைச் சர்வகலாசாலை முதலிய பெரிய பொறுப்பு வாய்ந்த கல்விச் சங்கங்களில் அங்கத்தினராக இருந்து அரிய தொண்டுகள் பல செய்திருக்கிறார். இவர் இன்றைக்கு ஐம்பது ஆண்டுகட்கு முன் கோடைக்கானல் மலையில் உயிர் துறந்தார். அவரது விருப்பப்படியே அவரது உடல் இடையன் குடியிலேயே புதைக்கப்பட்டது. அக்கல்லறையை அக்கிராமத்தில் இன்றும் காணலாம்.

3. போப் ஐயர்

1820—1903

இவர் அமெரிக்க நாட்டவர். இவரும் கிறிஸ்தவ மத போதனை செய்யவே தமிழகம் வந்தவர். இவரும் திருநெல்வேலி ஜில்லாவில் தங்கி இருந்தார். இவர் அப்பொழுது சிறந்த தமிழ் வித்துவானிடம் தமிழ் நூல்களைப் பாடம் கேட்டார்; தமிழ் இலக்கணத்தில் நல்ல அறிவைப் பெற்றார். 'திருவாசகம்' எனபது மாணிக்க வாசக சுவாமிகளால் செய்யப்பட்டது. அது சிவபெருமான் மீது பாடப்பட்ட நூல். அதனைப் போப் ஐயர் பலமுறை படித்துப் படித்துப் பாராட்டினார்; அதன் அருமை பெருமைகளை உலகத்தார்க்குத் தெரிவிக்க ஆசைப்பட்டார்;

அதனால், அந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இவர் தமிழில் உள்ள 'நாலடியார், திருக்குறள்' என்ற அரிய நூல்களையும் மொழி பெயர்த்தார் ; தமிழ் இலக்கணத்தை இளைஞர் படிக்கத் தக்க முறையில் சுலபமாக எழுதியுள்ளார். அது 'போப் ஐயர் தமிழ் இலக்கணம்' எனப்படும். தமிழ் இலக்கணத்தை முதன்முதல் சிறிய வசன நூலாக வெளியிட்டவர் இவரே. இவரது தமிழ்ச் சேவை தமிழரால் மறக்கப்படத் தக்கது அன்று. இப்பெரியார் பெயர் தமிழர் உள்ளத்தில் பதிந்து இருக்கத் தக்கது.

போப் ஐயர்

இவரது முயற்சியால்தான் திருவாசகம், திருக்குறள் இவற்றின் பெருமையை உலகத்தார் அறியலாயினர். இவர் தமிழுக்கே உழைத்துத் தமிழராக இருந்து இறந்தவர். இவரது கல்லறைமீது "தாழ்மையுள்ள தமிழ் மாணவன்" என்னும் சொற்கள் இவர் விருப்பப்படியே செதுக்கப்பட்டு உள்ளன. இந்த ஒன்றிலிருந்தே இவரது தமிழ்ப் பற்றை

நீங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம் அல்லவா?

இப்படி அயலார் தமிழுக்குப் பெருமையைத் தேடித் தந்தார்கள். தமிழர் ஆகிய நீங்கள் உங்கள் தமிழுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

கேள்விகள்

1. பெஸ்கி செய்த நூல்கள் எவை?
2. அவரால் தமிழுக்கு எப்படிப் பெருமை உண்டானது?
3. கால்டு வெல்லால் தமிழுக்கு எப்படிப் பெருமை உண்டானது?
4. போப் ஐயரால் தமிழுக்கு எப்படிப் பெருமை உண்டானது?
5. இம்மூவரும் எந்தெந்த நாட்டினர்? அவரவர் வேலை என்ன?
6. இவர்கள் வரலாற்றிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்வது என்ன?

பயிற்சி

1. அயல்நாட்டுத் தமிழ்ப் புலவர்—என்பது பற்றி 10 வாக்கியங்கள் சொல்.
2. வீரமாமுனிவர், கால்டுவெல், போப் ஐயர்—ஒவ்வொருவரையும்பற்றித் தனித்தனி 10 வாக்கியங்கள் எழுதுக.
3. நீ இவ்வாண்டில் படித்த இலக்கணங்களையெல்லாம் வரிசையாக எடுத்து எழுது; அவற்றிற்கு நீ படித்த பாடங்களிலிருந்து ஒவ்வொரு உதாரணம் எழுது.

24. குமண வள்ளல்

குமணன்	உதார குணம்	வாஞ்சை
துஷ்டர்	காலத்தின் கோலம்	பரதன்
ஓடோடி	இளங்குமணன்	துரியோதனன்
நாயகன்	பூஞ்சோலை	பழி
பரிதாப நிலை	கருதி	சதி
பரம கேவலம்	தமையனார்	நற்புத்தி
உபாயம்		

(நாடகம்)

இடம்—காடு. காட்சி—1. காலம்—காலை 8 மணி.

குமண வள்ளல் :—(தனக்குள்) ஆ! என்ன கொடுமை! துஷ்டர் பேச்சைக் கேட்டு, என் தம்பி என்னைக் கொல்ல நினைத்தனனே! நான் என்ன தவறு செய்தேன்? ஏழைகட்குத் தருமம் செய்வது தவறு? போகட்டும். அவனே நாட்டை ஆளட்டும். அவன் என்னை நினைந்துவரும் தமிழ்ப் புலவர்களை யேனும் ஆதரித்தால் போதும்.

[ஒரு புலவர் வருதல்]

புலவர் :—(தமக்குள்) இவரே குமண வள்ளல் போலும். முகத்தைப் பார்த்தாலே அருள் ஒழுகு கின்றது; ஆண்மை தோன்றுகின்றது; வீரம் விளங்குகின்றது.

[புலவர் அரசரை வணங்குதல்.
அரசர் புலவரை வணங்குதல்.]

புலவர் :—அரசே, தம்மை நாடி நாட்டை அடைந்தேன்; தாம் இக்காட்டிலிருப்பதைப் பெரியார் மூலமாக அறிந்தேன்; தங்களைக்காண ஓடோடி வந்தேன். தாங்கள் இல்லாத நாடு தாமரை இல்லாத தடாகம் போலவும், நாயகன் இல்லாத நாயகி போலவும், சந்திரன் இல்லாத இரவு போலவும் இருக்கின்றது. நான் வறுமையில் வாடுகின்ற புலவன். என் ஈராண்டு மகன் பால் இல்லாமல் தாய் முகம் நோக்கி அழுதான்; அவள் என் முகம் நோக்கி அழுதாள்; யான் உம்முகம் நோக்கி வந்தேன், ஐயா. எங்கள் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்கத் தகுந்தவர்கள் நீங்களே எனத் துணிந்து வந்தேன்; வந்த இடத்தில் உங்கள் பரிதாப நிலைமை உணர்ந்தேன்.

அரசர் :—புலவரே, எனது பரிதாப நிலைமையை விட உமது நிலைமை பரம கேவலமாக இருக்கின்றதே! உமது குடும்ப நிலைமையைக் கேட்க மனம் வருந்துகிறது. நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன் கேளும். என் தலையைக் கொண்டு வருவோர்க்கு நிரம்பப் பொன் தருவதாக என் தம்பி வாக்கு அளித்துள்ளான். ஆதலால், நீங்கள் என் தலையை வெட்டிக்கொண்டு போய்ப் பரிசு பெறுக. உமது வறுமை உடனே தீர்ந்துவிடும். [வாளைத் தருதல்]

புலவர் :—(வாளைப் பெற மறுத்து) அரசரே, தாங்கள் இங்கேயே இருங்கள். நான் சென்று இன்று மாலையே இங்கு வருவேன். [வணங்கிச் செல்லல்]

புலவர் :—(போகும் வழியில்) என்ன ஆச்சரியம்! இத்தகைய உதார குணமுள்ள வள்ளலை யான் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை; இப்பெரியாரைப் பழையபடி அரசர் ஆக்கியே தீருவேன். இதுவே எனது முதற் கடமை ஆகும். யான் இளங் குமணனிடம் சென்று, அவனுக்கு நல் அறிவு புகட்டுவேன்.

[அரண்மனை அடைதல்]

இடம்—அரண்மனை. காட்சி—2 காலம்—மாலை.

[அரண்மனைப் பூஞ்சோலையில் இளங்குமணன் தனியே இருத்தல்—புலவர் சென்று வணங்குதல்]

இ. குமணன் :—ஐயா, நீர் யார்? யாது கருதி இங்கு வந்தீர்?

புலவர் :—அரசே, நான் ஓர் ஏழைப் புலவன்; தங்கள் தமையனாரைக் காட்டில் கண்டு வந்தேன்; அவரைப்பற்றித் தங்களிடம் பேச வந்தேன்.

இ. குமணன் :—என்ன! அவரைப்பற்றி என்ன பேச வந்தீர்? பேசும், பார்ப்போம்.

புலவர் :—அரசே, என் மீது கோபித்தல் ஆகாது; நான் குமண வள்ளலிடம் எனது வறிய நிலையைக் கூறி நின்றேன். அவர் கண்ணீர் விட்டு, "என் அருமைத் தம்பி என் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பொன் தருவதாக வாக்கு அளித்துள்ளான். ஆதலால், நீர் என் தலையை வெட்டிச் சென்று, அப்பெருந் தொகையைப் பெறும்; உமது வறுமையை நீக்கிக்கொள்ளும்" என்று கூறி வாள் தர வந்தார். நான் இங்கு ஓடிவந்தேன்.

அரசே, உலகில் அத்தகைய பரிசுத்தமான தமையனுரைக் காண முடியுமா? இந்த நாட்டில் சகோதர வாஞ்சை சரித்திரப் பதிவு பெற்றது ஆயிற்றே! பரதன் போன்ற தம்பியர் இருந்த இந்த நாட்டில், நீர்பிறந்தும், தருமகுணம் உள்ள தமையனுரைக் கொல்லத் துணிந்தது வியப்பாக இருக்கிறது! நீர் குற்றம் அற்றவராகக் காணப்படுகிறீர். உமது முகம் மாசற்று விளங்குகிறது. துஷ்டர்கள் உமது அறிவைக் கெடுத்து விட்டனர் போலும்! அரசே, பரதனை இன்றும் உலகம் புகழ்கின்றது. துரியோதனனை உலகம் தூற்றுகிறது. நீர் இதனை நன்கு அறிவீர். நீர்பரதன் ஆகப் புகழ்பெற விரும்புகிறீரா? அல்லது துரியோதனனைப் போலப் பழிக்கு ஆளாக இஷ்டப்படுகிறீரா? இறைவன் உமக்கு நல்ல அறிவைத் தருவானுக!

இ. குமணன் :—(கண்ணீர் வடிய) ஐயா, புலவரே, நான் துஷ்டர் பேச்சால் கெட்டேன். இந்த நகரத்தார் என்னை ஏசுகின்றனர்; என்னைக் கொல்லவும் சதி செய்து வருகின்றனர். துஷ்டர் பேச்சைக் கேட்டு நான் செய்தது தவறுதான்; அரசரை அழைத்துவர என்ன செய்யலாம் என்றுதான் யோசித்துக்கொண்டு இருந்தேன். தெய்வம் உம்மைஎன்னிடம் அழைத்து வந்தது. ஐயா, நீரும் காட்டுக்கு வாரும்; நானும் உம்முடன் வருகிறேன். நாம் அப்பெரியாரை அழைத்துவருவோம்; இன்றுமுதல் அவரே இந்நாட்டை ஆளட்டும். [இருவரும் காடு செல்லல்]

இடம்—காடு. காட்சி—3. காலம்—மாலை.

குமண வள்ளல் :—அங்கு வருபவர் யார்? ஒருவர் காலையில் வந்த புலவர். மற்றவர்—ஆ! என் அருமைத் தம்பி வருகிறான். ஏது அவனைப் புலவர் நல்வழிப் படுத்திவிட்டார் போலும்!

[இளங்குமணன் கைகூப்பி வருதல் - வந்து அரசரை வணங்கி அழுதல்]

குமணன் :—தம்பீ, வருந்தாதே! எல்லாம் காலத்தின் கோலம். இந்தப் புலவர் பரம ஏழை. இவரைக் காப்பது உனது கடமை.

இ. குமணன் :—அண்ணா, இவரையும் என்னையும் காப்பது உங்கள் கடமை. தாங்கள் என்னை மன்னித்து, நாட்டுக்கு வாருங்கள்; அரசராக இருந்து பழையபடியே ஆளுங்கள்; நான் துஷ்டர் பேச்சுக் கேட்டுச் செய்த தவற்றைப் பொறுத்தருள்க. எனக்கு இன்றே நற்புத்தி வந்தது. என்னை நல்வழிப்படுத்திய பெருமை இப்புலவர் பெருமானுக்கே உரியது. நான் தாங்கள் அடியால் இட்ட வேலையை முடியால் செய்வேன். தாங்கள் இப்பொழுதே புறப்பட்டு வாருங்கள்.

குமணன் :—தம்பீ, நீ நல் அறிவைப் பெற்றது கண்டு மகிழ்கிறேன். இனி இத்துன்பம் நேராமல் கடவுள் காப்பாராக! வாருங்கள் போவோம்.

[எல்லோரும் அரண்மனை அடைதல்]

பயிற்சி

இவ்வாறே வேறு கதைகளையும் நாடகமாக நடித்துப் பழகுங்கள். விவேகானந்தர் கதையை நாடகமாக எழுதுக.

25. செய்யுட் பாடம்

I. கதைப் பகுதி

1. தூக்கணங் குருவியும்—குரங்கும்

1. வீடடை அவனை வீட்டை இழந்திடச் செய்வான் என்ன,
நாடுறு முதலை ' அந்த நற்கதை உரைப்பாய் என்ன,
நீடுறு குரங்கு சொல்லும் : நெடியதோர் பழுமரத்தில்
கூடுகோண் டனஇரண்டு தூக்கணங் குருவிதாமே.

2. குளிரினால் நடுங்கி வானக் கொடுமழை யால்நனைந்து
நளிர்சுரத் தோடுதேகம் நடுங்கியே பற்கள் கிட்டி
வளமறு குரங்கொன் றங்கு வந்தது ; குருவி பார்த்தே
இளகிய மனத்தினாலே இன்சொலால் ஒன்று சொல்லும் ;

3. "கைகள்கா லிருந்துமிந்தக் கன்மத்தை அனுபவிக்கும்
செய்தியேன் ?" என்ன, "ஊசிமூஞ்சிகொள் சிறிய மூடா,
வைதுநீ புத்திசொல்ல வல்லையோ ?" எனக் கோபித்து,
நெய்திடு மதன்றன் கூட்டை நெடுங்கையால் பிய்த்த தன்றே.

—பஞ்ச தந்திரம்

2. முயல் சிங்கத்தைக் கொன்றது

1. குறுமுயல் சிங்கந் தன்னைக் கொன்றதுண் டதனைச் சொல்வே
செறியுமோர் காட்டி லே ஓர் சிங்கமுண் டந்தக் காட்டில் [ன்:
உறுவிலங் கனைத்தும் வேட்டை ஆடிஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில், விலங்கெலாம் ஒருங்கு கூடி ;

2. ஆணிளஞ் சிங்கமே உன் அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா விதத்தினில் தினம்ஒன் ருக
ஊணுனக் களிப்போம் என்ன உண்மையாக் கொண்டு [சிங்கம்
ஆணையும் இட்டோவ் வொன்ருய் அருந்தியங் கிருக்கும் நாளில்

3. தனிமுயல் ஒன்றுக் கோர்நாள் தன்முறை வருத லோடும்
இனி அது விடாது நம்மை எனினும்ஓர் எடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து வென்றுநாம் உய்ந்தோம் ஆகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும் நமக்கும்நற் புகழுண் டாமே.

4. கருதிஅச் சிங்கத் தின்தன் கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி 'மன்னன்என் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும் பிந்துவ தில்லை' பிந்தி
வருவதேன் உரைநீ' என்று மனந்தனில் சினந்து கூற.

5. ஐயஉன் பசிவே ளைக்கு அடியனேன் வந்தேன் அங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு வெருவிஅங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர் பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன் சுவாமிஎன் றிறைஞ்சி நிற்க.

6. சிங்கம்நாம் அல்லால் வேருேர் சிங்கமும் கண்டாய் ஆகில்
அங்கதைக் காட்ட வாஎன் றழைத்தலும், அழைத்துப் போய்
பங்கமும் புனலும் சேர்ந்த பாழ்ந்துர வதனைக் காட்ட [ஓர்
அங்கதை எட்டிப் பார்க்க அதனில்தன் உருவம் தோன்ற;

7. தன்னுரு நிழலைத் தானே சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித் துளங்கியே செத்த தன்ருே?
மன்னிய பகையா ளுலும் மதியினல் வெல்ல லாகும்
என்னுமோர் அரியநீதி இக்கதை விளக்கு மன்றே.

—பஞ்சதந்திரம்

II. நீதிப் பகுதி

1. வாக்குண்டாம்

(ஔவையார்)

1. அடக்கம் உடையார் அறிவிலரேன் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா :—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

2. அட்டாலும் பால்சுவையில் குன்றாது ; அளவளவாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே ; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

3. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் ;—அக்குளத்தில்
கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

4. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

5. சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் :—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து,
மறைக்குமாம் கண்டீர் மரம்.

பொருள்

1. கடக்க - வெல்ல. மடைத் தலை - மடையின்கரையில். மடை - சிறு குளம். உறுமீன் - பெரிய மீன்.

2. சுடுதல் - காய்ச்சுதல். அளவளாய் - ஒன்றுபட்டு.

3. அற்ற - நீர்வற்றிய. நீர்ப்பறவை - அன்னம், கொக்கு முதலியன. உற்றுழி - துன்பம் வந்தபோது. ஒட்டி - அவர்க்குள்ளதே தனக்கும் என்றெண்ணி.

4. கானம் - காடு. அதுவாக - அதைப்போல.

5. சாந்தனையும் - சாகுமட்டும். ஆந்தனையும் - ஆகுமட்டும். தனை - மட்டும், வரை, அளவு என்னும் எல்லைப்பொருளில் வரும் சொல். கண்டீர் - முன்னிலை அசை. அசை - பொருள் இல்லாத சொல்.

2. நல்வழி

(ஔவையார்)

1. ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்;
இருநாளுக் கேலென்றால் ஏலாய்;—ஒருநாளும்
என்னோ வறியாய்; இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.

2. பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், பேருலகில்
உற்றார், உகந்தார் என வேண்டார்;—மற்றோர்,
இரணம் கொடுத்தால் இடுவர்; இடாரே
சரணம் கொடுத்தாலுந் தான்.

3. சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல்கடந்தும்,
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்—போவிப்போம்
பாழி னுடம்பை; வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்.

4. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்;—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகாள்! அந்தப் பணம்?

5. உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்;
எண்பது கோடி நினைந் தெண்ணுவன ;—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் காலம்போலச்
சாந்தனையும் சஞ்சலமே தான்.

பொருள்

1. ஏல் - ஏற்றுக்கொள், உண். நோ - துன்பம். இடும்பைகூர் - துன்பத்திற்குக் காரணமான. அரிது - முடியாது.

2. பெருநாட்டார் - நம் நாட்டினர். உகந்தார் - சினேகர். வேண்டார் - விரும்பாத உலோபிகள். மற்றோர் - பிறர். இரணம் - காயம்.

3. பாவித்தும் - பிறரைப்போல் பாவனை செய்தும். போவிப்போம் - காப்பாற்றுவோம். நாழி - படி.

4. புதைத்து வைத்தல் - பெட்டியிலிட்டுப் பூட்டி வைத்தல். கூடு - உடல். ஆவி - உயிர்.

5. கண்புதைந்த - அறிவில்லாத. சஞ்சலம் - துக்கம்.

3. நீதி வெண்பா

1. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்,
கற்பூரம் ஆமோ கடலுப்பு ?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம் ;
புண்ணியரா வாரோ புகல்.

2. பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே :—பொற்கொடியே,
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன் ?
ஒன்றமையா தோகரிக்கன் றோது ?

3. தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரேன் றெண்ணியே துன்னற்க:—சேயிழையே,
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை ? நாடு.

4. நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே :—நிந்தைமிகு
தாலநிழல் கீழிருந்தான் தன்பால் அருந்திடினும்
பாலதேனச் சொல்லுவரோ ? பார்.

5. வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறித லாகாதே :—காக்கையொடு,
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு.

பொருள்

1. பொற்பூஉரும் - நன்மை மிகுந்த. புகல் - சொல்.

2. பொற்கொடி - மகடூஉ முன்னிலை. அமையாதோ - அவற்றின் பயன் தராதோ.

3. துன்னற்க - நெருங்காதே. சேயிழை - மகடூமுன்னிலை. நண்ணுவரோ - பக்கத்தில் செல்வரோ.

4. நிந்தை - பழிப்பு. தாலம் - பனைமரம். கீழ் இருந்து ஆன்பால், ஆன் - பசு.

5. மற்றவர் - பிறர். ஆக்கை - உடம்பு. கோலம் - உருவம். அறிவருமோ - அறியலாமோ.

4. நீதி நெறி விளக்கம்

(குமர குருபரர்)

1. நீரிற் குமிழி இளமை ; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் ;—நீரில்
எழுத்தாகும் யாக்கை ; நமரங்காள் ! என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று ?

2. அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்,—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

3. முற்றும் உணர்ந்தவர் இல்லை; 'முழுவதுஉம்
கற்றனம்,' என்று களியற்க;—சிற்றுளியால்
கல்லும் தகரும்; தகரா, கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால்.

4. பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு;—பிறர்பிறர்
சீரெலாந் தூற்றிச், சிறுமை புறங்காத்து,
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

5. நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையும் ஐயுறல்,—தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி.

பொருள்

1. திரை - அலை. யாக்கை - உடம்பு. நமரங்காள் - நம்மவர்களே,

2. அவை - சபை. மெய் விதிர்த்தல் - உடல் நடுங்கல். ஆகுலம் - ஆரவாரம். நவை - குறைவு, பூத்தல் - உண்டாதல்.

3. தகரும் - தூளாகும். உலைக்கூடத்தில் சிற்றுளி தகரும் என்க. தகரா - தகரும்.

4. பெரும் சுட்டு - நன்மதிப்பு. யாண்டும் - எப்போதும். நோற்றல் - செய்தல். தூற்றி - எடுத்துக் கூறி. சிறுமை - குற்றம். புறங்காத்தல் - பிறரிடம் சொல்லாமை. தாழ்ச்சி - பணிவு.

5. பக்கத்தார் - மந்திரிகள். தக்கார் - பெரியோர்கள். நெடுமொழி - உறுதிச்சொல். இப்பாட்டு அரசர்க்கானது.

5. விவேக சிந்தாமணி

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்க்குலம் கண்டு சென்று
கோதிதிரைக் கடலிற் பெய்யும் கொள்கைபோற், குவலயத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினேர் முகத்தைப் பாரார்;
நிதிமிகப் படைத்தோர்க் கீவார் ; நிலையிலார்க் கீயமாட்டார். 1

தண்டாமரையின் உடன்பிறந்தும் தண்டேன்நுகரா மண்டூகம்,
வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்:
பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லோர்; நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றேரே. 2

சங்குவெண் டாமரைக்குத் தந்தைதாய் இரவிதண்ணீர்,
அங்கதைக் கொய்துவிட்டால் அழுகச்செய் தந்நீர்கொல்லும்;
துங்கவெண் கரையில் போட்டால் சூரியன் காய்ந்துகொல்வான்;
தங்களின் நிலைமை கெட்டால் இப்படித் தயங்குவாரே. 3

கருதியநூல் கல்லாதான் மூடனுகும்,
கணக்கறிந்து பேசாதான் கசடனுகும்,
ஒருதொழிலும் இல்லாதான் முகடியாகும்,
ஒன்றுக்கும் உதவாதான் சோம்பனுகும்,
பெரியோர்கள் முன்னின்று மரத்தைப்போலும்
பேசாமல் இருப்பவனே பேயனுகும்,
பரிவுசொலித் தழுவினவன் பசப்பனுகும்,
பசிப்பவருக் கிட்டுண்ணுன் பாவியாமே. 4

6. தண்டலையார் சதகம்

(செல்வத்தின் சிறப்பு)

பணந்தானே அறிவாகும்; பணந்தானே வித்தையுமாம்;
பரிந்து தேடும்,
பணந்தானே குணமாகும்; பணமில்லா தவர்பிணமாம்
பான்மை சேர்வர்;

பணந்தானே பேசுவிக்கும் ; தண்டலைநீள் நெறியாரே,
பார்மீ திற்றுன்,
'பணந்தானே பந்தியிலே ; குலந்தானே குப்பையிலே '
படுக்கும் தானே. —*படிக்காசுப் புலவர்*

7. அறப்பளீசுர சதகம்

(குறைவுற்றும் குணம் கெடாமை)

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்
சார்மணம் பழுதாகுமோ ?
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரங்குறையுமோ ?
நிறைபட்ட கதிர்மணி அழுக்கடைந் தாலுமதன்
நீள்குணம் மழுங்கிவிடுமோ ?
நெருப்பிடை யுருக்கினும், அடிக்கினும் தங்கத்தின்
நிறையும்,மாற்றும் குறையுமோ ?
கறைபட்ட பைம்புயல் மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ ?
கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனும்
காசினித னிற்போகுமோ ?
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே,
ஐயனே, அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. —*அம்பலவாணக் கவிராயர்*

8. குமரேசர் சதகம்

(நட்புநிலை)

கதிரவன் உதிப்பதெங் கே ?நளினம் எங்கே ?
களித்துள மலர்ந்த தென்ன ;
கார்மேகம் எங்கே ? பசுந்தோகை எங்கே ?
கருத்தில்நட் பான தென்ன ;

மதியமெங் கே ?பெருங் குமுதமெங் கே?முக
 மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன ;
வல்லிரவு விடிவதெங் கே ?கோழி எங்கே ?
 மகிழ்ந்துகூ விடுதல் என்ன ;
நிதியரசர் எங்கே யிருந்தாலும் அவர்களோடு
 நேசமோன் றுயிருக்கும்
நீதிமிகு நல்லோர்கள் எங்கிருந் தாலுமவர்
 நிறைபக்ஷம் மறவார்கள் காண் :
மதிலுடன் கோபுரமும், வாவியும் புடைசூழ
 மருவுசோ ணட்டதிபனே,
மயிலேறி விளையாடு குகனே,புல் வயல்நீடு
 மலைமேவு குமரேசனே. —குருபாத தாசர்

9. திருவேங்கட சதகம்

(இவர்க்கிவை வேண்டாமெனல்)

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
 பெரியோரை முனிதல்வேண்டாம் ;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
 பேர்கொண்டு திரிதல் வேண்டாம் ;
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
 ஒருநாளும் நம்ப வேண்டாம் ;
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
 ஊமைபோல் நிற்றல் வேண்டாம் ;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
 தான்போய் விலக்கவேண்டாம் ;
தைரியந் தனில்விக்கிர மாதித்த னென்னினும்
 தன்னையே புகழவேண்டாம் ;
மற்றென்றும் எண்ணாது செய்யவேண் டாம். என்பர்
 மணவாள நாராயணன்,
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே,
 வரதவேங் கடராயனே. —நாராயண பாரதி

10. கயிலாச நாதர் சதகம்

(வறுமைக் குணம்)

படியதனி லேநூல்கள் பலகற் றுணர்ந்தும்நற்
பண்பினுல் உயர்வு பெறினும்,
பரிபவம் தருகின்ற வறுமைகுடி கொண்டிடிற்
பதிதரேன வேமேலிகுவார் ;
மடிமைவிட் டொழியாது துயின்மிக விரும்புவார் ;
வாய்ச்சோலேங் குஞ்சோலாது ;
மங்கல மிழந்தமா தருமவ மதிப்பர்,பிறர்
மனேயினிற் செலவஞ் சுவார் ;
கோடியோ ரேனப்பெயர் தரிப்பர் ; மித மின்றியூண்
கோள்வர் ;எவ ரும்பகை செய்வார் :
கூரறிவு குன்றும் ;ஓர் காசுக்கும் நம்பாத
கோள்கைவறு மைக்குணங் காண் :
கடிகம ழிதழ்க்கோன்றை முடியிடை யணிந்தருள்செய்
கற்பக விராச மேவும்
கங்கைபுனே ஈசனே, மங்கைமகிழ் நேசனே,
கைலேயங் கிரிவாசனே.

சிதம்பரம் பிள்ளை

III. பல்சுவைப் பகுதி

1. தனிப் பாடல்கள்

1. மாடில்லான் வாழ்வும், மதியில்லான் வாணிபம்,நன்
ளுடில்லான் செங்கோல் நடாத்துவதும்,—கூடும்
குருவில்லா வித்தை, குணமில்லாப் பெண்டு,
விருந்தில்லா வீடும் விழல்.

2. வேழ முடைத்து மலைநாடு; மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

3. எரும் இரண்டுளதாய், இல்லத்தில் வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்,—ஊரருகே
சென்று வரவெளிதாய், செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது. —ஔவையார்

---

1. மேழி பிடிக்குங்கை, வேல்வேந்தர் நோக்குங்கை,
ஆழி தரித்தே அருளுங்கை,—சூழ்வினையை
நீக்குங்கை, என்றும் நிலைக்குங்கை, நீடூழி
காக்குங்கை காராளர் கை.

2. மன்னவனும் நீயோ? வளநாடு முன்னதோ?
உன்னையறிந் தோதமிழை ஓதினேன்?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?

3. காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ?—மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா! நீ முனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்? —கம்பர்

பொருள்: 1. விழல் - பயனற்றது.
2. பூழியர் - பாண்டியர், சான்றோர் - அறிஞர்கள்.
3. செய்வார் - வேலையாட்கள். இனிது - நல்லது.

பொருள்: 1. ஆழி - மோதிரம். காராளர் - வேளாளர்.
2. கொம்பு - மரக்கிளை. கம்பர் சோழநாட்டை விட்டு நீங்கும்போது சொன்னது.
3. இருபத்து நான்கு காதம் - சோழ நாட்டளவு, இப்பாட்டும் அப்போது சொல்லியதே.

2. பொதிய மலைச் சிறப்பு

சிங்கமும்வெங் களிறும்உடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும்அங் கொருபால்;
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்;
அங்கண்அமர் நிலம்கவிக்கும் வெண்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிஷேகவல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற்(று) எங்கள்மலை அம்மே!

—(மீனுக்ஷி அம்மை குறம் - குமரகுருபர சுவாமிகள்)

பொருள்

1. களிறு - யானை, ஒருபால் - ஒருபக்கம். பிணை - பெண்மான், மரை - ஒருவகை மான். விருந்தயரும் - ஒன்ருக விருந்துண்ணும். கவிகை - குடை. கும்பமுனி - அகத்தியர்.

3. திரிகூட மலைச் சிறப்பு

1. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;

2. தேன்அருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்.

3. கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்.

4. செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்.

5. வேவேர்கள் தினைவிதைக்கச் சாடுபுனம் தோறும்
விந்தைஅகில் குங்குமமும் சந்தனமும் நாறும்.

6. கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.

—(குற்றாலக் குறவஞ்சி - திரிகூட ராசப்ப கவிராயர்)

2. மந்தி - பெண் குரங்கு. கவி - குரங்கு, பரி - குதிரை, கால் - சக்கரம். வழுகும் - வழுக்கும், கிம்புரி - யானை. கூனல் இளம்பிறை - வளைந்த பிறைச்சந்திரன்.

4. மழை

மேகமெல்லாம் ஒன்றாய்க்கூடித் தான்கறுக்குதே—மெத்த
மின்னல்மின்னி வாசவன்கை வில்லெடுக்குதே.
நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே—கொண்டல்
நாலுதிக்கும் கோடைஇடி தானிடிக்குதே.
ஏகபோக மாமரத்தில் குயில்கள் கூவுதே—மழைக்(கு)
ஏற்றமாம் சோறித்தவளை கூப்பிடுகுதே.
ஆகையினால் எங்கள்திருக் கூடல்நகரில்
அந்திநேரம் எல்லாம்மழை வந்து பெய்யுமே.

—அழகர் பள்ளு

பொருள்

வாசவன் - இந்திரன், கொண்டல் - கீழ்காற்று.

5. குற்றாலக் குறவஞ்சி

சிங்கனுக்கும் சிங்கிக்கும் வாக்குவாதம்

இராகம்—தன்யாசி—ஆதி தாளம்

கண்ணிகள்

சிங்கன் : இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய் சிங்கி! எங்கே

சிங்கி: கோத்தார் குழலார்க்கு விஸ்தாரமாகவே
குறிசொல்லப் போனேனடா சிங்கா! குறிசொல்

சிங்கன் : பார்க்கிலதிசயந் தோணுது சொல்லப்
பயமா யிருக்குதடி சிங்கி ! பயமா

சிங்கி : ஆர்க்குப்பயமினித் தோணின காரியம்
அஞ்சாமல் சொல்லடா சிங்கா ! அஞ்சாமல்

சிங்கன் : காலுக்குமேலே பெரியவிரியன்
கடித்து கிடப்பானேன் சிங்கி ! கடித்து

சிங்கி : சேலத்துநாட்டிற் குறிசொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா ! சிலம்பு

சிங்கன் : சேலத்தா ரிட்ட சிலம்பிற்கு மேலே
திருகுமுறுக் கென்னடி சிங்கி ! திருகுமு

சிங்கி : கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை
கோடுத்த வரிசையடா சிங்கா ! கோடுத்த

சிங்கன் : நீண்டும்குறுகியும் நாங்கூழ்ப்போல
நெளிந்தநெளி வென்னடி சிங்கி ! நெளிந்

சிங்கி : பாண்டிய னூர் மகள் வேண்டுங்குறிக்காக
பாடக மிட்டதடா சிங்கா ! பாடக

சிங்கன் : மாண்ட தவளையுன் காலிலேகட்டிய
மார்க்கம தேதடி சிங்கி ! மார்க்கம்

சிங்கி : ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப்பெண்கள்
அணிமணிக் கெச்சமடா சிங்கா ! அணிமணி

சிங்கன் : சுண்டுவிரல்தோறும் குடவளைப்பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி ! சுருண்டு

சிங்கி : கண்டியாம் தேசத்திற் பண்டுநான் பெற்றது
காலாழி பீலியடா சிங்கா காலாழி

—மேலகரம் திருகூட இராசப்ப கவிராயர்